
வாராந்த சஞ்சிகை

டிசம்பர் 03 - 09 2014

# சுடர் ஒளி

பக்கம் 24

விலை 30/-



December - 2014 - January

# போர்க்களப் புயல்




உபஹார

வாழ்வாதாரமளிக்கும் - உற்சாகமூட்டும் - நிம்மதியான வாழ்க்கை

| | | |
|---|---|---|
| ரூபா ஒரு மில்லியன் வரையிலான கடனுதவி.* | உத்தரவாதமளிப்பவர்கள் தேவையில்லை. | ஆகக்குறைந்த வட்டி. |
| ஆகக்குறைந்த தவணைக் கட்டணம். | மரணத்தின்போது தங்கி வாழ்பவருக்கு நட்டயீடு கொடுப்பனவு.* | வங்கியொன்றினால் வழங்கப்படும் அதிகூடிய ஓய்வுக் கடன்.* |

*நிபந்தனைகளுக்குட்பட்டது.

ஓய்வூதியம் பெறுவோரான உங்களது வருத்திக்காக வேண்டி ஆகக்குறைந்த வட்டி வீதத்துடன் உங்களுக்கு பெற்றுத்தரப்படும் மாபெரும் வெகுமதி.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்

0112 832577

இலங்கை ஓய்வு

Sri Lanka Pensions

ஓய்வூதியத் திணைக்களம்

SDBL

சணச அபிவிருத்தி வங்கி

தேசத்தின் முன்னோடி

B 62PQ Fitch rating BB+(lka)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சானியாவின் பாய்ச்சல்

"நான் விளையாடும் போதெல்லாம் என்னைப் பற்றி முட்டாள்தனமாக எழுதுகின்ற ஊடகங்கள் நான் விளையாடாத சமயங்களில் என்னை விட்டு விடுகிறார்கள்" என்று புலம்ப ஆரம்பித்து விட்டார் ரென்னிஸ் வீராங்கனை சானியா மிர்ஸா.

பொதுவாக விளையாட்டு வீரர்கள் போட்டிகளில் கலந்து கொள்கின்ற போதுதான் ஊடகங்களும் அவர்களை போற்றுவோ அல்லது தூற்றவோ செய்கின்றன. ஆயினும் அவர்கள் போட்டிகளில் கலந்து கொள்ளாத காலங்களில் அவர்களை ஊடகங்கள் கண்டு கொள்ளாமை என்பது வழமையான ஒன்று தான்.

விளையாட்டு வீரர்கள் தமது ஓய்வான நேரங்களில் தான் பத்திரிகைகளைப் படிக்கின்றார்கள். ஆனால் அந்தக் காலங்களில் இவர்கள் பற்றிய செய்திகளும் வருவது குறைவு. இதையறியாத சானியா ஊடகங்கள் மீது கடுமையாகப் பாய்ந்துள்ளார்.

"நான் விளையாடாத சமயங்களில் செய்தித்தாள்களை அதிகம் படிப்பேன். அப்போது என்னைப் பற்றிய முட்டாள்தனமான செய்திகள், வதந்திகள் எதுவும் அதில் இருக்காது. நான் விளையாடாத போது மட்டும் என்னைப் பற்றி புறணி பேசுவதில்லை. ஊடகங்களில் என்னை விமர்சிப்பவர்கள், வாழ்க்கையில் ஒரு நாளாவது ரென்னிஸ் மட்டையோ அல்லது கிரிக்கெட் துடுப்பையோ தூக்கிப் பார்த்திருக்கக்கூட மாட்டார்கள் என்றே கருதுகிறேன். ஆனாலும் என்னைப் பற்றி அவர்கள் அப்படி எழுதுகிறார்கள், விமர்சிக்கிறார்கள்" என அண்மையில் ஹைதராபாத்தில் நடந்த இளம் இந்தியர்களுக்கான மாநாட்டில் கலந்து கொண்ட போது ஊடகவியலாளர்களை திட்டித்தீர்த்துள்ளார் சானியா.

# விருந்து படைக்கும் நடுவர்கள்

தொகுப்பு : கோகுலன்



ஆடவர்களுக்கான விளையாட்டு போட்டிகளில் பெண்கள் நடுவர்களாக களமிறங்கினால் அவர்கள் அணியும் உடைகளால் வீரர்கள் மத்தியில் கவனச்சிதறல்கள் ஏற்படுகின்றது. இதனால் போட்டிகள் விறுவிறுப்பற்று போகின்றது. இந்த நிலையில் உதைபந்து போட்டிகளில் இத்தாலியின் பிரபல விளம்பர அழகி கிளாடியா ரொமானி (வயது 32) நடுவராக களமிறங்க இருப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆண்கள் விளையாடும் உதைபந்துப் போட்டிகளில் முதன் முறையாக பெண் நடுவராகக் களமிறங்கிய பெருமை, ஜெர்மனியின் பிபியானா ஸ்டெயின்ஹாசிக்கே (வயது 35) உண்டு.

ஆனாலும் சமீபத்தில் பேயர்ன் முனிக், மான்சென்கிளாட்பேக் அணிகள் மோதிய போட்டியில் கோல் எதுவுமின்றி ஆட்டம் சமநிலையில் முடிவடைந்திருந்தது.

அப்போது கூடுதல் நேரம் வழங்குவதில் நடுவர் பிபியானாவுடன் மோதலில் ஈடுபட்டார் பேயர்ன் அணி முகாமையாளர் குவார்டியலோ. பெண் தானே என்ற ஏளனத்தில், பிபியானோ கையைப் பிடித்து வளைத்து, தள்ளியதால் சில காலம் பெரும் பரபரப்பு ஏற்பட்டிருந்தது. அத்தோடு பிபியானா அணியும் உடைகளாலும் வீரர்களுக்கு கவனச்சிதறல் ஏற்படுவதாக பெரும் சர்ச்சை வெடித்திருந்தது.

இப்படிப்பட்ட நிலையில், இத்தாலியின் முன்னாள் விளம்பர அழகி கிளாடியா ரொமானி, உதைபந்துக் களத்தில் நடுவராக களமிறங்க காத்திருக்கிறார். இதற்கான அனைத்து பயிற்சிகளிலும் தேர்வாகியுள்ள இவர், விரைவில், இத்தாலியில் நடக்கும் சீரீஸ் ஏ , பி பிரிவு போட்டிகளில் முதன் முறையாக களமிறங்க உள்ளார்.

வீரர்களுக்கு பெண் நடுவர்களால் சிக்கல் தோன்றினாலும் ரசிகர்களுக்கு விருந்துதான்.

# சச்சினுக்கு அஞ்சலி?



முழு கிரிக்கெட் உலகையுமே சோகத்தில் ஆழ்த்திய பவுன்சர் பந்து தாக்கி உயிரிழந்த ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் பிலிப் ஹியூக்ஸின் மறைவுக்கு சமுக வலைத்தளங்களில் அஞ்சலி செலுத்திய பிரபலங்களின் குறிப்புக்களை செய்தியாக்கிய ஆங்கில நாளிதழ் ஒன்று, பிலிப் ஹியூக்ஸுக்கு பதிலாக சச்சின் டெண்டுல்கர் ஆத்மா சாந்தியடைய்ட்டும் என்று பதிவு செய்து ரசிகர்களிடம் வாங்கிக்கட்டிக் கொண்டுள்ளது.

சச்சின் டெண்டுல்கரின் டுவிட்டை மேற்கோள் காட்டி இந்த ஆங்கில நாளேடு செய்தி வெளியிட்டிருந்தது. அந்தச் செய்தியில் "பிலிப் குறித்து கேள்விப்பட்டு அதிர்ச்சியடைந்தேன். கிரிக்கெட்டின் சோக நாள். அவரது குடும்பத்தாருக்கும், நண்பர்களுக்கும், நலம் விரும்பிகளுக்கும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். சச்சின் டெண்டுல்கரின் ஆன்மா சாந்தியடையட்டும் (RIP Sachin Tendulkar)" என்று அந்தப் பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது. அதாவது பிலிப் ஹியூக்ஸின் ஆத்மா சாந்தியடையட்டும் என்று சச்சின் தனது டுவிட்டர் செய்தியின் கடைசி வரியில் கூறியதை, மாற்றி அவரது பெயரையே போட்டுவிட்டது நாளிதழ்.

இதனால் சிக்கலில் சிக்கியுள்ள இந்த நாளிதழை சச்சின் ரசிகர்கள் இந்த நூற்றாண்டின் மிகப்பெரிய தவறு என்று வர்ணித்து வலைத்தளங்களில் விமர்சித்து வருகிறார்கள்.

ரென்னிஸ் வீராங்கனை இவானோ விச்சுக்கும் உதைபந்து வீரர் ஸ்கீவன்ஸ்டீகருக்கும் இடையிலான காதல் மீண்டும் துளிர் விட்டுள்ளது. இதனால் இருவரின் ரசிகர்களும் பெரும் குதூகலத்தில் ஆழ்ந்துள்ளனர்.

செர்பியாவின் ரென்னிஸ் வீராங்கனை இவானோவிச் (வயது 27) கடந்த 2008 ஆம் ஆண்டில் பிரெஞ்ச் பகிரங்க கிராண்ட்ஸ்லாம் தொடரை வென்றிருந்தார். இது தவிர 2007 இல் விம்பிள்டன் அரையிறுதி, 2008இல் ஆஸ்திரேலிய பகிரங்க இறுதி 2012 யு.எஸ். பகிரங்க காலிறுதிக்கு முன்னேறியது தான் இவரது அதிகபட்ச சாதனை.



ஆனாலும் தரவரிசைப் பட்டியலில் இவானோவிச் முதலிடத்தையும் பெற்றிருந்தார். இந்த நிலையில் தான் சமீபத்தில் உலகக் கிண்ணத்தை வென்ற ஜெர்மனி உதைபந்து அணி வீரர் ஸ்கீவன்ஸ் டீகருக்கும் இவானோவிச்சுக்கும் இடையே காதல் மலர்ந்தது. இருப்பினும் இருவருக்கும் இடையில் ஏற்பட்ட மனக் கசப்பினால் இந்தக் காதல் சில மாதங்களிலேயே முறிவடைந்தது. பின்னர் ஸ்கீவன்ஸ்டீகர் முன்னாள் காதலி சாராவிடம், மீண்டும் சரண் அடைந்தார்.

ஆனாலும் இந்தப் பிரிவு நீண்ட நாள்களுக்கு தொடரவில்லை. கடந்த 6 ஆம் திகதி இவானோவிச்சுக்கு 27ஆவது பிறந்தநாள். இவானோவை அன்று இரவு நேரில் சென்று வாழ்த்தியுள்ளார் ஸ்கீவன்ஸ்டீகர். இந்தச் சந்திப்பின் மூலம் பட்டுப்போன இவானோவிச்சின் காதல் மீண்டும் துளிர்விட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலை மாணவியைக் கொன்ற காமுகன்




**- புலனாய்வி**



**(கடந்த வாரத் தொடர்ச்சி)**

இந்த நிலையில் மாத்தளை பகுதியில் பல்வேறு குற்றங்கள் தொடர்பிலும் தேடப்படும் சந்தேக நபர்களை கைது செய்த புலனாய்வுப் பிரிவு அவர்களின் டீ.என்.ஏ. உடன் ஒப்பிட்டு சந்தேக நபரைத் தேடியது. இதற்கு மாத்தளைப் பொலிஸாரின் ஒத்துழைப்பும் பெற்றுக்கொள்ளப்பட்டது. இந்த நிலையில் தான் மாத்தளை நகரில் இரவு நேர வீட்டுத் திருட்டுக்கள் தொடர்பிலான சந்தேக நபர் ஒருவரின் டீ.என்.ஏ. புலனாய்வுப் பிரிவினர் தேடும் கொலையாளியின் டீ.என்.ஏ. யுடன் ஒத்துப் போவது தெரிய வந்தது. எனினும் அப்போது அந்த திருடன் கைது செய்யப்பட்டிருக்கவில்லை. குறித்த திருடன் வீடொன்றில் திருடிய போது பயன்படுத்திய பொருள்களின் கழிவுகளில் இருந்தே அவனின் டீ.என்.ஏ. பெற்றுக்கொள்ளப்பட்டு பரிசோதனை செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் நதீசாவின் கொலைச் சந்தேக நபர் ஒரு திருடன் என்ற அடையாளத்தை புலனாய்வுப் பிரிவினர் பெற்றுக்கொண்டனர். எனினும் அவன் கைது செய்யப்பட்டிருக்கவில்லை. எனினும் பூட்டப்பட்ட வீட்டுக்குள் எப்படித் திருடன் நுழைய முடியும் என்ற கேள்வி எழவே வீட்டாரை மீண்டும் தனித்தனியாக புலனாய்வுப் பிரிவினர் விசாரித்தனர். அப்போது ஒவ்வொருவரும் ஒவ்வொரு சந்தார்ப் பத்தில் கதவைத் திறந்து வெளித் தேவைகளுக்கு சென்றுள்ளமை தெரிய வந்தது. திருடன் வீட்டினுள் ஏற்கனவே ஒளிந்திருந்திருக்க வேண்டும் அல்லது கதவு சரியாக பூட்டப்படாமல் இருந்திருக்க வேண்டும் என்ற அனுமானத்துக்கு புலனாய்வுப் பிரிவினர் வந்தனர்.

இந்தநிலையில் மாத்தளை நகரில் வீடு புகுந்து திருடுபவர்கள் தொடர்பில் பாரிய தேடல் ஒன்றினை புலனாய்வுப் பிரிவினர் மாத்தளை பொலிஸாருடன் இணைந்து மேற்கொண்டனர். அவ்வாறான குற்றங்களில் ஈடுபட்டவர்கள் ஒவ்வொருவராக பொலிஸ் பொறுப்பில் எடுக்கப்படும் போது அவர்கள் மன்றில் ஆஜர்படுத்தப்பட்டு மன்றின் அனுமதியுடன் இரத்த மாதிரி பெறப்பட்டு டீ.என்.ஏ. பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. இவ்வாறு 15 பேரின் டீ.என்.ஏ. பெறப்பட்ட போதும் அதில் பயனில்லை.

**டென்சில் ஜயவர்த்தன**

இந்த நிலையில்தான் நதீசாவின் வீட்டிலிருந்து 300 மீற்றர் தொலைவில் வசிக்கும் டென்சில் ஜயவர்தன புலனாய்வுப் பிரிவினரின் விசாரணைகளுக்கு உட்படுத்தப்படுகின்றார். 31 வயதான அவர் இரு பிள்ளைகளின் தந்தையாவார். கூலி வேலை செய்யும் அவர் இரவு நேரங்களில் திருட்டுக்களில் ஈடுபடுவார். வீடுடைப்பு சம்பவம் ஒன்றில் ஈடுபட்டு அவர் பொலிஸாரிடம் சிக்கியிருந்த நிலையிலேயே புலனாய்வுப் பிரிவினரின் விசாரணைகளுக்கு உள்ளாகின்றார். புலனாய்வுப் பிரிவு விசாரணைகளில், தான் நதீசா கொலை செய்யப்பட்ட தினம் எலவொர பிரதேசத்துக்கு சென்றிருந்ததாக டென்சில் குறிப்பிட்டுள்ளார். டென்சில் சென்றதாக கூறிய இடங்களில் குறித்த தினம் அவர் இருந்தாரா எனத் தேடிய புலனாய்வுப் பிரிவு டென்சில் சொன்னது பொய் என உறுதி செய்து கொண்டது.

இந்த நிலையில் டென்சில் முன்னுக்கு பின் முரணான தகவல்களை கூறுவது புலனாய்வுப் பிரிவினரின் அவதானத்துக்கு உட்பட்டது. ஏனெனில் ஏற்கனவே புலனாய்வுப் பிரிவினரால் விசாரிக்கப்பட்ட 15 திருடர்களிலும் இப்படி முன் னுக்கு பின் முரணாக கதைக்க வில்லை. அதனாலோ என்னவோ டென்சில் எதையோ மறைக்க முற்படுவதாக புலனாய்வுப் பிரிவு சந்தேகித்தது. உடனடியாக டென்சிலின் இரத்த மாதிரி பொரளை ஜீன் டெக் நிறுவனத்துக்கு டீ.என்.ஏ. பரிசோதனைக்கு அனுப்பப்பட்டது.

> **“ புலனாய்வுப் பிரிவினரால் விசாரிக்கப்பட்ட 15 திருடர்களி லும் இப்படி முன்னுக்கு பின் முரணாக கதைக்கவில்லை. அதனாலே என் னவோ டென்சில் எதையோ மறைக்க முற்படு வதாக புலனாய்வு பிரிவு சந்தே கித் தது. உடனடியாக டென் சிலின் இரத்த மாதிரி பொரளை ஜீன் டெக் நிறு வனத்துக்கு டீ.என்.ஏ. பரி சோதனைக்கு அனுப்பப்பட்டது. ”**

டீ.என்.ஏ. அறிக்கை கிடைக் கும் வரை புல னாய்வுப் பிரிவினர் டென்சிலுக்கு தெரியாமலேயே அவரைப் பின் தொடர்ந்து தகவல் சேகரிக்கலாயினர். இதன்போது, டென்சில் ஹோகந்தர பிரதேசத்தை சேர்ந்தவர் என்பதும் அவர் மகரகம, ஹோமாகம, மிரிஹான பொலிஸ் நிலையங்களால் வீடுடைப்பு தொடர்பில் கைது செய்யப்பட்டு சிறைத்தண்டனை அனுபவித்தவர் என்பதும் தெரியவந்தது. தொடர்ந்தும் புலனாய்வுப் பிரிவினர் தேடியதில் சிறைவாசத்தின் பின்னரேயே டென்சில் மாத்தளையில் வசித்து வருகின்றமையும் அது பொலிஸாரின் கண்களில் இருந்து மறைந்து வாழ்வதற்கே என்பதும் தெரிய வந்தது. அத்துடன் மஹரகம, ஹோமாகம, மிரிஹான பொலிஸ் நிலைய தரவுகளை திரட்டிய புலனாய்வு அதிகாரிகள் டென்சில் வீடுடைப்பு மட்டுமன்றி பெண்களின் ஆடை திருட்டு, பெண் மோகம் ஆகியனவும் கொண்டவர் என்பதை அறிந்து கொண்டனர். இந்த நிலையில் பொரளை ஜீன் டெக் நிறுவனத்திலிருந்து டென்சிலின் டீ.என்.ஏ. அறிக்கை புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப் பெறுகின்றது. அது நதீசாவின் கொலை விசாரணைகளுக்காக புலனாய்வுப் பிரிவினர் பெற்றுக்கொண்ட 16ஆவது டீ.என்.ஏ. அறிக்கை.

ஏற்கனவே டென்சிலை சந்தேகத்தில் பின் தொடர்ந்த புலனாய்வுப் பிரிவினர் டீ.என்.ஏ. ஒத்துப்போவதால் கைது செய்வது என முடிவு செய்தனர்.

அது கடந்த ஒன்பதாம் திகதி ஞாயிற்றுக்கிழமை. மாலைப்பொழுதில் வழக்கம்போல டென்சில் போதையில் தள்ளாடிய வண்ணம் வராப்பிட்டியவில் தனது வீடு நோக்கிச்சென்று கொண்டிருந்தார். அவர் வரும்வரை காத்திருந்த புலனாய்வுப் பிரிவின் விசேட குழு வராப்பிட்டியவை அண்மித்த பகுதியில் டென்சிலை வழிமறித்தது.

சேர். ஏன் என்னை வழிமறிக்கின்றீர்கள்? நான் என்ன செய்தேன் என புலனாய்வுப்பிரிவினரிடம் டென்சில் அப்பாவியாக கேட்டான்.

வராப்பிட்டிய நதீசாவை கொலை செய்த நாளில் எங்கிருந்தாய் எனப் புலனாய்வுப்பிரிவினர் கேட்டனர்.

**(வளரும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளும் சிறுவர் போராளிகளும்



**நியூசிலாந்தில் வாழும் ஈழத்தமிழர்களில் ஒருவர். கணினித்துறையில் பயிற்சி பெற்றவர். நோர்வே அனுசரணையுடன் வந்த போர் நிறுத்த ஒப்பந்த காலத்தில் வன்னியில் உருவாக்கப்பட்ட வடகிழக்கு மனித உரிமைச் செயலத்தில் தொண்டரடிப்படையில் பணியாற்ற வன்னிக்குச் சென்றார். இறுதி போர் வரை முள்ளிவாய்க்காலில் இருந்து ஐசிஆர்சி கப்பலில் வெளியேறி மெனிக் பாம்முகாமில் அடைக்கப்படும் வரை ஈழத்தில் இருந்தார். இவர் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்த மலரவன் என்னும் மாவீரரின் "போர் உலா" என்னும் நூலை பென்குவின் பதிப்பகம் மே 2013ல் வெளியிட்டுள்ளது.**

- ந. மாலதி

தமிழ்ச்செல்வன் இந்தக்கொள்கையில் உறுதியாக இருந்தார். இந்தக்கொள்கையிலிருந்து விலகிய சந்தர்ப்பங்களை அவருக்கு தெரிவிக்க எனக்கு பல வழிகள் இருந்தன. விடுவிக்கப்பட வேண்டியவர்களினதும், புதிதாகச் சேர்க்கப்பட்ட சிறுவர்களினதும் புள்ளிவிபரங்களை அவரிடம் தொடர்ச்சியாகக் கொடுத்து வந்தேன். புதுப்பிக்கப்பட்ட இத்தகைய புள்ளிவிபரங்கள் இதற்குமுன் அவருக்குத் தொடர்ச்சியாகக் கொடுக்கப்படவில்லை. அவர் கொள்கையைத் தீவிரமாக நடைமுறைப்படுத்துவதற்கு இதுவும் உதவியது. அடிக்கடி சம்பந்தப்பட்டோரைக் கூட்டி இந்தக்கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் இருந்த தாமதத்தைப்பற்றிய தன் அதிருப்தியை அவர் வெளியிட்டு வந்தார். 17 வயதுக்கு குறைவானவர்கள் அமைப்பில் இணைக்கப்பட்டால், அவர்களின் குடும்பங்கள் முன்வந்து தம்மிடம் முறையிடும்படி சிறுவர் பாதுகாப்பு ஆணையம் ஈழநாதம் பத்திரிகையின் முன்பக்கத்தில் பெரிய அறிக்கையை வெளியிட்டது. இது மக்களுக்குப் பரவலாகத் தெரிய வந்தது. சிறுவர் போராளிகள் சார்ந்த விடுதலைப்புலிகளின் கலாசாரமும் கொஞ்சம் கொஞ்சமாக மாறத்தொடங்கியது. தம் அமைப்பு பல சமூக வேலைகளையும் செய்வதால் 17 வயதானோரை இணைப்பதற்குத் தமக்கு உரிமை உண்டென்ற ஒரு நிலைப்பாட்டை விடுதலைப்புலிகள் எடுக்க முயற்சித்தார்கள். ஆனால் சர்வதேசத்தின் கடுமையான நிலைப்பாட்டால் 2004ஆம் ஆண்டு ஆரம்பத்தில் இணைப்போரின் வயதை 18 ஆகவே மாற்றினார்கள்.

இந்தத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் பல யதார்த்தமான தடங்கல்கள் ஏற்பட்டன. ஆனால் யுனிசெப்பும் சர்வதேச ஊடகங்களும் இந்த உண்மைகளையும் அமைப்பினுள் நடந்தேறிக் கொண்டிருந்த தீவிரமான வேலைத்திட்டங்களையும் புறந்தள்ளிவிட்டு விடுதலைப்புலிகள் சிறுவர்களை இணைக்கிறார்கள் என்று தொடர்ச்சியாகப் பரப்புரை செய்தன. விடுதலைப்புலிகள் முன்னர் கொடுத்த வாக்கைக் காப்பாற்றவில்லை என்பதே தம் போக்கின் கடுமைக்குக் காரணம் என்று அவர்கள் சொன்னார்கள். அத்தகைய வாக்கு தாம் கொடுக்கவில்லை என்பது விடுதலைப்புலிகளின் வாதமாக இருந்தது.

அமைப்பினுள் சிறுவர் போராளிகளை இணைப்பதில்லை என்ற கொள்கையை நடைமுறைப்படுத்த இரண்டு வகையான வேலைத்திட்டங்கள் தேவைப்பட்டன. ஒன்று சிறுவர்களை புதிதாக இணைப்பதை நிறுத்துவது. மற்றது ஏற்கனவே இணைக்கப்பட்டோரை விடுவிப்பது. புதிதாக இணைப்பதை நிறுத்துவதற்குத் தான் பொறுப்பு என்று தமிழ்ச்செல்வன் எனக்குச் சொன்னார். இதில் அவர் முழுவெற்றியும் கண்டார். இதை முழுமையாகச் செய்து முடிக்க அலன் ரெக்கின் வருகைக்குப் பின்னும் சில மாதங்கள் எடுத்தன. அமைப்பில் இருந்த சிறுவர்களை விடுவிக்கும் செயற்பாடுகளைச் செய்து முடிப்பதற்கு மேலும் சிறிது காலமும் களங்களும் தேவைப்பட்டன. விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த வன்னியிலேயே முதலில் இதற்கு வெற்றி கிட்டியது.

விடுதலைப்புலிகள் அமைப்பிலிருக்கும் சிறுவர் போராளிகள் பற்றிய பட்டியலில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த மிகவும் வயது குறைந்த பல சிறுவர்களின் பெயர்கள் இருந்தன. அவர்களை இறுதியில் செஞ்சோலை, அறிவுச்சோலை என்ற இரண்டு சிறுவர் இல்லங்களில் கண்டுபிடித்தோம். 2004 ஆம் ஆண்டு சுனாமியைத் தொடர்ந்து மட்டக்களப்பில் செஞ்சோலை சிறுவர் இல்லத்தின் கிளை ஆரம்பிக்கப்பட்டது. இந்த இரு மாவட்டங்களிலும் பராமரிப்புக் கிடைக்காத சிறுவர்களை விடுதலைப்புலிகள் செஞ்சோலைக் கிளையில் இணைத்தார்கள். பின்னர் விடுதலைப்புலிகள் மட்டக்களப்பைக் கைவிட்டபோது குறித்தசிறுவர்கள் வன்னிச் செஞ்சோலைக்கு மாற்றப்பட்டார்கள். இந்தச் சிறுவர்களை அவர்களின் பெற்றோரிடம் இணைக்கும்வரை தம் சிறுவர் போராளிகள் பட்டியலிலிருந்து நீக்குவதற்கு யுனிசெப் அமைப்பு மறுத்தது. ஆனால் யுனிசெப் அமைப்பாலோ அல்லது செஞ்சிலுவைச் சங்கத்தாலோ அந்தச்சிறுவர்களை அவர்களின் பெற்றோருடன் இணைக்க முடியவில்லை.

சுனாமி அழிவுக்குப் பின் சில குடும்பங்கள் என்ன ஆனார்கள் என்று தெரியவில்லை. குடும்பங்களால் கண்டுபிடிக்கப்பட்ட சிறுவர்களைக்கூட கிழக்குக்கு அழைத்துச் செல்ல அரசு அனுமதி கொடுக்கவில்லை. இதனால் விடுதலைப்புலிகளின் கடும் முயற்சிக்குப் பின்னரும் கூட யுனிசெப்பின் பட்டியலின்படி விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்த மிகவும் வயது குறைந்த சிறுமிக்கு 7 வயது. இவரை செஞ்சோலை சிறுவர் இல்லத்தில் எனக்கு நன்றாகவே தெரியும். 2007 இல் ஆண்டில் கூடச் சர்வதேச ஊடகங்கள் யுனிசெப்பின் கூற்றாக இந்த அரிய உண்மையை வெளியிட்டன. இதுபற்றி இலங்கைக்கான யுனிசெப்பின் தலைவருக்கு நான் எதிர்ப்பு தெரிவித்த பின்னர் அந்தக்கேள்வியை ஊடகங்கள் கேட்கும் போது தங்களால் வேறு பதில் கொடுக்க முடியாது என்றார். இந்த உண்மையின் பின்னணி யுனிசெப்புக்கு நன்றாகத் தெரிந்திருந்தும் இந்தக்கவர்ச்சியான செய்தியை வெளியிடுவதை தடுக்க அவர்களால் முடியவில்லை.



இதுபோலவே இன்னும் பல பொய்யான சர்வதேச ஊடகச் செய்திகள், சிறுவர் போராளிகள் பற்றிய ஒருபக்கச் சார்பான ஆரோக்கியமற்ற கவர்ச்சியை, மக்களை ஈர்த்துத் திசைதிருப்பும் தன்மையை தெளிவாக எடுத்துக்காட்டின. அவற்றில் சிலவற்றைச் சொல்வது இங்கு பொருத்தமானது. மூளை வளர்ச்சி குன்றிய 9 வயதுச் சிறுமி ஒருத்தி தன் வீட்டில் துன்புறுத்தப்பட்டிருக்கிறாள். அவள் சென்ற பாடசாலையின் ஆசிரியர்கள் இந்தப்பிரச்சினையை அவதானித்தனர். ஒருநாள் இரவு குறித்த சிறுமி வீடு திரும்பாமல் தனது வகுப்பறையிலேயே தங்கிவிட்டாள். அந்தப்பிரதேசத்தின் விடுதலைப்புலிகள் பொறுப்பாளர் சிறுமியை சிறுவர் இல்லத்தில் தங்க வைத்தார். சிறுமியின் பின்னணி எதையும் விசாரிக்காமல் அவளும் யுனிசெப்பின் சிறுவர் போராளி பட்டியலில் இணைக்கப்பட்டாள். இந்தச்சிறுமிக்குப் பாதுகாப்பான குடும்பச் சூழல் இல்லாததால் இறுதி வரையும் சிறுவர் இல்லத்திலேயே அவள் பராமரிக்கப்பட்டாள். எமது கடும் முயற்சியின் பின்னரே குறித்த சிறுமியை யுனிசெப்பினர் தமது பட்டியலில் இருந்து நீக்கினர்.

விடுதலைப்புலிகளின் நிதித்துறைப் பிரிவில் ஒரு 17 வயது வாகன ஓட்டுநர் பணியாற்றினார். இவர் 2007 ஆம் ஆண்டில் இலங்கை இராணுவத்தின் ஒரு கிளைமோர் தாக்குதலில் கொல்லப்பட்டார். இவ்வரை கொல்லப்பட்ட சிறுவர் போராளி என்று யுனிசெப் அறிக்கை விட்டது. சாவுக்குப் பின் அவரின் குடும்பத்தை நான் சென்று சந்தித்தேன். குடும்பத்தில் இவரே மூத்த பிள்ளை. தாயுடன் பல தம்பி தங்கைகளையும் கொண்ட அந்தக்குடும்பத்துக்கு வருமானம் ஈட்டும் ஒரே நபர். அவரின் குடும்பத்துக்கு விடுதலைப்புலிகளிடமிருந்து தொடர்ந்து கொடுப்பனவு செல்வதற்காக என்றே அவரைப் பணியிலிருக்கும் போது கொல்லப்பட்ட ஒரு துணைப்படை வீரர் என்று அறிவித்தனர். இந்த அறிவிப்பை மட்டும் வைத்துக்கொண்டு இதன் பின்னணியை அறியாமல்- அறிய விரும்பாமல்- யுனிசெப் அவரை கொல்லப்பட்ட ஒரு சிறுவர் போராளி என்றே அறிக்கை விட்டனர். இதுபற்றிய ஒரு விரிவான அறிக்கையை சமாதானச் செயலத்தின் இணையத்தில் நாங்கள் வெளியிட்டோம்.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்புகளின் கும்மாளம்

ஆசாத்

> அரசாங்கத்தை விட்டு வெளியேறியவர்கள் தொடர்பில் தன்னிடம் கோப்புகள் உண்டு என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளமையை நாம் சாதாரணமாக எடுத்து விட முடியாது. அதாவது அவர்கள் முறை கேடாக நடக்கின்றனர் என்பதை ஜனாதிபதி நன்கு தெரிந்தே வைத்திருக்கிறார்.

அண்மையில் பொலன்னறுவையில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் உரை யாற்றிய ஜானதிபதி ராஜபக்ஷ எனது அரசாங் கத்தை விட்டு வெளியேறிய வர்கள் பற்றிய தகவல்கள் கொண்ட கோப்பு கள் என்னிடம் இருக்கின்றன. ஆனால் அவற்றை நான் பாவிக்கப் போவ தில்லை' என்று தெரிவித்தி ருந்தார். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அவரை எதிர்த்துப் போட்டியிட்ட முன் னாள் இராணுவத் தளபதி சரத்பொன் சேகா வுக்கு எதிராக எவ்வாறு கோப்பு கள் உருவாகி அவரைச் சிறைக்கு அனுப்பின என்பதை அனைவரும் அறிவர். அதே போன்று அரசாங் கத் துக்கு சாதகமாகத் தீர்ப்பு வழுங்காத முன்னாள் உயர் நீதி மன்ற நீதியரசர் திருமதி ஷிராணி பண்டாரநாயக்கா பதவி விலக்கப்பட்டது மட்டுமன்றி எ[illegible]ந்து விபரம் வெளியிடப் படவில் லை என்ற குற்றச்சாட்டு கொண்ட கோப்பு அவரை இப் போது நீதிமன்ற வழக்கில் நிறுத்தியுள்ளது.
இவற்றிலிருந்து ஜனாதிபதி தன்னிடமுள்ள கோப்புகளைப் பாவிப்பாரா இல்லையா என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.
அதே வேளையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா விஜயகுமாரதுங்க பதிலடியாக என்னிடமும் இன்று அதிகாரத்தில் இருப்பவர்கள் தொடர்பாக நிறையக் கோப்புகள் உண்டு' என்று தெரிவித்துள்ளார். அ[illegible]வ இலங்கையில் அரசியல் பிரமுகர்கள் சிலர் சுவிஸ் வங்கிகளில் கறுப்புப் பணம் வைப்புச் செய்துள்ளனர் என வெளிவந்த தகவல் சம்பந்தமாகவும் இருக்கலாம்.
இன்னொரு புறம் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி திஸநாயக்கா கட்சித் தலைவர்களிடம் கட்சி உறுப்பினர்கள் பற்றி கோப்புக்கள் இருப்பது தவிர்க்க முடியாது என்று தெரிவித்துள்ளார். ஒலிம்பிக்கில் வெள்ளிப்பதக்கம் வென்ற சுசந்திகா ஜெயசிங்கவை தனியாகப் பேச அழைத்தமை சம்பந்தமாக ஒருமுன்னாள் அமைச்சரின் கோப்பும் அதில் அடங்கலாம்.
ஒரு பெண் அமைச்சர் ஒருவரின் காரியாலயத்தினுள் நுழைந்து தனக்குத் தானே தீ மூட்டிக் கொண்டமை பற்றிய கோப்புகளும் உள்ளடங்கக் கூடும்.
எப்படியோ துப்பாக்கிகளைக் காட்டி பயமு றுத்துவ்தைப் போலவே கோப்பு களைக் காட்டி எமது அரசியல் வாதி களை மிரட்ட முடியும்என்னுமளவுக்கு எமது அரசியல் வாதிகள் முறைகேடாக நடந்து வருகின் றனர் என்ற விடயம் இவற்றின் மூலம் சந்தேகத்துக்கு இடமின்றி வெளிப் படுத்தப் பட்டுள்ளது.
அரசாங்கத்தை விட்டு வெளியேறி யவர் கள் தொடர்பில் தன்னிடம் கோப்புகள் உண்டு என்று ஜனாதிபதி தெரிவித்துள்ள மையை நாம் சாதாரணமாக எடுத்து விட முடியாது. அதாவது அவர்கள் முறை கேடாக நடக்கின்றனர் என்பதை ஜனாதி பதி நன்குதெரிந்தே வைத்திருக்கிறார். ஆயி னும் அவர்கள் தன்னுடன் இருந்தார்கள் என்பதாலேயே அவர்கள் மீது ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவில்லை என்பது தெளிவா கவே புலனாகின்றது. எவரும் தன்னிடம் இருக்கும் வரை முறைகேடுகளில் ஈடுபட அனுமதி உண்டு என்பதை மஹிந்தவின் கூற்றிலிருந்து நன்குபுரிந்து கொள்ள முடிகிறது. ஒரு விதத்தில் இந்த முறை கேடுகளுக்கு ஜனாதிபதியும் உடந்தை யாகவே இருந்துள்ளார்.
இங்கு ஊழல், மோசடி, அதிகார துஷ்பிர யோகம் போன்ற சட்ட விரோதக் காரி யங்களில்ஈடுபடும் காடைத்தன அரசியல் வாதிகளே நாட்டைவழிநடத்துகிறார்களா என்ற கேள்வியை எழுப்பவேண்டியுள்ளது. மக்களுக்காகவும், மக்கள்சேவை களுக் காகவும் தம்மை அர்ப்பணித்தவர்கள் எனக் கூறி தேர்தல் மேடைகளில் முழங்கி வாக்குக் கேட்பவர்கள், குற்றச்சாட்டுக்களால் கோப்புக்களை நிரப்புகிறார்கள் என்ற கேவலமான நிலை எமது நாட்டில் நிலவுகிறது. இது பற்றி எவரும் வெட்கப்பட்டதாகத் தெரியவில்லை. இதை நாம் நாமாகக் கூறவில்லை. ஜனாதிபதி பொலன் னறு வையில் தெரிவித்த கருத்தும், அதன் எதிரொ லியாக வெளிவந்த கருத்துக் களுமே இந்த அபத்தங்களைப் போட்டுடைத்துள்ளன.





உதாரணத்துக்கு நாட்டில் ஓடும் பேருந்துகளில் அரச பேருந்துகளுக்கு சிவப்பு வர்ணமும், தனிநபர் பேருந்துக ளுக்கு மஞ்சள் வர்ண மும் அடிக்கப்பட வேண்டும் என ஒரு திட்டம் கொண்டு வரப்படுமானால் நாம் அதன் மூலம் எமக்குத் தேவையான பேருந்து களையும் சுலபமாக இனம்கண்டு கொள்ளவே இந்தத் திட்டம் என நினைப்போம்.
அரசியல்வாதிகளும் அதை எமது வசதிக்கா கவே செய்வதாகவும் சொல்வார்கள்.
ஆனால் இந்த வர்ணங்களில் இறக்குமதிக் கோட்டா யாரோ ஒரு நபருக்கோ அல்லது ஏதோ ஒரு நிறுவனத்துக்கோ வழுங்கப்படும். அவரோ அந்த நிறுவனமோ அமைச்சருடனோ அல்லது அரசாங்கத்தின் உயர் மட்டத்தினருடனோ ஏதோ ஒரு வகையில் தொடர்பு பட்டவராகவே இருப்பார். கோடிக்கணக்கான பணம் போக வேண்டிய தரப்பினர்களுக்கும் போக வேண்டிய இடங்களுக்கும் போய்ச் சேரும்.
இது ஒரு கற்பனை உதாரணம் மட்டுமே. ஆனால் நடைமுறையில் ஒவ்வொரு துறையிலும் உச்சி முதல் உள்ளங்கால் வரை இப்படியான நடைமுறைகள் உண்டு. சில பெரும் நிறுவனங்கள் லஞ்சத்தை தரகுப் பணம் என்ற பேரில் சட்டபூர்வமா கவே செய்து வருகின்றன. வருமான வரிக் கணக்கிலும் தரகுப் பணம் என்றே போட்டு விடுவார்கள்.
இப்படியான நிலையில் கோப்புகள் நிரம்பும ளவுக்கு மோசடிகள் பெருகி உள்ளமை யை யே ஜனாதிபதியின் பொலன்னறுவை உரை கோடிட்டுக் காட்டியுள்ளது. இப்போது தேர் தலை முன்னிட்டு கோப்புகளை வைத்துக் கொண்டு மிரட்டிக் காரியம் சாதிக்கும் முறை ஆரம்பமாகி விட்டது. அரசாங்கத்தை விட்டு தொடர்ந்து வெளியேறுபவர்களைப் தடுத்து நிறுத்தும் தடை வேலியாக இந்தக் கோப்பு கள் இருக்கின்றன.
ஆனால் கோப்புகளைக் கையில் வைத்துக் கொண்டு மிரட்டும் நபரை தாம் அரசாங் கத்தை விட்டு வெளியேற்றுவதன் மூலம் தோற்கடிக்க முடியும் என்ற நம்பிக்கை வலு வடையுமானால் கோப்புகளின் கும்மா ளத் தில் எந்தவித பயனுமின்றிப் போய் விடும். தேர்தல் என்பது நாம் விரும்பிய தலை மையை எமது வாக்குகள் மூலம் தெரிவு செய்யும் ஒரு நடைமுறை. ஆனால் இங்கு அதை வன்முறைகள், அதிகாரத் துஷ்பிர யோகம்,அரச வளங்களைப் பயன் படுத்தல், மிரட்டல், லஞ்சம் எனப் பல முறை கேடுகள் தேர்தலின் அர்த்தத்தையே மாற்றி விடுகின் றன. இத்தகைய தேர்தலைக் குழப்பி ,ஜன நாயகத்தைக் கொல்லும் ஆயுதங்களில் இவருடைய குற்றக்கோப்புகளும் அறிமுகமா கியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் ஒளி

வாராந்த சஞ்சிகை

sudarolijaffna@gmail.com

361, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021 567 7609


## தமிழர்களின் தெரிவு

ஜனாதிபதித்தேர்தலில் தமிழர் தரப்பு யாரை ஆதரிக்கப் போகின்றது? என்பதுதான் இப்போது பலரிடையேயுள்ள பெரும் கேள்வி. 'என்னதான் நான் உங்களுக்கு அள்ளி யள்ளித் தந்தாலும் நீங்கள் எனக்கு வாக்களிக்கமாட்டீர்கள் என்பது நன்கு தெரியும். இருந்தாலும் நான் தமிழர் பகுதிகளில் அபிவிருத்தி செய்வதை நிறுத்தமாட்டேன்' என்ற சாரப்பட அண்மையில் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித் திருந்தார். என்னதான் செய்தாலும் தனக்கு தமிழர்கள் வாக்களிக்க மாட்டார்கள் மஹிந்தவுக்கே புரிந்து போன விடயம் என்பது அவரது வாயாலேயே வெளிப்பட்டுவிட்டது.

எந்தவொரு ஆட்சியாளரும் தந்திராத கொடுங்கன வொன்றை தமிழர்களுக்கு கொடுத்தவர் மஹிந்த. முள்ளிவாய்க்காலில் உச்சம் கொண்ட அந்தக்கனவின் வலியில் இருந்து தமிழினம் மீள்வதற்கு பல தசாப்தங்கள் தேவை. அப்படிப்பட்டவர் வீசியெறிகின்ற சலுகை எலும்புகள் ஒருபோதும் வலியைத் தீர்க்க உதவப்போவதில்லை. அதனாலேயே தமிழர்கள் தனக்கு வாக்களிக்கப்போவதில்லை என்று மஹிந்தவே வாக்குமூலம் கொடுத்திருகிறார்.

அப்படியானால் தமிழர்களின் வாக்கு மைத்திரிபால சிரிசேனவுக்குதான் என்றும் சொல்லிவிட முடியாது. ஏனெனில் அவரும் மஹிந்தவின் நிழலில் இருந்து வந்தவர் தான். தமிழர்கள் மீது ஏவிவிடப்பட்ட போர்ப்பிசாசை மஹிந்த குடும்பத்தோடு நின்று வேடிக்கை பார்த்து, இன்புற்றவர்தான் இந்த மைத்திரி. இப்போது மஹிந்தவிடமிருந்து பிரிந்து வந்து விட்டு, 'இத்தனை நாளும் பொறுத்துப் பார்த்து முடியாத நிலையில் தான் வெளியே வந்திருக்கிறேன். அந்தளவுக்கு மஹிந்த சகோதரர்கள் மக்கள் மீது அடக்குமுறையைப் பிரயோகிக்கின்றனர்' என்று நீலிக்கண்ணீர் வடிக்கிறார் மைத்திரி. உண்மையிலேயே மக்கள் மீதான அடக்கு முறையைப் பொறுக்க முடியாமல் தான் அவர் அரசில் இருந்து வெளியேறி இருந்தாரென்றால் அதற்கான தருணம் இதுவல்ல. ஏனெனில் இப்போதுள்ள சூழலை விட மஹிந்த சகோதர்களின் அராஜகம் கொடிகட்டிப் பறந்த காலங்கள் பலவுண்டு. இறுதிப்போரில் பல்லாயிரம் தமிழ் மக்கள் கொத்துக் கொத்தாகக் கொல்லப்பட்டபோது மைத்திரி ஏன் அரசில் இருந்து வெளியேறவில்லை? அல்லது முஸ்லிம் மக்கள் மீதான தாக்குதல்கள் நடந்தபோது கூட மனச்சாட்சியின் உறுத்தலின் பேரில் மைத்திரி, மஹிந்தவின் கூட்டிலிருந்து பறந்திருக்கலாமே? அப்போதெல்லாம் மஹிந்த குடும்பத்தின் அட்டூழியங்கள் மைத்திரிக்குத் தெரியவில்லையா? அல்லது அவை சட்டத்துக்கு உட்பட்ட ஜனநாயக நடவடிக்கைகள் என்று மைத்திரி கருதினாரா?

உலகையே உலுக்கும் படுகொலைகள் முள்ளிவாய்க்காலில் நடந்தபோது பொங்கியெழாத மைத்திரியின் மனச்சாட்சி ஜனாதிபதித்தேர்தல் சமயத்தில் மட்டும் விழித்துக் கொண்டதன் மர்மம் தமிழ் மக்களுக்கு மிக நன்றாகவே தெரியும். எனவே மஹிந்தவை ஏற்கனவே தமிழ் மக்கள் நிராகரித்துவிட்டதால், கடந்த முறை பொன்சேகாவுக்கு கிடைத்தது போல தனக்கே தமிழர்களின் வாக்கு என்று மைத்திரி நினைப்பாரேயானால் அதைவிட மடத்தனம் வேறேதுவும் கிடையாது.

மஹிந்தகுடும்பத்தின் ஆட்சி காரணமாக வெளிப்பார்வைக்கு மைத்திரி தேவதூதன் போல தென்படலாம். ஆனால் ஒவ்வொரு முறையும் இதேபோன்ற அக்கரைப்பச்சைக் கனவுகளோடு மாற்றத்தை எதிர்பார்த்து ஏமாறுவதே தமிழர்களின் தலைவிதியாக இருந்தது. பிரேமதாச ஜனாதிபதியாக இருந்த போது, சந்திரிகா சமாதானத் தேவதையாகத் தெரிந்தார். ஆனால் பதவிக்கு வந்தவுடன் சந்திரிகா பிணம் தின்னும் பேயரசியாக மாறிப்போனார். ஆனால் சந்திரிகாவுக்குப் பின்னர் மஹிந்த ஜனாதிபதியானவுடன் 'மஹிந்தவை விடவும் சந்திரிகா எவ்வளவோ மேல்' என்னும் நிலைக்கு தமிழர்கள் வந்திருந்தார்கள். ஒருவேளை மஹிந்தவின் சர்வதிகாரங்களையெல்லாம் மீறி , மைத்திரி ஜனாதிபதியானாலும் தமிழர்களுக்கு எதுவித விமோசனமும் கிடைக்கப்போவதில்லை. எனவே தமிழர்கள் தேர்தலில் மஹிந்தவும் அல்லாத மைத்திரியும் அல்லாத தெரிவுக்கே செல்லவேண்டியிருக்கும்.

## கண்ணில் மண் தூவிய தீபங்கள்

\- ஊழியான்

மாவீரர் தினத்தை கொண்டாட விடாது தடுக்கும் நோக்கில் போர்க் காலத்தை போல மாவீரர் வாரம் நெருங்கும் வேளையில் வடக்கு முழுவதும் தீவிர இராணுவக் கண்காணிப்பின் கீழ் கொண்டு வரப்பட்டது. இதனால் யாழ்.பல்கலைக்கழகம் பிரகடனப்படுத்தப்படாத உயர்பாதுகாப்பு வலயமாக மாற்றப்பட்டிருந்தது. ஆனால் அதனையும் மீறி கடும் பாதுக்காப்புக்கு மத்தியில் மரணித்த மறவர்களுக்கான ஈகைச்சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் நசுக்கப்பட்டு தமிழ் மக்கள் மீது இராணுவ நெருக்கு வாரங்கள் அதிகரிக்க தொடங்கி ஐந்து வருடங்கள் கடந்துவிட்டன. அதன் பின்னர் ஒவ்வொரு ஆண்டும் கடும் அச்சுறுத்தல்களுக்கும், கொலை மிரட்டல்களுக்கும் மத்தியிலும் யாழ்.பல்கலைக்கழகத்தில் இனத்தின் விடுதலைக்காக உயிர் நீத்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டே வருகின்றது.

அச்சுறுத்தல்களுக்கும், கொலை மிரட்டல்களும் மாணவர்களின் உணர்வுகளைக் கட்டிப் போடமுடியாது என்பதை இந்தச் சுடரேற்றல்கள் வெளிப்படுத்தியிருந்தன.



கொலைகள், கைதுகள், புனர்வாழ்வுகள் ,கொலை அச்சுறுத்தல்கள் இப்படி நீண்டு கொண்டு போகிறது யாழ்.பல்கைக்கழக மாணவர்களின் இருண்ட வரலாறு.ஆனால் இவற்றைக் கண்டு அந்த மாணவர்கள் பயந்து துவண்டுவிடவில்லை. (சிலவேளைகளில் இதைப்படிப்பவர்கள் பல்கலை மாணவர்களை உசுப்பேற்றவே இப்படியாக மாணவர்களைப் புகழ்கிறார்கள் என்று நினைக்கக்கூடும். அப்படி நினைப்பவர்களில் எத்தனை பேர் கார்த்திகை 27 அன்று வீட்டுக்குள்ளேயேனும் விளக்கேற்ற முன்வருவார்கள்? உண்மையில் மாணவர்களின் அடங்காப்பற்றை பாராட்டத்தானே வேண்டும்)

வருடா வருடம் யாழ்.பல்கலைகழகத்தில் இடம்பெறும் மாவீரர் தின அனுஷ்டிப்பை எப்படியாவது தடுக்க வேண்டும் என்று நினைக்கின்றது சிங்கள அரசு. அதற்கு துணைவேந்தரும் துணைபோகிறார் போலும். கடந்த முறை காங்கேசன் துறையில் அமைந்துள்ள தல்செவன விடுதிக்கு கொண்டு செல்லப்பட்ட துணைவேந்தர் தலைமையிலான குழுவினருக்கு, அப்போது கட்டளைத் தளபதியாக இருந்த உதயபெரேரா பொய் சொல்லி அனுப்பி வைத்தார்.

அதாவது பல்கலைக்கழகச் சூழலில் இராணுவ நடமாட்டம் இல்லாமல் செய்யப்படும் என்று அவர் உறுதியளித்திருந்தார். ஆனால் அவர் வாக்களித்த மறுநாள் தொடக்கம் பல்கலைக்கழகச் சூழலில் இராணுவ நடமாட்டத்தோடு மேலதிகமாக புலனாய்வு பிரிவினரின் நடமாட்டமும் அதிகரிக்கத் தொடங்கியது.

அன்றிலிருந்து இன்று வரை பல்கலைச் சூழலில் இராணுவப் பிரசன்னமும் புலனாய்வாளர்களின் கண்காணிப்பும் குறையவில்லை. முள்ளிவாய்க்கால் நினைவேந்தல், திலீபன் நினைவு நாள்,மாவீரர் தினம் போன்ற முக்கிய தினங்களில் அதிகளவு படையினர் குவிக்கப்படுவர்கள். அந்தக் காலப்பகுதிகளில் மாணவர்களுக்கு எதிர்பாராத விடுமுறைகளும் வழங்கப்படும்.

இந்தத் திடீர் விடுமுறைக்களுக்கு காரணம், மாணவர்கள் குறித்த தினங்களை அனுஷ்டிக்காமல் தடுக்க வேண்டும் என்பதே. ஆனால் அந்த நிகழ்வுகளில் ஒன்றைக்கூட இத்தகைய இராணுவப்பிரசன்னத்தின் மூலம் தடுத்ததை இதுவரை காணமுடியவில்லை.

இப்படி மாணவர்களுக்கு பல்கலைக்கழக நிர்வாகம் திடீர் விடுமுறைகள் வழங்குவது கூட குறித்த தினங்களின் பெறுமதியை அதிகரிக்கவே செய்கின்றன. ஒரு இனத்தின் விடுதலைக்காக உயிர் நீத்தவர்களுக்கு பல்கலைக்கழகமே விடுமுறை வழங்கி அஞ்சலிக்கின்றது என்றால் அது மிகப்பெரிய விடயம் தானே.

மாவீரர் வாரம் நெருங்குகிறது என்றால் இராணுவத்தினருக்கும் புலனாய்வு துறையினருக்கும் ஒரு வெறுப்பு.என்னதான் கண்ணில் எண்ணெய் விட்டுக்கொண்டு காத்திருந்து, கண்காணித்தாலும் ஒன்றையும் தடுக்க முடியவில்லையே என்ற வெறுப்பில் படையினர் திரிகின்றனர். 'சரி. அடுத்த வருடமாவது தீபம் ஏற்ற விடாமல் பார்ப்போம்' என்று படையினர் தம் மனதைச் சமாதானப்படுத்திக் கொள்ள வேண்டியதுதான்.

கடந்த 27 ஆம் திகதியும் யாழ்.பல்கலைக்கழகம் கடும் இராணுவ முற்றுகைக்குள்தான் இருந்தது. அதுவும் பல்கலைக்கழகத்துக்குள் அமைந்திருக்கும் நினைவுத் தூபி ,வீதியில் நின்ற இராணுவத்தினரின் தீவிர கண்காணிப்பில் இருந்தது. ஏனெனில் அந்தத் தூபியில்தான் மாணவர்கள் தீபமேற்றுவார்கள் என்று படையினர் ஊகித்திருந்தனர். எனவே அந்தத் தூபியினை சுற்றி இரண்டு புலனாய்வாளர்கள் மாணவர்களை போல வேடமிட்டு, காலை முதலே தூபியைச் சுற்றி வலம் வந்தனர்.

'கடந்த வருடத்தைப் போல இந்தமுறையும் மாவீரர் நினைவுத் தூபிக்கு முன்னால் மாணவர்கள் சுடர் ஏற்றுவார்கள். அப்போது அவர்களைக் கூண்டோடு கைது செய்வோம்' என்ற கணிப்பில் காத்திருந்தனர் படையினர். ஆனால் நடந்ததோ வேறு.

மாலை நேரம் நெருங்க நெருங்க பல்கலைக்கழகத்துக்குள் பதினைந்துக்கும் குறைவான மாணவர்களே இருந்தனர்.


இந்தமுறை எதுவும் நடக்காது தானே என்று இராணுவத்தினர் சற்று அசரத் தொடங்கினார். அந்த நேரத்தில் பத்துப் பேர் அடங்கிய குழு பல்கலைக்கழகத்துக்குள் நுழைந்தது. பாதுகாப்பு கெடுபிடிகளில் சிக்காமல், படையினரின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு சென்ற அந்த மாணவர்கள் சில நிமிடங்களில் தீபமேற்றி அஞ்சலித்துவிட்டு, வந்தவழியே சென்றுவிட்டனர்.

அவர்கள் பல்கலையில் தீபம் ஏற்றியதை படையினரோ புலனாய்வு துறையினரோ இறுதிவரை அறிந்திருக்கவில்லை. மாலை ஏழு மணியளவில் இணையத்தளங்களில் செய்திகள் வந்த பின்னர்தான் வழமை போலவே இந்தவருடமும் தாங்கள் அணிலேற விட்ட நாய்களாக ஏமாந்த விடயம் படையின்ருக்கும், புலனாய்வுத் துறையினருக்கும் தெரியவந்தது.இத்தனை தடைகளையும் மீறி எவ்வாறு பல்கலைக்கழகத்திற்குள் மாணவர்கள் நுழைந்து தீபம் ஏற்றினார்கள் என்பது புரியாத புதிராகவே அவர்களுக்கு இருக்கின்றது.

இப்படியே காலம் முழுக்க அவர்கள் தலையைப் பிய்த்துக் கொண்டு அடுத்த வருடமாவது, தீபத்தை ஏற்றவிடாமல் செய்ய காவலிருக்க வேண்டியதுதான். என்னதான் காவல் இருந்தாலும் எது நடக்க வேண்டுமோ அது நடந்தே தீரும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என்ன செய்யப்போகிறது அரசு?

- அனுஷ்கன்

இலங்கையின் போர்க்கால படுகொலைகளின் பட்டியல்கள் மிக நீண்டன. இவற்றில் பெரும்பாலானவை அரசபடைகளாலும், அரசுடன் ஒட்டிக் கொண்ட துணை ஆயுதக்குழுக்களாலும் மேற்கொள்ளப்பட்டவை. இதை உ[illegible]திப்படுத்தும் தொடர்சாட்சியங்கள் இன்னமும் குறைவில்லாமல் வந்துகொண்டேயிருக்கின்றன. இந்தச் சாட்சியங்களின் குரல்களெல்லாம் போர்க்குற்ற விசாரணை அரச படைகள் மீது தேவை என்ற கருத்தையே ஒருமித்து வலியுறுத்துகின்றன.

ஏற்கனவே வன்னிப் பெரு நிலப்பரப்பில் மனிதாபிமானப் படை நடிவடிக்கை என்ற பெயரில் அரசாங்கம் அரங்கேற்றிய அனைத்துப் படுகொலைகளும் காணொலி வடிவில் 'சனல் -4', 'ஹெட்லைன்ஸ் ருடே' 'த இண்டிபெண்டன்ஸ்' போன்ற ஊ[illegible]கங்களில் வெளியாகி, பெரும் அ[illegible]வலைகளை உலகெங்கும் தோற்றுவித்திருந்தன. அத்தோடு இந்தக் காணொலிகள் வன்னியில் நடந்த ஊழித்தாண்டவத்தை இரத்தமும் சதையுமாக அப்பட்டமாக்கி, அரசு தன்னைச் சுற்றிலும் அணிந்துகொண்டிருந்த போலி முகத்திரையை கிழித்தெறிந்திருக்கின்றன

கைகள் கட்டப்பட்டு, கண்கள் கறுப்புத் துணியால் மூடப்பட்டு, ஆடைகள் களையப்பட்டு இழுத்து வரப்படும் ஆண், பெண் என இருபாலரும் சதுப்பு நிலமொன்றில் முட்டுக்காலில் இருத்தப்பட்டு பின்னந்தலையில் துப்பாக்கிச் சன்னங்களால் துளைத்து கொன்று வீசப்படும் காட்சிகள் உண்டாக்கிய அதிர்வு அடங்க நாள்கள் பல வேண்டும். இதுமட்டுமல்லாது அப்பாவி மக்களை மோதல் தவிர்ப்பு வலயத்துக்கு வாருங்கள் என அழைத்து விட்டு, அவர்கள் மீது கொத்துக் குண்டுகள், பொஸ்பரஸ் குண்டுகள் போன்ற சட்டவிரோத, மனித குலத்துக்கு ஒவ்வாத ஆயுதங்கள் பாவிக்கப்பட்டதற்கான சாட்சிகள், விடுதலைப்புலிகளின் முக்கிய தலைவர்களான ரமேஸ், நடேசன் போன்றவர்கள் பிடிக்கப்பட்டு விசாரணையின் பின் கொல்லப்படும் காட்சிகள், இசைப்பிரியா போன்ற பெண்கள் மீது மேற்கொள்ளப்பட்ட மனித குலத்துக்கு விரோதமான படுகொலைகள், நிர்வாணமாக்கப்பட்ட பெண்களின் சடலங்களுக்கு அருகில் நின்று சீருடையாளர்கள் வக்கிரமான முறையில் எடுத்த புகைப்படங்கள் என்பனவும் காணொலிகளாகவும், புகைப்படங்களாகவும் வெளிவந்து, உலகின் முன்னால் இலங்கையைத் தலைகுனிய வைத்தன.

முள்ளிவாய்க்காலுக்கு முன்னரேயே இத்தகைய ஊழிகளுக்குப் பேரினப்படைகள் பலமுறை ஒத்திகை பார்த்திருந்தன.

**இலங்கையில் ஒரு படுகொலை இடம்பெற்றால் உடனடியாக ஒரு விசாரணைக்குழு அமைக்கப்படுவதும், மக்கள் தாமாகவே அந்தச்சம்பவத்தை மறக்கும் வரையில் குற்றவாளிகள் உல்லாசமாக வாகனங்களில் கூவித்திரிவதும், சில அறிக்கைகளோடு விசாரணை கிடப்பில் போடப்படுவது வழமை. அதேபோன்று அக்சன்பாம் பணியாளர் படுகொலையையும் ஆற வைத்து பழங்கஞ்சியாக்க அரசு முனைந்தது. மக்கள் மறக்கலாம். ஆனால் தொண்டு நிறுவனம் மறக்க முடியுமா? அதனால் தான் பொறுத்துப் பொறுத்து பார்த்த அக்சன்பாம் நிறுவனம் 'குற்றவாளிகளை நீங்கள் கண்டுபிடிக்கிறீர்களா? அல்லது சர்வதேச விசாரணையை நடத்தவா?' என்று அச்சுறுத்தும் தொனியில் அரசுக்கு கெடு விதித்துள்ளது. இப்போது அரசுக்கு இரண்டுங்கெட்டான் நிலை.**

இனக்கலவரங்கள் முதல், வல்வைப்படுகொலைகள், கிழக்குப் படுகொலைகள், நவாலி நரபலி, செஞ்சோலை தளிர்களின் உயிர் பறிப்பு என்று பல தசாப்தங்களாகவே முள்ளிவாய்க்கால் ஊழிக்கு ஒத்திகை பார்க்கப்பட்டதால் தான், இப்படி ஈவிரக்கமின்றி மனித உயிர்களைப் பேரினவாதத்தால் கொல்லமுடிந்தது.

இப்படி ஒத்திகை பார்க்கப்பட்ட அரசின் கொலைக் கோரத்துக்கு இன்னொரு உதாரணம் தான் 2006 ஆம் ஆண்டு அக்சன்பாம் என்ற சர்வதேசத் தொண்டுநிறுவனமொன்றின் ஊழியர்கள் 17 பேர் மூதூரில் கொலைசெய்யப்பட்ட சம்பவம் .

மூதூர் மீது தாக்குதல் நடத்தி, படையினரின் நிலைகளைக் கைப்பற்றி , நிர்மூலமாக்கிவிட்டு, புலிகள் தளம் திரும்பியிருந்த சூழலில் அரசபடைகளாலேயே இந்தப்படுகொலை நிகழ்த்தப்பட்டு இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகம். இங்கே கொல்லப்பட்ட பணியாளர்கள் அனைவரும் பிடிக்கப்பட்டு, முட்டுக்காலில் இருத்தப்பட்டு, மிக அருகில் நின்று துப்பாக்கியால் இந்தப்பணியாளர்கள் 17 பேரும் கொன்று வீசப்பட்டுள்ளனர் என்று பிரேத பரிசோதனை அறிக்கை சொல்கின்றது. அத்துடன் கொலையுண்ட[illegible]ர்களின் சடலங்கள் குவியலாக அலுவலக அறையொன்றில் போடப்பட்டிருந்தன. அலுவலகம் அமைந்த பகுதி தொண்டு நிறுவனம் என்பதை வெளிக்காட்டும் வகையில் மிகத் தெளிவாக அடையாளப்பட்டிருந்த பின்னும் பணியாளர்கள் கொல்லப்பட்டிருந்தனர். எப்படி அக்சன்பாம் பணியாளர்கள் முட்டுக்காலில் இருத்தப்பட்டு, கண்கள் கட்டப்பட்டு, கொல்லப்பட்டு , கும்பலாக வீசியெறியப்பட்டார்களோ அதே பாணியிலேயே முள்ளிவாய்க் காலிலும் நிர்வாணப்படு கொலை கள் இடம்பெற்றிருந்தன. ஆகவே இரண்டையும் இராணுவமே செய்திருக்க வேண்டும் என்ற ஊகம் உறுதியாகின்றது.

ஆனால் அக்சன்பாம் படுகொலைகள் பற்றி இலங்கை அரசாங்கம் என்னவிதமான நடவடிக்கைகளை முன்னெடுத்தது என ஆராய்ந்தால் அதன் விடை பூச்சியமே. இந்தப்படுகொலை விவகாரம் வெளிவந்தவுடன் ' ஐயோ சத்தியமா இதை நாங்கள் செய்யேலை' என்ற பாணியில் அறிக்கை விட்டது அரசு. விசாரணை நடத்துவதற்கு குழுக்கள் அமைக்கப்பட்டதாகவும் அது அறிவித்தது. ஆனால் இது வரை காகித அறிக்கையிட்டு நாள்களை கடத்தியது தான் அதிகார பீடம் செய்து முடித்த நடவடிக்கை. இவ்வாறு அரசு மூதூர்ப்படுகொலையில் எடுத்த அக்கறையின் பிரதிபலிப்பே இந்தப் படுகொலையை விசாரிக்க சர்வதேச விசாரணை தேவை என்ற நிலையை குறித்த பிரான்ஸைத் தலைமையகமாகக் கொண்ட அக்சன்பாம் தொண்டு நிறுவனத்துக்கு ஏற்படுத்தியிருந்தது. இலங்கையில் ஒரு படுகொலை இடம்பெற்றால் உடனடியாக ஒரு விசாரணைக்குழு அமைக்கப்படுவதும், மக்கள் தாமாகவே அந்தச்சம்பவத்தை மறக்கும் வரையில் குற்றவாளிகள் உல்லாசமாக வாகனங்களில் கூவித்திரிவதும், சில அறிக்கைகளோடு விசாரணை கிடப்பில் போடப்படுவது வழமை. அதேபோன்று அக்சன்பாம் பணியாளர் படுகொலையையும் ஆற வைத்து பழங்கஞ்சியாக்க அரசு முனைந்தது. மக்கள் மறக்கலாம். ஆனால் தொண்டு நிறுவனம் மறக்க முடியுமா? அதனால் தான் பொறுத்துப் பொறுத்து பார்த்த அக்சன்பாம் நிறுவனம் 'குற்றவாளிகளை நீங்கள் கண்டுபிடிக்கிறீர்களா? அல்லது சர்வதேச விசாரணையை நடத்தவா?' என்று அச்சுறுத்தும் தொனியில் அரசுக்கு கெடு விதித்துள்ளது. இப்போது அரசுக்கு இரண்டுங்கெட்டான் நிலை. தன் படைவீரர்களை எப்படித்தானே குற்றவாளிகள் என்று சுட்டுவிரலை அரசு நீட்ட முடியும். அப்படி நீட்டினால் அது அரசையே நோக்கி நீட்டியது போலத்தானே. சரி. அதில்லாமல் சர்வதேச விசார ணைக்கு தலையாட்டினால் அவர்கள் உடனேயே குற்றவாளிகள் யாரென்று இனங்கண்டு கொண் டால், இத்தனைநாளும் அரசு நடத்திய இழுத்தடிப்பு நாடகம் அம்பலமாகிவிடும். என்ன செய்து இந்தப்பொறியில் இருந்து தப்ப லாம் என்று இன்னமும் யோசித் துக் கொண்டே இருக்கிறது அரசு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணமும் போர்க்கால ரீவி யுகமும்

**“ முதன்முதல் வீட்டில் ரீ.வி. போடும் அந்த நாள் இருக்கிறதே, எங்கள் வயதில் இருந்த ஒவ்வொருத்தனுக்கும் அது ஒரு திருவிழா மாதிரி. தொண்ணூற்றெட்டின் இறுதியில் யாழ்ப்பாணத்தில் ஓரளவுக்கு சீரான மின்சாரம் வழங்கப்படுவதற்கான அறிகுறிகள் தெரிந்தன. அப்போதுதான் புதிதாக ரீவி வாங்குவோரும், அதுவரை மூடிக் கட்டியிருந்த ரீவிக்களைத் திருத்த முற்பட்டோருமாக ரீவி, அன்ரெனா விற்பனை அமோகமாக இருந்தது. ”**

- ஞாபகன்




அப்ப நாளைக்கு ஹிந்தி நியூஸ், ஹிந்தி சீரியல் எல்லாம் பாக்கப் போறியோ? சிறி கிண்டல் செய்தான்.

உண்மைதான். அதுதான் அப்போதைய வழக்கம். கிண்டல் செய்த சிறியும் அடுத்த வருடம் அவன் வீட்டில் புதிய தொலைக்காட்சிப்பெட்டி ரீவி வாங்கியபோதும், மறக்காமல் அதையேதான் செய்தான்.

முதன்முதல் வீட்டில் ரீ.வி. போடும் அந்த நாள் இருக்கிறதே, எங்கள் வயதில் இருந்த ஒவ்வொருத்தனுக்கும் அது ஒரு திருவிழா மாதிரி. தொண் ணூற்றெட்டின் இறுதியில் யாழ்ப்பாணத்தில் ஓரளவுக்கு சீரான மின் சாரம் வழங்கப்ப டுவதற்கான அறிகுறிகள் தெரிந்தன. அப்போதுதான் புதிதாக ரீவி வாங்குவோரும், அதுவரை மூடிக் கட்டியிருந்த ரீவிக்களைத் திருத்த முற்பட் டோருமாக ரீவி, அன்ரெனா விற்பனை அமோக மாக இருந்தது. VHF இற்கு ஒரு பெரியா சைசாகவும், UHF இற்குச் சிறிதாக மீன்முள்ளு போன்ற ஒரு அன்ரெனாவும் தனித்தனி யாக வாங்கவேண்டும். எங்கள் வீட்டு ரீவி எட்டுவருடங்கள் பாவிக்காதிருந்தும், பழுதுபார்க் கும் எந்த அவசியமுமின்றி அப்படியே வேலை செய்ததில் அப்பாவுக்கு ஒரு தனிப்பெருமை. தொண்ணூற்றொன்பதாம் ஆண்டு ஜனவரியில் சீரான மின்சாரம் வழங்கப்பட ஆரம்பித்திருந்தது. அடுத்தவருடமே குழம்பியது வேறு கதை. நாங்கள் ரீவி பொருத்தியது தாமதமாகத்தான். அப்போது படையப்பா வெளியாகியிருந்தது.

அந்த வரலாற்று முதல் நாள் எங்கள் வீட்டில் வெள்ளிக்கிழமை யாகவும் அமைந்தது கூடுதல் சிறப்பு. இரவு எட்டுமணிக்கு ஒளிபரப்பாகும் ஒளியும் ஒலியும் நிகழ்ச்சிக்காக ரீ.விக்கு முன்னால் மாலை ஆறுமணியிலிருந்து பழியாகக் காத்திருந்து தூர்தர்ஷ னின் ஹிந்தி நியூஸ், ஹிந்தி சீரியல் எல்லாம் சீரியஸாகப் பார்த்துக் கொண்டிருந்தேன். அப்போதே அசட்டுத்தனமாகத் தெரிந்தாலும் சின்னவயதில் கடந்து போன சிறுவயது நினைவுகளை மீண்டும் கொண்டுவந்தது. அதே பழைய மகாபாரத காலத்தில பார்த்த விளம்பரங்களை மீண்டும் திரை யில் பார்க்கும்போது, உண்டாகிய மகிழ்ச்சியை வார்த்தைகளில் விவரிக்க முடியவில்லை பத்து வருஷம் கழித்துப் பழைய நண்பனைச் சடுதியாக வீதியில் பார்த்தது போல. நான் எதிர்பார்த்துக் காத்திருந்த ஒளியும் ஒலியும் நிகழ்ச்சி மின்சாரக் கண்ணா..! பாடலுடன் ஆரம்பித்தது.

எல்லோருடைய பெரு விருப்பத்துக்குமுரிய தெரிவு தூர்தர்ஷன்தான். ஏனெனில் அப்போது வேறு எந்தச் சனலும் கிடையாது. ரீவி சீரியல்கள் பெண்களுக்கானவை என்கிற பொதுவான கருத்தை உடைத் துக் கொண்டிருந்தார் கள் பள்ளியில் நம் ஆண்மக்கள். எத்தனை மனிதர்கள், பெண்ணின் கதை என்கிற இரு தொடர்கள் பற்றி அவ்வப்போது பேசிக் கொள்வார்கள். எதுவும் புரியாமல் நானும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பேன். சயன்ஸ் ஹோலில் கெமிஸ்ட்ரி வகுப்பைக் கட் அடித்து, சக்திமான் பார்த்து வளர்ந்த சிறுவர்களும் நம்மிடையே இருந்தார்கள். பெரும்பாலான தூர்தர்ஷன் சீரியல்களில் அந்தந்த தயாரிப்பாளரின் சொந்தக்காரர்கள் எல்லாம் நடித்தது போலத் தெரிந்தது.

எம் தந்தையர் இளவயதினராக இருந்த காலத்தில் முதன்முதல் ரீவி பார்த்த அனுபவம் எப்படியிருந்திருக்கும்? எனக்கு நினைவு தெரிந்து வீட்டில் ரீவி இருந்தது. நான் பிறக்கும்போது வாங்கிய சன்யோ ரீவி அது. ஊரில் எங்கள் சுற்றுவட்டாரத்தின் முதல் கலர் ரீவி என்பார் அப்பா. அந்த ரீவிக்கு ரிமோட் கிடையாது. சனலுக்கு மட்டுமே பட்டன்கள். மற்றபடி சரியான அலைவரிசை யைப் பிடிப்பதற்கு சிறிய வட்ட சில்லுகளை உருட்ட வேண்டும். முதன்முறையாகப் பார்த்த படம் ஞாபகம் வரவில்லை. இதயம் போகுதே.. பாடல் கறுப்பு வெள்ளையில் அவ்வப்போது பார்த்த ஞாபகமிருகிறது. தூர்தர்ஷன் அப்போது அப்படித்தான் தெரிந்தது என நினைக்கிறேன். ஆக, பாக்கியராஜின் புதிய வார்ப்புகள் தான் முதற்படமா? இருக்கலாம்.

அப்போதெல்லாம் எனக்கு பண்ணையார் என்று சொன்னாலே கெட்டவர் என்றே மனதில் பதிவாகியிருந்தது. அதைவிட முக்கியமாக பண்ணையார் எந்த நேரத்திலும் யாரோ ஒரு பெண்மணியைக் கெடுத்துவிடலாம். ஏனெனில், வயல் வரப்புகளில் பக்கத்தில் யாரோ குடைபிடிக்க நின்று வேடிக்கை பார்ப்பதைத் தவிர, கெடுப்பதுதான் பண்ணையாரின் பிரதான தொழில் என்பதாகவே நம்பினேன். கெடுப்பது என்றால் என்னவென்று எனக்குத் தெரிந்திருந்தது. ஒரு பெண்மணியின் தோள்களைப் பிடித்து இப்படியும் அப்படியும் அசைப்பார். பின்பு பெண்மணி தனியாக இருந்து அழுவார். படம் பார்க்க வந்த, பக்கத்துவீட்டுத் தமயந்தி அக்கா உஸ்ஸ்ஸ் பண்ணையார் கெடுத்திட்டார் என்று சொல்லுவார். சில நாள்களில் நானாகவே இதனைக் கண்டுபிடிக்கும் அளவுக்கு தேர்ச்சி அடைந்துவிட்டேன்.

சின்ன சின்ன வண்ணக்குயில்.. உருண்டு போகும் லாம்பு கட்டிய மாட்டுவண்டில் சில்லுக்கூடாக ரேவதி பாடிக்கொண்டே ஒரு சைடாக கையை வீசி ஆடிச்செல்வது தெரியும். அநேகமாக ஒவ்வொரு நாளும் அந்தப்பாட்டு ஒளிபரப்பாகும்.

அதன் பிறகு பத்து வருடங்களுக் குப் பிறகுதான் மௌனராகம் படம் பார்த்தேன். அந்தப்பாடல் காட்சி மட்டும் அப்படியே ஞாபகத்திலிருந்தது. அந்தப்பாட்டு முடியவும் காட்சி மாறிவிடும். அச்சமில்லை அச்சமில்லை பாரதி பாடலுடன் நிதர்சனம் ஒலிபரப்பு ஆரம்பமாகிவிடும். அப்போது நாங்கள் அளவெட்டியில் பெரியம்மா வீட்டில் தங்கியிருந்த எண்பத்தேழின் ஒப்பரேஷன் லிபரேஷன் இராணுவ நடவடிக்கைக் காலம். வழமைபோல வடமராட்சிப் பகுதியில் விமானங்கள் என்கிற குரலுடன் இரைச்சலாக ஆரம்பிக்கும் காட்சி சூழ்நிலையை முற்றிலுமாக மாற்றிப் பதற்றம் கொள்ள வைத்துவிடும். தூரத்தில் ஒரு சிறிய விமானம் செல்வது கலங்கலாகத் தெரியும். பின்னர் ஒரு பெரிய கறுப்பு விமானத்தின் வயிற்றுப் பகுதி திறந்துகொள்ள உள்ளிருந்து மீன்கள் போன்ற வடிவில் ஏராளமான சிறிய குண்டுகள் கொட்டப்படுவது காண்பிக்கப்படும். அது ஏதோ வெளிநாட்டு விமானக் குண்டுவீச்சுக் காட்சிகள் இடையிடையே காட்டப்பட்டதாகப் பின்னர் சொன்னார்கள்.

தொடர்ந்து சிதிலமடைந்த கட்டடங்கள், உடல்கள், யாரோ ஒரு முக்கியஸ்தரின் இறந்த வீட்டு இறுதிச்சடங்குகள் என கலவர மாகும். பின்நாள்களிலும்கூட வடமராட்சி என்று யாரேனும் சொல்லும்போதே விமானக் குண்டுவீச்சு காட்சிகள் தெரிவது போல ஒரு பயங்கரமான எண் ணத்தை தோற்றுவித்துவிட்டிருந் தன லிபரேஷன் ஒப்பரேஷன் காலத்து செய்திகள்.

யாழ்ப்பாணத்துக்கும் தூர்தர்ஷ னுக்குமான எப்போதும் அப்படி யொரு தொடர்பு. என்வரையில் அது மகாபாரத காலத்துப் பழமை வாய்ந்தது. இந்திய இராணுவ காலப்பகுதியில் ஒளிபரப்பான மகாபாரதம்தான் காரணம். ஞாயிறு காலை பத்துமணிக்கு என்று ஞாபகம். பெரியவர்கள் கூறியதில் பாரதக்கதை ஓரளவு தெரிந்திருந்ததால், ஹிந்தி புரியா தது பற்றியெல்லாம் கவலை யில்லை. அப்போது யாழ்ப்பாணத் தில் எம்வயதினர் மத்தியில் ஏகோபித்த வரவேற்புப் பெற்ற தொடர் அது. ஆர்வத்தில் வில், அம்பு தயாரித்து தனியாகப் பயிற்சி எடுத்துக் கொண்டிருந் தேன். ஏற்கனவே இன்னொரு குழு போரை ஆரம்பித்துவிட்டதில் நண்பன் செந்தூரின் கண்ணில் அம்பு பாய்ந்துவிட, எனது இராணுவப் பயிற்சியும் தடை செய்யப்பட்டது. நீண்டகாலம் சிகிச்சை பெற்று, கண்ணாடி அணிந்து அவஸ்தைப்பட்டு ஒருசில வருடங்கள் கடந்தே அவனுக்குக் கண் சரியானது.

**(தொடரும்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதிகளும் விடுதலைப் போராளிகளும்

அக்கினிகுமாரன்

இருண்டு கிடந்த ஊரெங்கும் ஒரே நேரத்தில் ஒளி வெள்ளம் பாய்கிறது. நடு வீடுகளுக்குள் மாவீரர் படங்களின் முன் சுடர்கள் ஏறின. மலர்கள் தூவப்பட்டன. முழு ஊருமே மாவீரர் நினைவில் கசிந்து கண்ணீர் மல்கியது. மாவீரர் நாளில் மாவீரர் அஞ்சலியை நிகழ்த்தி முடித்ததில் அவர்கள் நெஞ்சுகள் நிறைவடைகின்றன.

27.11.2014 மாலை 5.50.

மாலையும், மழைக்கால மேகங்களும் இணைந்து எங்கும் இருள் பரப்பி விட்டன. மெல்ல மெல்ல நகரமாக மாறிக் கொண்டிருக்கும் அந்தப் பாரம்பரிய பெருமை பெற்ற கிராமத்தில் மனிதர்களே இல்லையோ எனச் சந்தேகிக்கப்படுமளவுக்கு எங்கும் இருள் சூழ்ந்து கிடந்தது. வீடுகள் மட்டுமன்றி வீட்டு முற்றங்கள் கூட வெறிச்சோடிப் போய்க்கிடந்தன. சைக்கிள்களில் ரோந்து சென்ற இராணுவத்தினரையும் நாய்களை விட எந்த ஒரு ஜீவனையும் காண முடியவில்லை. நிமிடங்கள் ஒவ்வொன்றாக நகர்ந்து கொண்டிருந்தன.

சரியாக மணி 6.05.

திடீரென வீடுகளிலெல்லாம் வெளிச்சம் பரவியது.

இருண்டு கிடந்த ஊரெங்கும் ஒரே நேரத்தில் ஒளி வெள்ளம் பாய்கிறது.

நடு வீடுகளுக்குள் மாவீரர் படங்களின் முன் சுடர்கள் ஏறின. மலர்கள் தூவப்பட்டன. முழு ஊருமே மாவீரர் நினைவில் கசிந்து கண்ணீர் மல்கியது. மாவீரர் நாளில் மாவீரர் அஞ்சலியை நிகழ்த்தி முடித்ததில் அவர்கள் நெஞ்சுகள் நிறைவடைகின்றன.

நவம்பர் இருபத்தைந்தாம் திகதியன்று 'மாவீரர் நாளைக் கொண்டாடவோ, பிரபாகரன் பிறந்தநாளைக் கொண்டாடவோ அனுமதிக்கப்போவதில்லை' என இராணுவத் தளபதி சவால் விட்டிருந்தார். எவராவது மாவீரர் நாளை அனுஷ்டித்தால் புலனாய்வுப் பிரிவினர் மூலம் கடும் நடவடிக்கை எடுப்போம் என மிரட்டினார்.

யாழ். பல்கலைக்கழகத்தை இழுத்து மூடி, மாணவர்களை விடுதிகளை விட்டு வெளியேற்றி விட்டு அந்தச்சுற்றாடல் எங்கும் படையினரும் இரணுவப் புலனாய்வாளர்களும் குவிந்தனர்.

ஆனால் அவர்களின் சவாலுக்கு மக்கள் தமக்குத் தெரிந்த வகையில் மாவீரர் நாளை உணர்வு பூர்வமாக அனுஷ்டித்து சரியான பதிலடி வழங்கியுள்ளனர்.

ஆனால் அரசாங்கமோ விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகள் எனக் கூறி அவர்களின் நினைவு நிகழ்வுகளை மேற்கொள்வதைத் தடை செய்து வருகிறது. அப்படி அஞ்சலி நிகழ்வுகளை மேற்கொள்பவர்களை கைது செய்யவும், சிறையிடவும் கூடப் படைத்தரப்புத் தயங்குவதில்லை.

எமது மக்களால் விடுதலைப் போராளிகளாகப் போற்றப்படுபவர்கள், பேரினவாதிகளால் பயங்கரவாதிகளாகச் சித்தரிக்கப்படுகின்றனர். ஆனால் எமது மக்களோ அரச படைகளை அரச பயங்கரவாதிகளாகப் பார்க்கின்றனர்.

ஒரு காலத்தில் நெல்சன் மண்டலோ கொடிய பயங்கரவாதியாக வர்ணிக்கப்பட்டவர். 27 ஆண்டுகள் தென்னாபிரிக்கா இன வெறி அரசின் கொடிய சிறையில் வாடினார். பின்பு அவரே தென்னாபிரிக்காவின் அதிபரானார். சமாதானத்துக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டு சர்வதேச அளவில் கௌரவிக்கப்பட்டார்.

பலஸ்தீன விடுதலை அமைப்பின் தலைவரையும் பயங்கரவாதி என முத்திரை குத்தி, அவரின் தலைக்கும் விலை பேசப்பட்டது. பின்பு அவர் சர்வதேசத் தலைவர்கள் வரிசையில் வைத்துப் போற்றப்படுகின்றார்.

ஒடுக்குறையாளர்கள் எப்போதும் விடுதலைப் போராட்ட வீரர்களைப் பயங்கரவாதிகளாகவே சித்தரிக்கின்றனர். ஆனால் மக்கள் எப்போதுமே அவர்களைத் தமது முன்னோடிகளாகவும், மீட்பாளர்களாகவுமே போற்றுகின்றனர். இது உலக வரலாறு எங்கும் காணப்படும் ஒரு பொதுமையான விடயமாகும். விடுதலைப் போராளிகள் அதிகாரத்தில் இருந்தாலும், இல்லாவிட்டாலும், உயிரோடு இருந்தாலும் இல்லாவிட்டாலும் மக்களின் இதயங்களில் என்றும் உயர்ந்த இடத்தில் நிலைத்திருப்பார்கள்.

ஆனால் ஒடுக்குமுறையாளர்கள் அதிகாரத்தில் உள்ள வரைக்கும் பெரும் தலைவர்களாகக் காட்டிக் கொள்கின்றனர். அதிகாரம் பறிபோன பின்பு அவர்கள் செல்லாக் காசாகி விடுகின்றனர். மக்களின் வெறுப்புக்குரிய- வேண்டத்தகாத மனிதர்களாக இத்தகைய அதிகாரத் தரப்பினர் மாறிவிடுகின்றனர்.

இலங்கையை ஆக்கிரமித்திருந்த ஆங்கிலேயருக்கு எதிராக ஹெப்பிட்டிப் பொல என்ற வீரர் சுதந்திரப்போராட்டத்தை நடத்தினார். ஆங்கில அரசு அவரைக் கொடிய கொலைகாரன் எனவும், கொள்ளைக்காரன் எனவும் தூற்றியது. இறுதியில் அவரைக் கைது செய்தது. அவர் கண்டி போகம்பரையில் வைத்து 1817 ஆம் ஆண்டு நவம்பர் 27ஆம் திகதி வெள்ளையர் ஆட்சியில் சிரச்சேதம் செய்யப்பட்டுக் கொல்லப்பட்டார்.

ஹெப்பிட்டிப்பொலவின் நினைவு தினமும் நவம்பர் 27 தான் என்றபோதும், தேசத்தின் இறைமை பற்றியும், தேசப்பற்று பற்றியும் பெரிதாகத் தங்கள் சுயநலங்களுக்காக பேசும் ஆட்சி அதிகாரத்தைப் பெரிதாக கொண்டாடுவதில்லை. ஆனால் தமது தேவைகளுக்கு அவனின் பெயரை அடிக்கடி உச்சரித்துக் கொள்வார்கள்.

மாவீரர் நினைவு நாளில் சிங்கள விடுதலை வீரன் ஹெப்பிட்டிக்கொல நினைவு நாளும் வரும் ஒரே காரணத்துக்காகவே அதைக் கொண்டாடுவதை இன்றைய ஆட்சியாளர்கள் தவிர்த்து வருகின்றனர்.

1915 இல் சிங்கள முஸ்லிம் கலவரம் நடந்த போது பிரிட்டிஷ் அரசு, டி.எஸ்.சேனநாயக்கா, ஜயதிலக்க, குணசேகர போன்ற சிங்களத் தலைவர்களைச் சிறை செய்தது. எனினும் சேர். பொன். இராமாநாதன் இங்கிலாந்து சென்று மகாராணியுடன் வாதாடி அவர்களை விடுதலை செய்ய ஏற்பாடு செய்தார். சேர். பொன். இராமநாதன் கொழும்புத் துறைமுகத்தில் வந்து இறங்கிய போது அவரைத் தோளில் ஏற்றி சிங்களத் தலைவர்கள் ஊர்வலம் வந்தார்கள். அவரைக் கௌரவிக்கும் வகையில் நாடாளுமன்றத்தில் இராமநாதனின் சிலையும் நிறுவப்பட்டது. இப்படிப்பட்ட இராமநாதனின் நினைவு நாளும் நவம்பர் 30 ஆம் திகதி வந்தபோதும், அதைக் கூட அனுஷ்டிக்க விடாமல் தடை விதிக்கப்பட்டு விட்டது.

இதில் அடிப்படை விடயம் என்னெவனில் நவம்பர் மாதம் மாவீரம் மாதமாகவே பார்க்கப்பட்டு, இலங்கையில் நவம்பர் மாதத்தையே விலக்கப்பட்ட மாதமாகப் பார்க்குமளவுக்கு இலங்கை அரசு நடந்து கொள்கிறது.

மாவீரர் நிகழ்வுகளை மட்டுமன்றி ஹெப்பிட்டிப் பொல, சேர். பொன். இராமநாதன் ஆகியோர் நினைவுகளையும் மறுதலிப்பதன் மூலம் இலங்கையின் ஆட்சியாளர்கள் தமது ஒடுக்கு முறை வடிவத்தை அப்பட்டமாகவே வெளிக்காட்டியுள்ளனர். அதாவது உண்மையான பயங்கரவாதிகள் விடுதலைப்புலிகள் அல்லர்; அரசாங்கமாகிய நாமே என்பதை மீண்டும் ஒரு முறை அவர்கள் நிரூபித்துள்ளனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாயியே சரணம்

## ஆன்மீகத் தொடர் - 41



ஒரு வீட்டுக்கு விருந்தினர் ஒருவர் அழைக்கப்பட்டிருக்கும் போது வீட்டைச்சேர்ந்தவர்களும் அங்கிருக்க நேரிடும் மற்ற நண்பர்கள் உறவினர்களும் விருந்தாளியுடன் உபசரிக்கப்பட்டு மகிழ்வெய்துவார்கள். அவ்வாறே மசூதியில் அப்போது இருந்த அனைவரும் பாபாவினால் பணக்காரப் பெருந்தகைக்குப் பாரிமாறப்பட்ட ஆன்மீக விருந்தில் பங்கு கொண்டனர். பணக்காரப் பெருந்தகை உள்ளிட்ட அனைவரும் பாபாவின் ஆசீர்வாதங்களைப் பெற்ற பின்னர் மிகவும் திருப்தியுடனும் மகிழ்ச்சியுடனும் அந்த இடத்தை விட்டுச் சென்றனர்.

**பாபவின் சிறப்பான குணாதி சயங்கள்**

தங்களது வீட்டைத் துறந்து காடுகளில், குகைகளில், துறவி மடங்களில் தனிமையில் இருந்து கொண்டு தங்களுக்கே விடுதலை தங்களுக்கே விடுதலை அல்லது பரகதி தேட முயற்சிக்குமு பல முனிவர்கள் உள்ளனர். மற்றவர்களைப் பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை. எப்போதும் அந்தர்த்மாவிலேயே தம்மை மறந்து மூழ்கி இருப்பார்கள். ஸாயிபாபா அந்த வகையைச் சார்ந்தவர் அல்ல. அவருக்கு வீடில்லை. மனைவி இல்லை. மக்களில்லை. சேய்மை அண்மை உறவினர்கள் யாருமே இல்லை. எனினும் அவர் இந்த உலகத்தில் (சமூகத்தில் ) வாழ்ந்தார். நாலைந்து வீடுகளிலிருந்து தமது உணவை அவர் இரந்து உண்டு எப்போதும் வேப்ப மரத்தடியிலேயே வாழ்ந்தார். உலக விவகாரங்களை நடத்திக் கொண்டு மக்களுக்கு உலகில் எங்ஙனம் நடக்கப் பழக வேண்டுமெனப் போதித்தார். கடவுள் சாட்சியைப் பெற்ற பின் மக்களின் சுபீட்சத்தக்காகப் பாடுபடும் முனிவர்களையோ சாதுக்களையோ கண்பதரிது. ஸாயிபாபா இவர்களி லெல்லாம் தலையாவார். எனவே ஹேமாட்பந்த் பின்வருமாறு கூறுகிறார். "இத்தகைய அசாதாரண அறிவெல்லை கடந்த விலைமதிப்பற்ற தூய்மையான மாணிக்கக்கல் (ஸாயிபாபா ) அவதரித்த நாடு ஆசீர்வதிக் கப்பட்டது. குடும்பம் ஆசீர்வதிக் கப்பட்டது. தயர்களாகிய அவரின் பெற்றோர்கள் ஆசீர்வதிக் கப்பட்டவர்கள்"

(முற்றும்)


# குறும்பட வெளியீடு



திருமறைக் கலாமன்றத்தின் தயாரிப்பில் கலிஸ் இயக்கத்தில் உருவான குரும்பை என்ற குறும்படம் நவம்பர் 23 ஆம் திகதி வெளியிடப்பட்டது. கலைத்தூது கலையகத்தில் நடைபெற்ற இந்தக் குறும்பட வெளியீட்டு நிகழ்வில் பலர் கலந்து கொண்டனர். படத்தின் விமர்சன உரையை எழுத்தாளர் அ.யேசுராசா வழங்கினார்



## சொற்சிலம்பம் போட்டி இல. 649



**மேலிருந்து கீழ்**

1-தூண்டுதல் செய்.
2-வாசம் செய்தல்.
3-உள்ளம்.
4-எல்லையில் இருப்பது.
5-கேள்வி பதில்.
7-ஓர் அசைச் சொல்.
9- திருமணம்.
10- பகுதி.
12-ஒரு மாற்றுப் பயிர்.
14-ஆசிரியர் மாணவர்களை தண்டிப்பது இதனால்.
15-இரண்டும் இரண்டும்.
16- மார்புக்கும் முதுகுக்கும் பக்கத்தே உள்ளது.
17- ஒரு சிறிய புள்.
18- வித்தின் ஆரம்பப் பருவம்.
19-கீழ் அல்ல.

**இடமிருந்து வலம்**

1-இந்திரலோக அழகி இவளாமே?
4-உபகரணம்.
6-தமிழ் வருடப்பிறப்பு இந்த மாதத்தில்.
8-ஒருங்கு சேர்த்தல்.
10-பாவம் செய்தவன்.
11-தர்க்கம்.
12-தேர் போன்ற வாகனம்.
13-மண் தோன்ற முன் உலகில் தோன்றியது.
14-பிரேதம்.
15-எம்மைக் குறிப்பிடுவது.
16- காலிலும் கையிலும் பத்து.
18-உலோகப் பொருளுக்கு மேலே பூசுவது.
19-மலை.
20.சிறிய பாத்திரம்.
21.மகள்.

அனுப்புபவர் பெயர்:-----------------------------------

விலாசம்:-----------------------------------------

-----------------------------------------------

கையொப்பம்:---------------------------------------

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ்.அலுவலகம்,**

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### போட்டி இல. 649

■ சொற்சிலம்பம் போட்டி 649ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2014 ஆம் ஆண்டு டிசெம்பர் 17ஆம் திகதி ஆகும்.

■ விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே டிசெம்பர் 24ஆம் மற்றும் டிசெம்பர் 31ஆம் திகதிய சுடர்ஒளியில் பிரசுரமாகும். தபா லட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணைப் பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

■ 1ஆம் பரிசு ரூபா 250 உம் 2ஆம் பரிசு ரூபா 150 உம் 3ஆம் பரிசு ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

### போட்டி இல 646இல் பரிசு பெற்றோர்

1. சண்முகநாதன் ரவிசங்கர், வைத்தியர் வளவு, இடைக்காடு, அச்சுவேலி.
2. ம.வளர்மதி, 3ஆம் வட்டாரம், முள்ளியவளை.
3. எ.அமுதா, திருக்கேதீஸ்வரம், மன்னார்.

பரிசுக்குரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00மணி வரை தமக்குரிய பணப்பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி யாழ். உதயன் அலுவலகத்திலும், நெல்லியடி, சாவகச்சேரி, கிளிநொச்சி, கொழும்பு, வவுனியா ஆகிய இடங்களில் உள்ள உதயன்-சுடரொளி பிராந்திய அலுவலகங்களிலும் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தொடர்புகளுக்கு 021 567 7609 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### பாராட்டுப் பெறுவோர்

**சி.சங்கீதா,** அரசடி வீதி, வட்டு தெற்கு, வட்டுக்கோட்டை.

**க.தில்லையம்பலம்,** விஜயவாசா, வதிரி கரெவட்டி.

**வ.ஆ. அதிரூபசிங்கம்,** அம்மன் கோவிலடி, வல்வெட்டித்துறை.

**வே.இராசநாயகம்,** சோறன்பற்று, பளை.

**சு.சோபியா,** தொட்டிலடி மத்தி, சண்டிலிப்பாய்.

### சொற்சிலம்பம் போட்டி 647இன் விடைகள்

**மேலிருந்து கீழ்**

1.ஐந்தொகை
2.பகுப்பு
3.தும்பு
4.கால்கட்டு
5.திருடு
8.குப்பம்
10.படை
12.அறம்
13.குளம்பு
14.உடும்பு
15.சந்தி
16.பதம்
17.பல
19.பால்

**இடமிருந்து வலம்**

1. ஐம்பது
4. காந்தி
6.கும்பல்
7.தொகுப்பு
9.கபடு
11.கைப்பு
12.அட்டை
13.குறடு
15.சம்பளம்
17.படு
18.தம்
19.பாலம்
20.திரும்புதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்களப் புயல்



நான் புறப்படுகின்றேன். இதோட மாங்குளம் முகாம் முடிஞ்சுது என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான் கரும்புலி லெப் கேணல் போர்க்.

வன்னிப் பிராந்தியத்தின் மையத்தில் அதன் இருதயத்தில் மாங்குளம் சிங்களப்படை முகாம் இருந்தது. அது அங்கு பல அட்டூழியங்களைச் செய்து வந்தது. இரண்டாவது ஈழப்போர் தொடங்கிய நாள்களிலிருந்து இந்தமுகாம் விடுதலைப் புலிகளால் முற்றுகையிடப்பட்டிருந்தது. புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அமைந்துள்ள மாங்குளம் முகாம் மீது தாக்குவதற்கான திட்டம் தயாரிக்கப் படுகிறது. கரும்புலித் தாக்குதல் நடத்தி அந்தமுகாமைக் கைப்பற்றுவது என்று தீர்மானிக்கப்படுகிறது.

இந்தத்தாக்குதலை தலைமைதாங்கி வழிநடத்திய தளபதி பால்ராஜ் சொல்லும்போது. நாங்கள் மாங்குளம் முகாம் தாக்குதலுக்கான திட்டங்களைத் தீட்டிக்கொண்டிருந்தோம்; அப்பொழுது மாங்குளம் முகாமைப்பற்றி எனக்குத்தான் அதிகம் தெரியும். எனவே நான்தான் சக்கை லொறி கொண்டு போகவேணும் என போர்க் சொன்னார்.

அந்தக் குரலில் உறுதி தெரிந்தது போர்க் போராட்டத்துக்குப் புதியவரல்ல. அவர் மாவட்டப் பொறுப்பாளராக இருந்தவர். பல தாக்குதல்களை முன் நின்று வழிநடத்தியவர். தளபதி பால்ராஜ் மேலும் தொடர்கையில் 1990ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் நாள் அண்டைக்குத் தான் போர்க் கரும்புலியாகப் போனவர். புறப்படமுன் கடைசியாக என்னைக் கட்டியணைச்சு. நான் புறப்படுறன் இதோட மாங்குளம் முகாம் முடிஞ்சுது என்று சொல்லிப் போட்டு. வெடிமருந்து வாகனத்தை ஓட்டிச் சென்றார். கொஞ்ச நேரத்தில் பெரிய வெடிச்சத்தம் கேட்டுது. முகாம் தகர்ந்தது. பிறகு சில மணி நேரத்தில் முகாம் கைப்பற்றப்பட்டது என்று போர்க்கின் வீரத்தை பால்ராஜ் நினைவு கூர்ந்திருந்தார்.

இந்தத் தாக்குதலுக்குச் சில நாள்களுக்கு முன்பு, போர்க் அண்ணை விடுமுறையில் வீட்டுக்குச் சென்றார். அவரது கிராமம் சிங்கள எல்லையில் அமைந்துள்ளது. அது வன்னியிலுள்ள சேமமடு. சிறு வயது தொட்டு நடந்து திரிந்த. அந்தக்கிராமத்தில் குளம், வயல், காடு என்று ஒவ்வொன்றையும் சுற்றி ரசித்தார். இல்லை. அவற்றிடமிருந்து விடைபெற்றார்.

அந்த நாள்களில் ஒரு நாள் பக்கத்து வீட்டுச் சிறுவர்கள் மரத்தடியில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அந்த இடத்துக்குச் சென்று ஓர் மரக்குற்றியில் அமர்ந்தவாறு போர்க் அண்ணை கேட்டார்.

தம்பியவை. மாவீரர் நாள் வருகிறது அல்லவா? தற்செயலாக நான் செத்துப்போனா அன்றைக்கு என்ன செய்வீர்கள்? நீங்கள் ஏன் சாகப் போறியள் எனக் கேலியாகப் பதில் கூறினர் பிள்ளைகள்.

போர்க் அண்ணையும் சிரித்தபடி, தப்பித்தவறி நான் செத்துப்போனா என்ர நினைவா ஆளுக்கொரு மரம் நட்டு வளவுங்கோ என்ன? அவர்கள் சிரித்தனர். போர்க் அண்ணையும் சேர்ந்து சிரித்தார்.

வீட்டிலிருந்து புறப்படும் இறுதி நாள் வந்தது. மதியம் உணவருந்திவிட்டு விறாந்தையில் பாயைப் போட்டுப் படுத்தார். சற்றுத்தள்ளி போர்க் அண்ணையின் அம்மாவும் படுப்பதற்காக, தரையில் பாயைப் போட்டார்.

அம்மா இதில வந்து. எனக்குப் பக்கத் தில பாயைப் போடணை. போர்க் கண்ணை கேட்டார். அம்மாவும் வந்து அவரின் தலையை வருடியவாறு இருந்தார்.

அன்று பின்னேரம் அப்பா, அண்ணன்மார், தம்பிமார், அன்புத் தங்கை என்று எல்லோரிடமும் விடை பெறுகிறார். கடைசியாக தாயாரிடம் வந்து. அம்மா எனக்கு உங்கட கையால ஒரு பொட்டு வைச்சுவிடுங்கோவன். ஆசையாயிருக்கு என சாதாரணமாகக் கேட்டார். ஏதுமறியாத தாயுள்ளம் பிள்ளையின் விருப்பப்படி பொட்டிட்டு மகிழ்ந்தது. இவ்விதம் சிறுபிள்ளை போல் அவர் நடப்பது வழக்கம் எனத் தாயாரும் கூறினார்.

**தம்பி அவன் அண்டைக்கு வித்தியாசமா நடந்ததை என்னால புரிஞ்சுகொள்ள முடியேல்லை. ஆனால், கரும்புலியாச் செத்த பிறகுதான், அவன் தன் பக்கத்தில படுக்கச் சொன்னது.. பொட்டு வைக்கச் சொன்னது.. உடுப்புகளை விட்டிட்டுப் போனது ஏனென்று விளங்குது. போர்க் அண்ணனின் அம்மாவின் நா தழு தழுத்தது..**



சிரித்தபடியே விடைபெற்றவர், வீட்டுப் படலையில் நின்று ஒரு கணம் திரும்பிப் பார்த்தார். பின் போய்விட்டார்.

சிறிது நேரத்தின் பின்.......

தம்பி சாரத்தையும் ரீசேட்டையும் விட்டுட்டுப் போட்டானணை என்று போர்க் அண்ணையின் சகோதரன் அவசரமாகக் குரல் கொடுத்தார். பழசாக்கும், அதுதான் விட்டிட்டுப் போட்டான் போலக் கிடக்கு என்றார் அம்மா.

இன்று போர்க் அண்ணையின் அம்மா சொல்கின்றார். தம்பி அவன் அண்டைக்கு வித்தியாசமா நடந்ததை என்னால புரிஞ்சுகொள்ள முடியேல்லை. ஆனால், கரும்புலியாச் செத்த பிறகுதான், அவன் தன் பக்கத்தில படுக்கச் சொன்னது.. பொட்டு வைக்கச் சொன்னது.. உடுப்புகளை விட்டிட்டுப் போனது ஏனென்று விளங்குது. போர்க் அண்ணனின் அம்மாவின் நா தழு தழுத்தது..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொச்சியில் நடந்த முத்தப் போராட்டம் பல மாநிலங்களிலும் பரவ எத்தனிக்கும் நிலையில் மோகன்லால், 'மாணவர்களும் மாணவிகளும் பேசிக்கொள்வதற்கு தடை விதிப்பது சரி அல்ல. அதே நேரம் முத்தப் போராட்டம் என்ற பெயரில் பதற்றத்தை ஏற்படுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரம் முத்தமிடக் கூடாது என்று சொல்ல யாருக்கும் உரிமை இல்லை. ஒருவேளை இதுபோன்ற காட்சிகளைப் பார்ப்பவர்களுக்கு அநாகரிகமாகத் தெரிந்தால்,

# முத்தத்துக்கு ஆதரவு


அவர்கள் அந்த இடத்தைவிட்டுப் போய்விடலாம்' என்கிறார். இந்தக் கருத்தால் மோகன் லாலுக்கு இந்துத்துவக் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ள நிலையில், மாணவர்கள் அவருக்கு தமது ஆதரவைத் தெரிவித்துள்ளார்.



# இரட்டை விருந்து


அண்மைக்காலமாக சோனாக்ஷி சின்ஹா நடித்த படங்களைக் காணவில்லையே என்று ரசிகர்கள் கவலையில் இருந்தார்கள். அப்படிக் கவலையில் வாடிய ரசிகர்களுக்கு இரட்டை விருந்து கொடுக்க இருக்கிறார் சோனாக்ஷி. டிசெம்பரில் தமிழில் 'லிங்கா ஹிந்தியில் 'அக்ஷன் ஜாக்சன் என்று அவர் நடித்த இரண்டு பெரிய படங்கள் வெளிவருகின்றன. இவை இரண்டும் சோனக்ஷிக்கு மைல்கல்லாக அமையப் போகின்றன என்ற ஆனந்தத்தில் அவர் இருக்கிறார்.

# குள்ள விஜய்?



இளையதளபதி விஜய் மீது தொடர்ந்து வைக்கப் படும் குற்றச்சாட்டுகளில் முக்கியமானது அவர் வித்தியாசமான வேடங்களில் நடிக்கமாட்டார் என்பது தான்.ஆனால், தற் போது பேஸ்புக், டுவிட்டர் போன்ற சமூக வலைத்தளங்களில் சிம்புதேவன் இயக்கும் படத்தில் விஜய் குள்ள மனிதராக நடிக்கிறார் என்று ஒரு செய்தி பரவி வருகிறது. இது குறித்து எந்தவொரு அதிகாரப்பூர்வ அறிவிப்பும் வரவில்லை.


ஒருவேளை இந்தச் செய்தி உண்மையாக இருந்தால் விஜய் மீது இருக்கும் குறைகளில் ஒன்று காணாமல் போய்விடும்.



# குப்பை கூட்டப்போகும் ரஜினி

'தூய்மை இந்தியா திட்டத்தில் ரஜினியும் இண்யைப்போகிறார். கமலஹாசன், சமந்தா, நாகார்ஜுனா, அமலா, மோகன்பாபு என்ற சங்கிலியில் இப்போது ரஜினிகாந்த். தன்னுடைய ரசிகர்களுடன் ஹைதராபாத்தில் தெருக்களை கூட்டி சுத்தம் செய்த மோகன்பாபு, 'தூய்மை இந்தியா திட்டத்தில் இணைந்து குப்பைகளை அள்ளும்படி ரஜினிகாந்துக்கு அழைப்பு விடுத்தார். இந்த அழைப்பை ரஜினி ஏற்றுள்ளார். லிங்கா பட வெளியீட்டுக்கு முதல் அல்லது தனது பிறந்ததினத்தில் ரஜினி குப்பைகளை ஒழிக்க களமிறங்கலாம்.

# துரத்தும் படகுகள்



விஜயகாந்தின் மகன் சண்முகப்பாண்டியன் நடிக்கும் 'சகாப்தம் படத்துக்காக மலேஷியாவில் உள்ள பினாங் என்ற இடத்தில் ஒரு கோடி ரூபாய் செலவில் பிரமாண்டமாகப் படகுத் துரத்தல் காட்சிகள் படமாக்கப்பட்டனவாம்.

இதில் கதாநாயகன் சண்முகப் பாண்டியன் 50 வில்லன்களுடன் 15 படகுகளில் 200 துணை நடிகர்களோடு சேர்ந்து நடுக்கடலில் பங்கேற்ற சண்டைக் காட்சி ஐந்து கமராக்கள் வைத்து படமாக்கப்பட்டன. இந்தக் காட்சி தமிழ் சினிமாவில் பெரிதும் பேசப்படும் என்று படக்குழுவினர் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமிரா

# ஹிந்தியில் அஜித்



அஜித், நயன்தாரா, ஆர்யா, டாப்ஸி நடித்த 'ஆரம்பம் திரைப்படம் 'பிளேயர் ஏக் கில்லாடி என்ற பெயரில் ஹிந்தியில் மொழிமாற்றம் செய்யப் பட்டு அடுத்த மாதம் வெளியாகிறது. ஹிந்தியில் அஜித்துக்கு ஆரம்பம் எப்படி இருக்கப்போகிறதோ தெரியவில்லை. இதன் முடிவு மட்டும் வெற்றியாக அமைந்துவிட்டால் ஹிந்திபடவுலகிலும் வலம் வர அஜித் காத்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

# இப்போதே 80 கோடி

லிங்கா இந்த வருடம் அனைத்து தரப்பு ரசிகர்களும் ஆவலுடன் எதிர்பார்த்து கொண்டிருக்கும் படம். சுப்பர் ஸ்டாரை 4 வருடங்கள் கழித்து திரையில் காணப் போகிறோம் என்று ரசிகர்கள் ஆவலுடன் இருக்கின்றனர். இந்தநிலையில் லிங்காவை தமிழகம் முழுவதும் வெளியிடும் உரிமையை ரூ. 80 கோடிக்கு வேந்தர் மூவிஸ் வாங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

# அடங்கிய அமிரா

அநேகன்' பட நாயகி அமிரா நடிக்கும்போது ஒவ்வொரு காட்சியும் எடுத்து முடிந்தவுடன் ...களைவிட நான்தானே நன்றாக நடித்து இருக்கிறேன்" என்று தனுஷிடம் ...ல்லிக்கொண்டே இருந்தாராம். இதனைப் பொறுத்துக் கொள்ள முடியாத நிலையில் ...ஷ் அவரிடம் 'நான் தேசிய விருது வாங்கி இருக்கிறேன். நீ வாங்கி இருக்கிறாயா? என்று ...டுவிட்டாராம். இதற்குப் பிறகுதான் அமிரா அடங்கி நடந்தாராம்.



# விஜய்சேதுபதிக்கு பாராட்டு

சிம்பு, தனுஷ் இருவருமே தற்போது எந்தவிதமான பகையுணர்வும் இல்லாமல் நண்பர்களாக பழகி வருகின்றனர். அது மட்டுமில்லாமல் வளர்ந்து வரும் இளைய தலைமுறை நடிகர்களையும் கை பிடித்து தூக்கி விடுகின்றனர். அந்த வகையில் விஜய் சேதுபதி தயாரிப்பில் வெளிவரவிருக்கும் படம் ஆரஞ்சு மிட்டாய். இந்தப்படத்தின் முன்னோட்டக்காட்சி அண்மையில் வெளிவந்து அனைவரையும் கவர்ந்தது. இந்த முன்னோட்டக்காட்சியை பாராட்டி தங்கள் டுவிட்டர் பக்கத்தில் பகிர்ந்துள்ளனர் சிம்புவும், தனுஷும்.

# வீசுகிறது வைகைப்புயல்

'தெனாலி ராமன் இயக்குநர் யுவராஜ் இயக்கத்தில் 'எலி படத்தில் நாயகனாக நடிக்கும் வடிவேலு, மறுபடியும் நகைச்சுவைக் களத்தில் இறங்கி இருக்கிறார். விக்ரம் பிரபு நடிக்கும் படம் ஒன்றில் விக்ரம் பிரபுவுக்குத் தாய்மாமனாக நடிக்கிறார் வடிவேலு. வைகைப்புயல் மீண்டும் வீசத் தொடங்கிவிட்டதால் இனிமேல் ரசிகர்களுக்கு சிரிப்பு விருந்து தித்திக் கப் போகிறது.



# வருமா? வராதா?

'மஸ்தி சாதே' என்னும் ஹிந்திப் படத்தில் இரட்டை வேடத் தில் நடிக்கும் சன்னி லியோன், பிகினி உடை அணிந்து கார் கழுவுவதுபோல ஒரு காட்சியில் படு கவர்ச்சியாக நடித்து இருக் கிறார். ஆயினும் இந்தக் கவர்ச்சிக்காட்சிக்கு தணிக்கைக்குழு அனுமதி வழங்குமா என்ற சந்தேகம் தயாரிப்பாளருக்கு எழுந் துள்ளது. இப்படியான காட்சிகள் இருந்தால் தணிக்கைக்குழு ஏ சான்றிதழ் வழங்கிவிடும். அப்படி ஏ சான்றிதழ் கிடைத்தால், வரிவிலக்கு கிடைக்காது என்பதால் தயாரிப்பாளரின் லாபம் குறைந்துவிடும். எனவே கடைசி நேரத்தில் சன்னி லியோனின் காட்சிகள் நீக்கப்படவும் கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







மைனா குருவி அழகாக இருக்கும். சின்னத் தலையை ஆட்டி ஆட்டி நடக்கும். மிளகு போன்ற கண்கள் இருப்பதே தெரியாது. மஞ்சள் வண்ண அலகால் புழுவைக் கொத்திப் பிடிக்கும். வாயைத் திறந்து கொண்டு, சின்னக் கால்களால் தத்தித் தத்தி நடக்கும்.


தோட்டத்தைச் சுற்றிலும் மைனாக்குருவிகள் கூ...கூ... என்று கத்திக் கொண்டே அங்கும் இங்கும் நடந்தன. பறந்தன. ஒரு குருவி பறந்தால் அனைத்துக் குருவிகளும் பறந்தன.

திடீரென அனைத்துக் குருவிகளும் கீச்.. கீச்.. என்று சத்தமிட்டபடி ஒரு குருவியைக் கொத்த ஆரம்பித்தன. அந்த ஒரு குருவியின் தலைமயிர் சிலிர்த்து இருந்தது. எதிர்த்துப் போராடியது. அந்த ஒரு குருவியை மற்றைய குருவிகள் ஒவ்வொன்றும் மாறி மாறிக் கொத்தின. அந்தக் குருவியைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. என்ன நடக்கிறது என்று பார்க்க அருகில் சென்ற பொழுது, அனைத்துக் குருவிகளும் பறந்தோடின. கொத்திக் கொண்டிருந்த குருவியையும் அழைத்துக் கொண்டு பறந்தோடின. ஒரு குருவி கூட இருக்கவில்லை. தங் களுக்குள் சண்டையிட்டுக் கொண்டிருந்த குருவிகள், பொதுவான எதிரி வருவதைக் கண்டதும், ஒன்றாகச் சேர்ந்து தப்பி ஓடியத் வியப்பாக இருந்தது.

பொது எதிரி வரும் பொழுது நாம் அனைவரும் ஒன்றுபட்டு நிற்கவேண்டும் என்கிற உயரிய உண்மையை அந்தச் சின்ன மைனாக் குருவிகள் வழியாக அறிய முடிந்தது.

இந்த இரு படங்களுக்கு மிடையே 05 வித்தியா சங்கள் உள்ளன. கண்டு பிடியுங்கள்

## கண்டுபிடியுங்கள்



## போராட்டம் !!!

வாழ்க்கையில் நாம் எப்படிச் சோதனைகளை எதிர்கொள்கிறோம் என்பதைப் பொறுத்து அவை தோல்வியாகவோ அல்லது வெற்றியாகவோ அமையலாம். ஆனால் முயற்சி இல்லாமல் வெற்றி வருவதில்லை.

ஒரு உயிரியல் ஆசிரியர் தனது மாணவர்களுக்கு ஒரு கம்பளிப் புழு எப்படி வண்ணத்துப் பூச்சியாக மாறுகிறது என்று சொல்லிக் கொண்டு இருந்தார். அவர் தனது மாணவர்களிடம் ஒரு வண்ணத்துப் பூச்சி கூட்டினைக் காட்டி அடுத்த ஒரு சில மணி நேரங்களில் வண்ணத்துப் பூச்சி தனது கூட்டிலிருந்து போராடி வெளிவரப்போகிறது என்றும் ஆனால் யாரும் அதற்கு உதவக்கூடாது என்றும் கூறிவிட்டு வெளியே சென்று விட்டார்.

மாணவர்களில் ஒருவன் அதன் மேல் இரக்கப்பட்டான். தனது ஆசிரியரின் சொல்லை மீறி, அந்த வண்ணத்துப் பூச்சி தனது கூட்டிலிருந்து வெளிவர உதவுவதற்குத் தீர்மானித்தான். அந்த வண்ணத்துப் பூச்சி போராட தேவையின்றி எளிதாக வெளியே வரும் பொருட்டு அந்தக் கூட்டை உடைத்தான். ஆனால் சிறிது நேரத்திற்கு பிறகு வண்ணத்துப் பூச்சியும் இறந்து விட்டது.

இப்பொழுது அந்த மாணவன் வண்ணத்துப் பூச்சியின் இறப்பிற்கு காரணமாகி விட்டான். கூட்டிலிருந்து வெளிவரப் போராடும் போராட்டம் உண்மையில் அதனுடைய சிறகுகளை வளர்க்கவும், தன்னை பலப்படுத்திக் கொள்ளவும் உதவும் என்பது தான் இயற்கையின் சட்டம். மாணவன் அந்த வண்ணத்துப் பூச்சியயை போராட்டத்தில் இருந்து காப்பாற்றி விட்டதால், அது இறந்து விட்டது. இதே கொள்கையை நமது வாழ்விற்கும் பயன்படுத்துங்கள். போராட்டங்கள் இல்லாமல் வாழ்வில் எதுவுமே பயன்தராது.

## ஒலிம்பிக் போட்டி

ஒலிம்பிக் போட்டி கி.மு. 776 ஆம் ஆண்டு கிரிஸ் நாட்டின் ஒலிம்பியா நகரில் தொடங்கியது. ஒலிம்பிக் போட்டி நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெற்று வருகின்றது.

கி.பி. 393இல் அப்போதைய கிரேக்க அரசர் தியோடிசியல் இந்த ஒலிம்பிக் போட்டிக்கு தடைவிதித்தார். பின்னர் 1890இல் மீண்டும் ஒலிம்பிக் போட்டிகள் தொடங்கப்பட்டன.

கிரேக்கர்களின் கடவுள்களில் ஒருவரான ஜியஸ் கடவுளை போற்றும் வகையில் கொண்டாடப்பட்ட திருவிழாவின் ஒரு பிரிவுதான் ஒலிம்பிக்போட்டி. போட்டியில் வெற்றி பெறும் வீரர்களுக்கு ஆலிவ் இலைகளால் ஆனா கிரிடம் சூட்டப்படுகின்றது. 1896 ஏப்ரல் 6ஆம் திகதி ஏதென்ஸ் நகரில் 14 நாடுகள் கலந்து கொண்ட முதல் ஒலிம்பிக் போட்டி ஆரம்பமானது.

தடகள போட்டிகள், குத்துசண்டை, மல்யுத்தம், துப்பாக்கி சுடுதல், டென்னிஸ், சைக்கிள் ரேஸ், நீச்சல், ஜிம்னாஸ்டிக், பளுதூக்குதல் ஆகிய போட்டிகள் இதில் இடம் பெற்றன.

1920இல் ஆன்ட் லொப் நகரில் நடந்த ஒலிம்பிக் போட்டியின் போதுதான் இந்தக் கொடி ஏற்றப்பட்டது. வெள்ளை நிறத்தில் அமைந்திருக்கும் ஒலிம்பிக் கொடியின் நடுவே அழகிய 5 வளையங்கள் ஒன்றோடு ஒன்று பின்னிபிணைந்தபடி அமைந்திருக்கும். இது ஒலிம்பிக்கில் பங்குபெறும் 5 கண்டங் களையும் குறிக்கும். மேல்புற வரிசையில் நீலம், கருப்பு, சிவப்பு நிறத்திலும் கீழ்வரிசையில் மஞ்சள், பச்சை நிறத்திலும் வளையங்கள் அமைந்திருக்கும். 1988 சியோல் ஒலிம்பிக்கில்தான் பழைய கொடி மாற்றப்பட்டு புதிய கொடி ஏற்றப்பட்டது.

1896இல் நடந்த ஒலிம்பிக் போட்டியில் பெண்கள் சேர்த்துக் கெள்ளப்படவில்லை. தற்போது ஒலிம்பிக் பொட்டியில் பெண்கள் முக்கிய பங்கு வகிக்க ஆரம்பித்துவிட்டனர். இருந்தாலும் ஒருசில நாடுகள் சர்வதேச போட்டிகளில் பெண்கள் கலந்து கொள்ள தடை விதித்து உள்ளன.



## அன்பான நட்பு

எங்கோ பிறந்து , வளர்ந்து
எங்கையோ சந்தித்து
நண்பர்கள் ஆகிறோம்
எமது பிரச்சனைக்கு நண்பனிடம்
தீர்வை கேட்கிறோம்.
அன்பான நட்புக்கு கோபம்
இல்லை.
துரோகம் இல்லை . என்றைக்கும்
அன்பு நீண்டு கொண்டு செல்லும்

கலைமகள்.கச்சேரி

## கொஞ்சம் சிரிங்க...

ஆசிரியர்;- அமெரிக்காவைக் கண்டு பிடிச்சது யாரென்று தெரியுமா?

மாணவன்;-முதலில் அமெரிக்காவைத் தொலைத்தது யாரென்று சொல்லுங்க சேர்?





மழலைகளே!
வர்ணங்களால் மெருகூட்டுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உணர்வின் ஊற்று -20

### பந்துக்கொரு போட்டி

ஒரு பந்துக்கு 22 பேர்
அடிபடுவார்கள்.
அது தான் புட் போல்.
ஒரு பந்துக்கு 11 பேர்
அடிபடுவார்கள்
அதுதான் கிரிக்கட்.
மூண்டு பேரும் சும்மா அடிபடாம
அம்மா அப்பாட்ட அடம்பிடிச்சாவது
3 பந்து வாங்கி விளையாடுங்கோ
ராசா.

-ஜெ.கிருஷாந்த்,
அரியாலை

### சபதம்

சின்னம் சிறுவர்களே
நீங்கள் பந்து எடுத்து
பந்தயம் கட்டி பந்தாடும்
உங்கள் கரங்களும்
புன் சிரிப்புத் தமும்பிய
வதனமும்
வெற்றி என்னும் கனியை
வென்றிட நீங்கள்
போடும் சபதமும்

-எஸ்.கே.குணபாலன்,
அளவெட்டி கிழக்கு,
அளவெட்டி.



# கவிதைப்புனல்

### வெறுமை நிரப்பிகள்

ஒவ்வொரு ஆண்டும்
வந்து போகும்
நாமும்
உங்கள் இல்லம்
வருவோம்.

அன்று மட்டும்தான்
எங்கள் உள்ளங்களை
தூய்மை செய்கிற பேறு
கிடைக்கிறது.
சுமைகள் இறக்கி
இளைப்பாற முடிகிறது.
குறைகள் சொல்லி
ஒப்புக்கொடுக்க முடிகிறது.

ஆகா! எத்தனை அழகு!
பிரபஞ்சத்தில்
இன்று மட்டும்தான்
மனங்கள்
பூக்களை அதிகமாக
நேசிக்கின்றன.
நாரோடும் வேரோடும்
விரல்கள் உறவு
வைத்துக்கொள்கின்றன.
ஆகமொத்தத்தில்
இன்றுதான்
பூக்களின் பிறப்புக்கே
அர்த்தம் கிடைத்திருக்கிறது.

இன்றே தீபங்கள் கூடி
நன்றே சூரியன் செய்து
இருளகற்றுகின்றன
நம் உள்ளத்திலும்.
உயிர்கள் உருகும்
நினைவில் ஒலிக்கும்
பாவின் கனதியை
உணரும் செவிகள்.
கண்ணீரில் கரைந்து
கசிந்து உருகிப்போகிறது
மனசெல்லாம்.

நிலையில்லா வாழ்வில்
ஏதோ ஒன்றில் லயித்து
இறுகப்பற்றி பயணிக்க
இங்கு மட்டும்தான்
கற்க முடியும்.
இதைவிடவும் ஊருக்கென்ன.
உலகுக்கே இல்லை பள்ளி.
இங்கு வந்த பின்புதான்
கலங்கிய குட்டைகள்
தெளிந்த நீரோடைகளாக
முரடுகளும் முக்கனிகளாக
உருப்பெறுகின்றன.
குனிந்தவனும்
இங்கு வந்துதான்
நிமிர்வு பெறுகிறான்.
வைரம் எடுக்கிறான்.


வரம் தரும் உங்கள்
வாசலில் இன்று நம்
கால்களில்லை.
அந்த மண்ணிலிருந்து
பெயர்க்கப்பட்டு விட்டோம்.
உங்களால் மட்டுமே
யாதுமாகி அங்கு
வீற்றிருக்க முடிகிறது.
எங்கும் வியாபிக்கவும்
முடிகிறது.

இந்தமுறையும்
உங்கள் இல்லம்
தரிசிக்கும் பாக்கியம்
நமக்குக் கிட்டவில்லை.
அங்கு உங்கள்
இருப்பிடங்கள்
இல்லையாமே
என்பதற்காக அல்ல.
மனசுக்குள் ஏதோ
குற்றமாகக்குடைகிறது.

தேசத்துக்குப்பதில்
தேகம் நேசித்தோம்.
பொறுப்புக்குப்பதில்
பொருள் தேடினோம்.
சுபீட்சத்துக்குப்பதில்
சுகம் நாடினோம்.
எஞ்சியுள்ள நம்
மானுடப்பிறவிக்கு
மதிப்புதான் என்ன
இந்த வையகத்தில்?

-ஈழம் சேகுவாரா,

### உண்மை



உண்மையில் தான்
என் காதல்
வாழ்கிறது என்றாய்
உண்மையைச்
சொன்னால்
கண்ணீரை
மட்டுமல்லவா
தருகின்றாய்
உண்மையை விட
வாழ்கின்றது என்
கண்களுக்குள்
கண்ணீராய்
உன் நினைவுகள்

யோ.யாழ்,
பரந்தன்,

### கார்த்திகைப் பூவே


கார்த்திகைப் பூவே
கார்த்திகை மாதத்தில்
கண்ணெதிரே தோன்றி நிற்கும்
பல வண்ண மலரே
கார்த்திகைப்பூவே

உன் சொந்தங்களை நினைவு கூர
நலிந்த எம் இனத்துக்கும் தெம்பூட்ட
காலம் தப்பாது
கார்த்திகையில் மலர்ந்தாயோ!

அதிகார வர்க்கங்களின்
அடாவடிப் பாய்ச்சலுக்குள்ளே
அடங்கிப் போன எம்மவரை
ஆற்றிவிட வந்தாயோ!

உன்னால் முடிகிறதே
உயர்ந்தோரை இந்தமாதம் நினைவு கூர
ஆனால்
எம்மால் முடியவில்லையே
வெட்டுகிறோம் உனைப்பார்த்து

நலிந்து போன எம்மவர் ஓர் நாள்
வலிந்தோராகும் காலம் வரும்
அன்று உன் கனவு நனவாகும்
சரித்திரத்தில் எமக்கோர் இடம் உருவாகும்



-வன்னியூர் சோபா,
விசுவமடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்டமிழக்காது 63

**- அளாப்பி**



கிரிக்கெட் விளையாட்டு வரலாற்றில் நிகழ்ந்த துர்மரணம் ஒன்று உண்டென்றால் அது ஆஸ்திரேலிய வீரர் பிலிப் ஹியூஸின் மரணமாகவே இருக்கும். அவரது கிரிக்கெட் பயணம் மிகவும் ஆரோக்கியமாக வளர்ந்து வந்த நேரத்தில் இந்தத் துயரம் ஏற்பட்டு கிரிக்கெட் உலகை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

## ஹியூஸின் கிரிக்கெட் பயணம்

இவரது முழு பெயர் பிலிப் ஜோயெல் ஹியூஸ். நவம்பர் 30, 1988இல் அவர் நியூசவுத்வேல்ஸில் பிறந்தார். அவரது பிறந்த தினத்துக்கு 3 நாள்களுக்கு முன்னதாகவே மறைந்து போனான் இந்தக் கிரிக்கெட் நட்சத்திரம்.

26 டெஸ்ட் போட்டிகளில் 32.65 என்ற சராசரியுடன் 1535 ஓட்டங்கள் எடுத்துள்ளார். அதிகபட்சமாக தென்னாபிரிக்காவுக்கு எதிராக 160 ஓட்டங்களைத் தன்னுடைய உயர் பெறுமதியான ஓட்டமாகக் கொண்டுள்ளார். 3 சதங்கள் மற்றும் 7 அரைச் சதங்கள் எடுத்துள்ளார்.

ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில், 25 ஆட்டங்களில் 826 ஓட்டங்கள். 2 சதங்கள், 4 அரைச் சதங்கள். சராசரி 35.91.

## 18 வயதினிலே...

தனது 18 ஆவது வயதில் நியூசவுத் வேல்ஸ் அணிக்காக டஸ்மேனியா அணிக்கு எதிராக புராக் கிண்ணப்போட்டியில் முதன் முதலில் அறிமுகமானார். தொடக்க வீரராகக் களமிறங்கி 51 ஓட்டங்கள் எடுத்தார்.

பெப்ரவரி 2008 இல் புராக்கிண்ண இறுதிப் போட்டியில் விக்டோரியா அணியை டஸ்மேனியா அணி வெற்றி கொண்டது. அந்தப் போட்டியில் முதல்தர ஆட்டமொன்றில் ஆஸ்திரேலியாவில் 19வயதில் சதம் எடுத்த இளம்வீரர் என்ற சாதனையை ஹியூஸ் நிகழ்த்தினார்.

பெப்ரவரி, 2009இல் இளம் கிரிக்கெட் வீரருக்கான பிரட்மன் விருதைப் பெற்றார் பிலிப் ஹியூஸ். அப்போதுதான் மத்யூ ஹெய்டன் ஓய்வு முடிவைஅறிவிக்க, அவரது மிகப்பெரிய இடத்தை இந்த இளம் பிலிப் ஹியூஸ் இட்டு நிரப்ப ஆஸ்திரேலிய அணிக்கு அழைக்கப்பட்டார். ஜொகான்னஸ்பேர்க் மைதானத்தில் டேல் ஸ்டெய்ன், மோர்னி மோர்கெல், மக்கயா நிட்டினி ஆகியோருக்கு எதிராகத் தொடக்க வீரராகக் களமிறங்கினார். ஆனால் முதல் இன்னிங்ஸில் 4 ஆவது பந்தில் டேல் ஸ்டெய்ன் பந்தில் மார்க் பவுச்சரிடம் பிடிகொடுத்து வெளியேறினார். இதே மார்க் பவுச்சரும் கடந்த 2012ஆம்ஆண்டுகிரிக்கெட்டால்கண்பார்வையைப் பறிகொடுத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

2 ஆவது இன்னிங்ஸில் 121 பந்துகளில் 11 பவுண்டரி 1 சிக்ஸருடன் 75 ஓட்டங்கள் எடுத்தார். ஆஸ்திரேலியா 207 ஓட்டங்களில் மடிந்தது. ஆனால் பிலிப் ஓட்டங்களை எடுத்தார். அனைத்து ஷோட் பிட்ச் பந்துகளையும் பொயிண்ட், ஸ்லிப் திசைகளில் தூக்கி அடித்தார் அவர். ஆஸ்திரேலியா அந்தப் போட்டியில் வென்றது. பிலிப் ஹியூஸ் 2 ஆவது இன்னிங்ஸில் 3 பிடியெடுப்புகளையும் நிகழ்த்தினார்.

## இரு இன்னிங்ஸ்களிலும் சதம்

அதே தென்னாபிரிக்கத் தொடரில் 2ஆவது டெஸ்ட் போட்டி டேர்பனில் நடைபெற்றது. இரு இன்னிங்ஸ்களிலும் சதம் கண்டார் பிலிப் ஹியூஸ். அதாவது 115 மற்றும் 160 ஓட்டங்களை எடுத்தார். 20 வயதில் இரு இன்னிங்ஸ்களிலும் சதம் எடுத்து புதிய சாதனை படைத்தார். இது மார்ச் 2009 இல் நடைபெற்றது.

ஆயினும் 2009 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஷோட் பிட்ச் பந்துகளை எதிர்கொள்வதில் பெரும் பிரச்சினைகளை ஹியூஸ் சந்தித்ததால் ஆஷஸ் தொடரில் 2 டெஸ்ட் போட்டிகளுக்குப் பிறகு டெஸ்ட் அணியிலிருந்து நீக்கப்பட்டார். ஷேன் வொட்சன் அப்போது இவருக்குப் பதிலாக சைமன் கடிச்சுடன் தொடக்க வீரராகக் களமிறக்கப்பட்டார்.

## மீண்டும் டெஸ்ட் வாசம்

ஜனவரி மாதம் பாகிஸ்தானுக்கு எதிரான ஒரு டெஸ்ட் போட்டி கொண்ட தொடரில் ஆட ஹியூஸ் அழைக்கப்பட்டார். காரணம் அப்போது கடிச் காயமடைந்தார். பிறகு வொட்சன் காயமடைய வெலிங்டனில் நியூசிலாந்துக்கு எதிராக 2 ஆவது இன்னிங்ஸில் வெற்றி பெற 106 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில், 75 பந்துகளில் 12 பவுண்டரி ஒரு சிக்ஸருடன் 86 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் வெற்றிபெற்றுக் கொடுத்தார்.

டிசம்பர் 2010 இல் சைமன் கடிச்சுக்கு காயம் ஏற்பட மீண்டும் ஆஷஸ் தொடரில் கடைசி 3 டெஸ்ட் போட்டிகளுக்கு அழைக்கப்பட்டார் ஹியூஸ். ஆனால் மீண்டும் ஷோட் பிட்ச் எனும் துர்க்கனவு அவரைத் துரத்தியது. சரியாக ஆட முடியவில்லை.

இந்த நிலையில் சைமன் கடிச்சின் கிரிக்கெட் வாழ்வை கிரெக் சாப்பல் முடித்து வைக்க பிலிப் ஹியூஸ் தனது டெஸ்ட் இடத்தைத் தக்க வைத்தார். இது அப்போது சர்ச்சையானது. ஆனால் அந்தத் தொடரில் இலங்கைக்கு எதிராக 3 ஆவது டெஸ்ட் போட்டியில், கொழும்பில் 126 ஓட்டங்கள் எடுத்து தனது 3 ஆவது டெஸ்ட் சதத்தை 2 ஆண்டுகள் கழித்து எடுத்தார் பிலிப் ஹியூஸ்.

2011ஆம் ஆண்டு நியூஸிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் 4 இன்னிங்ஸ்களிலும் வேகப்பந்து வீச்சாளர் கிறிஸ் மார்ட்டினின் வெளியே செல்லும் பந்துகளைத் தொட்டு ஹியூஸ் ஆட்டமிழந்தார். இதனைத் தொடர்ந்து இந்தியாவுக்கு எதிரான தொடரிலிருந்து நீக்கப்பட்டார்.

மீண்டும் டிசம்பர் 2012-ஆம் ஆண்டு இலங்கைக்கு எதிரான ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற தொடரில் ஆடி, இரண்டு அரைச்சதங்களை எடுத்தார்.

## அறிமுகப் போட்டியில் சதம்

நீண்ட காலக் கனவுக்குப் பிறகு ஆஸ்திரேலிய ஒருநாள் கிரிக்கெட் அணியில் அவர் தேர்வு செய்யப்பட்டு ஆடவைக்கப்பட்டார். மெல்போர்னில் இவர் இலங்கைக்கு எதிராக அறிமுக ஒருநாள் போட்டியில் சதம் எடுத்துச்சாதனை படைத்தார். பிறகு ஹோபார்ட்டிலும் இலங்கைக்கு எதிராக 138 ஓட்டங்களை எடுத்தார்.

பெப்ரவரி 2013 இல் ஆஸ்திரேலியாவின் சிறந்த உள்நாட்டு வீரர் என்ற விருதைப் பெற்றார். அந்த ஆண்டு அனைத்து வடிவக் கிரிக்கெட் போட்டிகளிலும் சேர்த்து 1108 ஓட்டங்களை எடுத்தார் பிலிப் ஹியூஸ்.

2013 ஆம் ஆண்டு ஆஷஸ் தொடரில் அவர் 6ஆம் நிலையில் களமிறங்கி முதல் டெஸ்ட் போட்டியில் 81 ரன்கள் எடுத்தார். ஆனால் அடுத்த டெஸ்ட் போட்டியில் இரண்டு இன்னிங்ஸ்களிலும் தலா ஒவ்வொரு ஓட்டத்தை மாத்திரமே எடுத்ததால் மீண்டும் அணியிலிருந்து நீக்கப்பட்டார்.

ஆஸ்திரேலியா 'ஏ' அணிக்காக ஜூலை 2014 இல் தென்னாபிரிக்கா 'ஏ' அணிக்கு எதிராக டார்வின் மைதானத்தில் ஒருநாள் கிரிக்கெட்டில் 202 ஓட்டங்களை அடித்து இரட்டைச் சதமொன்றை 'ஏ' அணிக்காக அடித்த முதல் ஆஸி.வீரரானார்.

கடைசியாக ஒக்ரோபர் 12, 2014இல் பாகிஸ்தானுக்கு எதிராக கடைசியாக ஒரு நாள் போட்டி ஒன்றில் ஆஸ்திரேலியாவுக்காக ஆடினார். பின்னர் உள்ளூர்ப் போட்டியில் தன் திறமையை நிரூபித்து மீண்டும் அணிக்குள் நுழையத் தயாரானார் ஹியூஸ். எதிரணியின் பந்து வீச்சை சிதறடித்து, ஆட்டமிழக்காமல் 63 ஓட்டங்களை ஹியூஸ் பெற்றிருந்த போதே எதிர்பாராத விதமாக் ப்வுன்ஸர் பந்துக்கு இரையாகி, அவர் நவம்பர் 27 ஆம் திகதி உயிர்விட நேர்ந்தது. தன் இறுதிப் போட்டியில் கூட ஆட்டமிழக்காமல் 63 ஓட்டங்களைப் பெற்ற வீரனை காலம் வாழ்க்கைப் போட்டியில் ஆட்டமிழக்கச் செய்துவிட்டது.

## பிலிப் ஹியூஸ்: சாதாரண குடும்பத்துச் சாதுவான வீரன்

பிலிப் ஹியூஸ் , ஆஸ்திரேலியாவின் இளம் கிரிக்கெட் வீரன். ஆஸ்திரேலியக் கிரிக்கெட்டின் நம்பிக்கை நட்சத்திரம். உள்ளூர்ப் போட்டியொன்றில் வேகப்பந்து வீச்சாளர் ஒருவரின் 'பவுன்ஸர்' பந்து (தலையை நோக்கி வேகமாக மேலெழுந்து வரும் விதமான பந்துவீச்சு ) ஒன்றினைத் துணிவு டன் எதிர்த்து கிரிக்கெட்டின் வேகமானதும் துணிவானதுமான'ஃபுல் ஷொட்' முறையில் அடித்தாட முற்பட்டார். அப்போது அவரது பந்தை நோக்கிய கணிப்பும் மட்டையைச் சுழற்றி அடித்த கால இடைவெளியும் தவறியது. வேகமாக மேலெழுந்த பந்து அவரது தலையை மிக வேகமாகத் தாக்கியது. விளையாடும் போது துடுப்பாட்ட வீரர்கள் அணிய வேண்டிய தலைக்கவசத்தை அவர் அணிந்திருந்தும் அந்தக் கவசத்தின் கீழ்ப்பகுதியைத்தாண்டி பந்து தாக்கியது. இதனால் அவரது மூளையில் இரத்தக் கசிவு ஏற்பட்டு உடனேயே மயக்கமாகி கோமா நிலைக்குச் சென்றார். தீவிர சத்திர சிகிச்சையின் பின்னர் அவர் இறந்துவிட்டார் என கிரிக்கெட் ஆஸ்திரேலியாவால் உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

முழு ஆஸ்திரேலியாவையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ள இந்த இளம் வீரனுக்கு விபத்து நடக்கும் போது மைதானத்தில் அவனது தாயாரும் சகோதரியும் அவனது விளையாட்டை ஆவலுடன் பார்க்க வந்திருந்தார்கள்.

இந்த வாரம் இந்தியாவுடன் நடைபெறவுள்ள முதலாவது டெஸ்ட் போட்டியில் மைக்கல் கிளார்க்குக்காக மூன்றாவது துடுப்பாட்ட வீரனாக களமாடத் தெரிவு செய்யப்பட்டிருந்த இந்த இளம் வீரன் எம்மைப்போன்றே சாதாரணமானவன். எந்தப்பெரிய பகட்டோ பெரிய கிரிக்கெட் ஆசிரியர்களின் பயிற்சியோ பெறாமல் ஆஸ்திரேலியாவின் பிரபலமில்லாத சிறிய நகரிலிருந்து தனது திறமை ஒன்றினால் மட்டுமே சிட்னிக்கு வந்தவன். தாய், தந்தை, சகோதரியுடன் மிக அன்பாக வாழ்ந்துவந்த இளைஞன். கிரிக்கெட் மைதானத்தில் தூஷணை வார்த்தைகளை எதிரணி மீது பிரயோகித்துவிட்டு அதுவும் கிரிக்கெட்டின் ஒரு பகுதி எனக் கூறாத வீரன்.

இந்த இளைஞனுக்கு சிறு வயதிலிருந்தே ஜீனியஸ் கிரிக்கெட் மேதை ஒருவர் மீது அதீத வாஞ்சையும் அளப்பரிய பிரமிப்பும், மிகப்பெரிய மரியாதையும் இருந்து வந்தது. அந்த வீரரை எப்படியாவது சந்திக்க வேண்டுமென்ற இலட்சியத்துடன் தான் பிறந்த சிறு நகரத்தில் வாழ்ந்துவந்தவன். கிரிக்கெட்டில் ஓரளவு பிரபலமாகி ஆஸ்திரேலியக் கிரிக்கெட் சபையால் அடையாளம் காணப்பட்டு உலகின் சிறந்த கிரிக்கெட் வீரர்களுடன் விளையாடும் / சந்திக்கும் வாய்ப்பு மெது மெதுவாக ஹியூஸுக்கும் ஏற்பட்டது. அப்போது அவனது கனவு நாயகனைச் சந்திக்கும் வாய்ப்பும் ஏற்பட்டது. அவனுக்கு மிகவும் பிடித்த அந்தக் கிரிக்கெட்மேதையைச் சந்திக்கும் நாளில் அவருக்காக காத்திருந்து வந்தவுடன் அவரைத் தழுவி தனது அன்பைத்தெரிவித்த கிரிக்கெட் ரசிகன் ஹியூஸ். ஹியூஸின் கனவு நாயகன் வேறு யாருமல்ல, சச்சின் டெண்டுல்கர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ சுடுதண்ணி


இவையனைத்துக்கும் மேலாக மைக்கெல்லின் மெர்சிடஸ் சி250 வாகனம் விபத்துக்குள்ளான விதம் மிகவும் சந்தேகத்துக்குரியது. அதிவேகத்தில் சென்று மரத்தில் மோதிய வாகனங்கள் எதற்கும் மைக்கெல்லின் வாகனத்துக்கு ஏற்பட்ட நிலைமை ஏற்பட்டதில்லை. வாகனத்தின் இயந்திரம் சுமார் 100 அடி தூரத்துக்கு மேலாகத் தூக்கியெறியப்பட்டதும், பலத்த வெடிச்சத்தத்துடன் வாகனம் தீப்பிடித்து எரிந்து அடையாளம் காண முடியாத அளவுக்கு தீக்காயங்களுடன் சம்பவ இடத்திலேயே மைக்கெல் பலியான விதமும் பலத்தவிவாதங்களைக் கிளப்பின.

அதிநவீன இலத்திரனியல் சாதனங்களைக் கொண்ட வாகனங்களை எங்காவது இருந்து இயக்கும் வண்ணம் இலத்திரனியல் சாதனங்களை மாற்றியமைத்தோ அல்லது கட்டுடைத்தோ விபத்துக்குள்ளாக்கும் வித்தை அமெரிக்க உளவு நிறுவனங்களுக்கு கைவந்த கலை.மைக்கெல் எழுதிக் கொண்டிருந்த கட்டுரை வெளிவந்தால் மேலும் அம்பலப்பட்டு அசிங்கப்பட்டுப் போவோம் என்ற காரணத்தால் அமெரிக்க உளவு அமைப்பினரே காரில் வெடி வைத்தார்கள் என்றும் பரவலாக நம்பப்படுகிறது. உத்தியோகபூர்வமாக அப்படி எதுவும் நடக்கவில்லை, அதற்கான ஆதாரங்களும் இல்லை. இது வெறும் விபத்து மட்டுமே என்று கோப்புகளை உயிருக்கு ஆபத்து வரும் என்பதை உணர்ந்து மௌனித்துப் போனார் என்றும் நம்பப்படுகிறது. அனைத்து தரப்பின ரும்





# இரைதேடும் இணைய வலை



மைக்கெல் பயணித்த மெர்சிடஸ் சி250 வாகனத்தின் இயந்திரப் பகுதி

மூடி வைத்து விட்டது அமெரிக்கப் பொலிஸ்.

ஆரம்பத்தில் இதற்குக் காரணமான வர்களை பழிவாங் கியே தீருவேன் என்று கொந்தளித்த மைக்கெலின் மனைவி எலைஸ் ஜோர்டான், பின்னர் அது ஒரு துன்பியல் சம்பவம் என்று கூறி ஆச்சரிய மளிக்கும் வகையில் அமைதியாகிப் போனார். முன்னாள் அமெரிக்கச் செயலர் கொண்டலீசா ரைஸின் அலுவலகத்தில் சிறிது காலம் பணிபுரிந்த எலைஸ் தனது தொடர்புகள் மூலம் அமைதி காத்த நேரத்தில் தான் மைக் கெல்லின் எப்.பி.ஐ விசாரணை குறித்தான மின் னஞ்சல் வெளிவந்து புயலைக் கிளப்பியது, ஆரம்பத் தில் நாங்கள் மைக்கெல் ஹாஸ்டிங் கையோ அல்லது அவர் சம்பந்தப்பட்டவர்களையோ விசாரிக்கவே இல்லை, இல் லவே இல்லை என்று கைகளை அகல விரித்த எப்.பி.ஐ பின் னர் நீதி மன்றில் வழக்குத் தொடர்ந்த பிறகு சரியாக விபத்து நடப் பதற்கு ஒரு வருடத்துக்கு முன் மைக் கெல் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டதாக ஒத்துக் கொண்டது. இருந்தாலும் இன்று வரை மைக்கெலின் மரணம் ஒரு ஊரறிந்த ரகசியமாக உறங்கிக் கொண்டிருக்கிறது.

(வலை விரியும்)

# இழந்தோம் எஸ்.பொ.வை

இலங்கையின் முதன்மை எழுத் தாளர்களில் ஒருவரும் , ஆஸ்திரே லியாவில் வசித்தவருமான எஸ்.பொ என அழைக்கப்படும் எஸ். பொன்னுத்துரை சிட்னியில் 26 கார்த்திகை 2014 அன்று காலமானார்.

ஜூன் 4ம் திகதி , 1932, நல்லூர், யாழ்ப்பாணத்தில் பிறந்தவர் எஸ்.பொ. பின்னர் அண்ணா மலைப் பல்கலைக் கழகத்திலும், சென்னை கிறித்தவக் கல்லூரியி லும் உயர்கல்வி பயின்றார்.



நைஜீரியாவில் ஆங்கிலத்துறையில் தலைவராகப் பணியாற்றிய இவர் மட்டக்களப்பில் ஆசிரியராகவும் அதிபராகவும் பணியாற்றினார். நாவல், சிறுகதை, நாடகம், கவிதை, பத்தி எழுத்து, விமர்சனம் முதலிய துறைகளிலும் ஆளுமையுடன் செயலாற்றினார்.

இலங்கையில் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தீவிரமாகச் செயற்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் அதிலிருந்து விலகி நற்போக்கு அணியைத் தொடக்கினார்.

ஆஸ்திரேலியாவில் சிறிது காலம் வெளிவந்த அக்கினிக்குஞ்சு என்ற சர்வதேச இதழின் கௌரவ ஆசிரியராக விளங்கியவர். செம்பென் ஒஸ்மான என்ற செனகல் நாட்டு எழுத்தாளர் எழுதிய ஹால் என்ற நாவலை மொழிபெயர்த்துள்ளார். மற்றும் நுகுகி வா தியங்கோ என்ற கென்யா நாட்டு இலக்கிய எழுத்தாளரின்,,Weep Not Chil- என்ற நாவலை தமிழில் தேம்பி அழாதே பாப்பா என்று மொழிபெயர்த்துள்ளார்.

இவரது நேர்காணல்கள், கட்டுரைகள் அடங்கிய 'இனி ஒரு விதி செய்வோம்' என்ற நூலும் வெளிவந்துள்ளது. சுமார் இரண்டாயிரம் பக்கங்களில் வரலாற்றில் வாழ்தல் என்ற தமது சுய வரலாற்று நூலையும் எஸ்.பொ. எழுதியுள்ளார். சென்னையில் 'மித்ர' பதிப்பகத்தின் மூலம் நூல் வெளியீடுகளிலும் ஈடுபட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவருக்கு தமிழ் இலக்கியத் தோட்டத்தின் 2010 க்கான வாழ்நாள் இயல் விருது வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வார இராசி பலன்

**03.12.2014 –09.12.2014**

**மேஷம்**

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

வாழ்வின் அர்த்தம் உணர்ந்து பணிபுரிவீர்கள். அதிக நன்மையும், மகிழ்ச்சியும் உருவாகும். பூர்வ சொத்தில் விவகாரம் விலகி, எண்ணம் நிறைவேற வாய்ப்பு வரும். விருந்து, விசேஷத்தில் கலந்து கொள்வீர்கள். இல்லறத்துணை விரும்பிய பொருள் வாங்கி தருவீர்கள். பணியாளர்கள், நிர்வாகத்தின் கூடுதல் அன்பை பெறுவீர்கள். பெண்கள் புத்தாடை, அணிகலன் வாங்க, தாராள பணவசதி துணை நிற்கும். மாணவர்கள், ஞாபகத்திறன் வளர்ந்து, கூடுதல் தேர்ச்சி பெறுவர்.

**ரிஷபம்**

**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

எதிர்ப்பு விலகி, வாழ்வில் முன்னேற புதிய வழி பிறக்கும். உடன் பிறந்தவர்களின் உதவி கிடைக்கும். வீடு, வாகனத்தில் கூடுதல் பயன்பாடு பெற, சிலமாற்றம் செய்வீர்கள். புத்திரரின் மனக்குறையை கனிவுடன் கேட்டு, நிவர்த்தி செய்வீர்கள். பணக்கடனில் ஒரு பகுதி செலுத்துவீர்கள். இல்லறத்துணையிடம் குடும்ப விவகாரம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் புதியவர்களின் ஆதரவு கிடைத்து, பணவரவு கூடும்.

**மிதுனம்**

**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

சுகபோக வாழ்வு அமைந்து மகிழ்வீர்கள். தாய்வழி உறவினர் கூடுதல் அன்பு பாராட்டுவர். புத்திரரின் கவனக்குறைவை கண்டிப்பதில் நிதானம் வேண்டும். எதிர்ப்பாக நடந்தவரும், உங்களிடம் மறைமுகமாக உதவி பெற முயற்சிப்பர். இல்லறத்துணையின் உடல் நலத்திற்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். கூடுதல் உழைப்பால், தொழில் வியாபார நடை முறையை சீர் செய்வீர்கள். பணியாளர்கள், கால அவகாசத்தில் இலக்கு நிறை வேற்றுவீர்கள்.

**கடகம்**

**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

சிலரது வாழ்வில் மங்கள நிகழ்வு உருவாகும். குடும்பத் தேவை நிறைவேற்ற, பணவசதி துணை நிற்கும். புத்திரரின் சேர்க்கை, சகவாசம் அறிந்து வழி நடத்தவும். உடல் நல ஆரோக்கியம் பலம் பெறும். இல்லறத்துணை ஒற்றுமையுடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் உருவாகிற குளறுபடி, நல்லவர்களின் உதவியால் மாறும். பணியாளர்களுக்கு, சலுகை கிடைக்கும். பெண்கள், தெய்வ வழிபாடு நடத்துவீர்கள்.

**சிம்மம்**

**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

எதிர்பார்ப்புகளை வெல்லும் திறன் பெறுவீர்கள். குடும்பத்தேவையை தாராள பணச்செலவில் பூர்த்தி செய்வீர்கள். புத்திரர், தயக்கமின்றி நல்ல கருத்துகளை உங்களிடம் பகிர்ந்து கொள்வார். இல்லறத்துணை வழிசார்ந்த உறவினர் உதவுவர். தொழில், வியாபார வளர்ச்சியில், புதிய இலக்கு அடைவீர்கள். பணியாளர்கள், கூடுதல் வேலை வாய்ப்பு, சன்மானம் பெறுவர்.

**கன்னி**

**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்**

நலம் விரும்புவர்களின் ஆலோசனையை கேட்டு செயல்படுவது நல்லது. புதிய வாய்ப்புகளை பலன் உணர்ந்து மேற்கொள்ளுங்கள். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரரின் விருப்பத்தை ஓரளவு நிறைவேற்றுவீர்கள். வெளியூர் பயணம் செல்வதில் இருந்த ஆர்வம் குறையும். இல்லறத்துணை, உங்களின் கவுரவம் சிறக்க வழிசொல்வார். தொழில், வியாபாரத்தில் சில மாற்றம் செய்வது அவசியமாகும்.

**துலாம்**

**சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

புதியவர்களின் அன்பு மனதில் நெகிழ்ச்சி தரும். வீடு, வாகனத்தில் அபிவிருத்தி பணி செய்வீர்கள். புத்திரர் உங்கள் பார்வையில் இருந்து விலகாமல் நற்பெயர் பெறுவதில் கவனம் கொள்வார். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நிறைவேறும். இல்லறத்துணை கூடுதல் அன்பு பாராட்டுவார். தொழில், வியாபாரத்தில் லாப விகிதம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். பெண்கள், குடும்ப நலன் பேணுவதில் அக்கறை கொள்வீர்கள். மாணவர்கள், ஒவ்வாத உணவு வகை உண்ண வேண்டாம்.

**விருச்சிகம்**

**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

அடுத்தவரின் பார்வையில் உங்களின் பணி, சிறப்பான தோற்றம் தரும். முருகப் பெருமானின் நல்லருளால், வாழ்வியல் நடைமுறை சிறப்பு பெறும். உடன் பிறந்தவர் உதவுவர். வீடு, வாகன பாதுகாப்பில் உரிய கவனம் வேண்டும். புத்திரரின் மனவருத்தத்தை சரி செய்வீர்கள். பூர்வ சொத்தில் பணவரவு கூடும். இல்லறத்துணையின் கருத்துக்கு ஏற்ப நடந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் இலக்கு நிறைவேற, அவகாசம் தேவைப்படும்.

**தனுசு**

**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

எதிர்கால வாழ்வின் நன்மைக்காக, சில நடவடிக்கைகளை மேற்கொள்வீர்கள். பேசுவதில் நிதானம் வேண்டும். உடன் பிறந்தவர் உதவி வழங்குவர். நீண்டதூர பயணங்களில், பாதுகாப்பு பின்பற்றவும். புத்திரர் செயல்களில் குளறுபடி எதிர்கொள்வர். எதிரியால் வருகிற தொல்லை விலகும். இல்லறத்துணை நல்ல அன்பு, பாசம் கொள்வார். தொழில், வியாபாரம் அதிக உழைப்பால் சீராகும். பணியாளர், கடமை உணர்ந்து செயல்பட வேண்டும்.

**மகரம்**

**உத்தராடம் 2,3,4ஆம்பாதங்கள்,திருவோணம்,அவிட்டம்1,2ஆம்பாதங்கள்**

புதிய செயல் நிறைவேற, ஆன்மிக அருள்பலம் துணை நிற்கும். தாய்வழி உறவினர், கூடுதல் அன்பு பாராட்டுவர். குடும்பத்தில் மங்கல நிகழ்வு உண்டாகும். புத்திரர் உங்கள் சொல் கேட்டு நடந்து, பெருமை தேடித்தருவர். வழக்கில் சாதகத் தீர்வு பெற, அனுகூலம் உண்டு. இல்லறத்துணையின் அன்பு நிறைந்த செயல், சில நன்மைகளை பெற்றுத் தரும். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழித்து, ஆதாய பணவரவு கிடைக்கும். பணியாளர் பாராட்டு வெகுமதி பெறுவர்.

**கும்பம்**

**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம் 1, 2, 3ஆம் பாதங்கள்**

அரசு தொடர்பான உதவி கிடைப்பதில், அனுகூலம் உண்டு. புதிய திட்டத்தை உரிய பரிசீலனைக்கு பின், செயல்படுத்தலாம். அக்கம் பக்கத்தவரிடம் அதிகம் பேச வேண்டாம். வாகன பயன்பாட்டை அளவுடன் மேற்கொள்வீர்கள். புத்திரரின் படிப்பு, அறிவுத்திறனில் மேம்பாடு ஏற்படும். இல்லறத்துணையின் கருத்துக்கு முக்கியத்துவம் தருவதால், ஒற்றுமை சீராகும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிபெற, சில மாற்றம் செய்வீர்கள்.

**மீனம்**

**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

தாராள பணவரவு கிடைத்து, குடும்பத்தேவை எளிதில் பூர்த்தியாகும். அன்புக்கு உரியவர் உங்கள் பேச்சை ரசிப்பர். வீடு, வாகனத்தில் கூடுதல் பாதுகாப்பை பின்பற்றவும். புத்திரர் உடல்நலம் பலம் பெற, சத்து நிறைந்த உணவு தருவது நல்லது. விவகாரங்களில் சமரசத் தீர்வு உருவாகும். இல்லறத்துணை வழி சார்ந்த உறவினர், உதவிகரமாக் நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் வருகிற இடையூறை, தாமதமின்றி சரி செய்யவும்.


# சுதந்திர வேட்கை

அடேல் பாலசிங்கம்

## விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு 63

அநாதரவான துயர் தோய்ந்த இத்தனை பெருந்தொகைத் தமிழ் அகதிகள் திடீரென்று தமிழ் நாட்டுக் கிழக்குக் கரைகளிலே போய் இறங்கிய போது இத்தகைய் பாரிய மனித அவலத்தைச் தேற்ற தமிழ் நாடு அதிகாரிகள் ஆயத்தம் எதுவும் இல்லாது, வழி தெரியாது திகைத்தார்கள். உள்ளூர் வாசிகள் சூறாவளியால் பாதிக்கப்பட்ட போது , காற்று மழையில் இருந்து காப்பாற்றத் தற்காலிகமாகக் குடியேறும் வட்ட வடிவிலான கட்ட டங்கள் கரை நீளம் இருந்தன. மன்னாரில் இருந்து வந்த தமிழ் அகதிகளுக்கு அவையே வீடுகளாயின. தமிழ் நாடு, கோவளத்துக்குப் பயணம் புரிந்து அவர்களுடைய நிலையைக் கேட்டறிந்து , அவற்றின் அடிப்படையில் , " புலிகளின் குரலுக்கு" கட்டுரை எழுதத் தீர்மானித்தேன்.

உள்ளே அறைகள் இல்லாத வட்ட வடிவக் கட்டடங்களே இந்தச் சூறாவளிக் காப்பங்கள். தமிழ் நாடு கிழக்குக் கரை நீளம் இவை நிறுவப்பட்டு இருக்கின்றன. கரையோரப் பகுதிகளில் சூறாவளிக் காற்று சீறி அடிக்கும் போது , சுற்றி வர உள்ள கிராமத்தவர்களுக்குக் காப்பிடமாகக் அமையும் வண்ணம்




இவை நிறுவப்பட்டு இருந்திருக்கின்றன. இந்திரா காந்தி யின் மறைவுக்குப் பின்னர் 1984 இலே தமிழ் நாடு அத்தகைய ஒரு பேரிடரைச் சந்தித்தது. நடுங்கச் செய்யும் இந்த இயற்கையின் சீற்றத்தைக் நான் நேரிலே கண்டிருந் தேன். இந்தச் சூறாவளி , தனது வழியில் எதிர்ப்பட்ட அனைத் தையும் வேரோடு சாய்த்திருந்தது. இடுப்பளவு ஆழ மான அழுக்கு நீரையும் பரவியிருந்தது. சென்னையிலும் அது வீறோடு சீறியடித்துக் கடந்து சென்றிருந்தது. ஆகவே உறுதியான காப்பகங்கள் தேவை என்பதை நான் புரிந்து கொண்டேன். ஆனால் அவை அவசரகாலத் தரிப்பிடங்களாகவே இருக்கவே பொருந்தும். சூறாவளியின் போதும், பெரு மழை யின் போதும் அவை உதவும். ஆனால் அவை அவச ரகால தரிப்பிடங்களாக இருக்கவே பொருந்தும். சூறாவளியின் போதும் பெருமழையின் போதும் அவை உதவும். ஆனால் அகதிகளை நிரந்தரமாகத் தக்க வைக்க அவை போதுமானவை அல்ல.

அந்தக் கட் டடம் ஒன்றுக்குள் நுழைந்த போது எனது இதயம் உறைந்து போனது. எங்கும் கூட்டம் கூட்டமாக ஈக்கள் மொய்த்துக் கொண்டிருந்தன. அறைகள் இல்லாத அந்தப் பெரும் கூடத்துக்குள்ளே குறுக்கு மறுக்காக கந்தல்களும் பல வர்ணச் சேலைகளும் கட்டப்பட்டிருந்தன.


(பதிவு தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேடல்கள்

மகேஷ்



சுகுணா புரண்டு புரண்டு படுத்தாள். தூக்கம் வரவில்லை.
வேதனைகளால் அலங்கோலப்படுத்தப்பட்ட எண்ணங்கள் அவளின் தூக்கத்தைக் கெடுத்தன. கண்கள் அழுதழுது வரண்டு போயின. அவனை எதிர்பார்த்து எதிர் பார்த்தே, எண்ணங்களில் அவன் வருவான் என்ற நம்பிக்கையை மலையாக்கி கொண்டே கண் மூடாமல் விழித்திருந்தாள்.
இறுதியில் பாண்டியன் மாமா சொல்லிவிட்டுப் போன சங்கதியை இரகசியமாக நடைமுறைப்படுத்தலாம் என்ற துணிவோடு அவள் தூக்கத்தை வேண்டிக் கண்களை மூடினாள். தூக்கமோ நீண்ட நேரமாக அவளை அணுகாமல் அலைக்களித்தது. கண்களை மூடினாலும் விரியும் எண்ணக் கனவுகளால் தூக்கம் பல துண்டுகளாக அறுந்தது.
விடியும் பொழுதில் கண்களைச் சிறிது தூக்கம் அணைக்க உறங்கி விட்டாள்.
நன்றாக விடிந்ததும் வாசலில் அவளை அழைத்த பாண்டியன் மாமாவைக் கண்டதும் அவளுக்குள் ஒரு வேகம் பிறந்தது.
இந்தமுறை அவனைத் தேடி அவன் எங்கிருக்கிறான் என்பதை எப்படியாவது கண்டறிந்து விடலாம் என்ற ஆவல் மிகுந்தது. பாண்டியன் மாமாவின் அன்பினால் அவளுக்கோர் ஆறுதல் தான். எனினும் எவர் அருகிலிருந்த போதிலும் சுகுணா அனைத்தையும் இழந்தவளாகி இன்னமும் தனிமை உணர்விலேயே மூழ்கி தனக்குள் தானே வருந்துகிறாள். அப்பா அம்மா சகோதரர்கள் என்று ஆறு பேர் கொண்ட கலகலப்பான பெரிய குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவள் சுகுணா. இந்தப் போர் தந்த துயரத்தில் அந்தப் பெரு நிலப்பரப்பிலிருந்து தாம் கூடி வாழ்ந்த வீடுகளையும், தாம் தேடிச் சேர்த்த செல்வங்களையும் கைவிட்டு வெளியேறிய நாள்கள் பயங்கரமானவை.
பக்கத்து வீட்டுப் பசுபதியும் அவரின் மனைவி பிள்ளைகளும் சமான் சட்டுகளோடு உழவு இயந்திரப் பின்னி முப்புப் பெட்டியில் ஏறிப் புறப்பட்ட போது, அவர்களோடு சுகுணாவும் பெற்றோரும் சகோதரங்களும் தொற்றிக் கொண்டு புறப்பட்ட நாள் இன்னமும் அவளின் நினைவை உறுத்திக் கொண்டே இருந்தன. எங்கே போகிறோம் என்ற இலக்கற்ற புறப்பாடு.
அவர்கள் தாம் பயன்படுத்திய சட்டி, பானை, பெட்டி, படுக்கைகளோடு புதிதாக அவர்கள் கட்டியிருந்த வீட்டின் கதவு யன்னல்களையும் நிலைகளையும் உடைத்துக் கழற்றித் தூக்கிச் சுமந்து திரிந்ததை நினைத்தால் வேதனை விரிவால் அவளது உள்ளம் குமுறும்.
தூக்கிச் சுமந்த பொருள்களை ஆங்காங்கே தொலைத்து. இறுதியில் உயிர் தப்பினால் போதும் என்ற ஆற்றாமையோடு கண்ணீர் விட்டுக் கதறிய அந்த நாள்கள் அவளின் நினைவில் எரி மலையாக இன்றும் புகைந்தன. தம்மைக் காக்கத் தமது பெற்றோர் பட்ட வேதனைகளையெல்லாம் எண்ணியெண்ணி விம்மினாள்.
அவளது கண்ணெதிரிலேயே குண்டுகளுக்கு இரையாகக் கொடுத்த அம்மாவையும் இரண்டு சகோதரிகளையும் நினைத்து நினைத்து பல வேளைகளில் உள்ளம் வெதும்பி அழுவாள்.
அவர்களின் சிதைந்த சடலங்களை எந்தச் சடங்குகளுமின்றி அந்தச் சுடு மணலில் தோண்டிப் புதைத்த காட்சி அவளது நினைவிலெழும் போதெல்லாம் தீச்சுவாலையாகும் எண்ணங்கள்.
தந்தையே முன்னர் என்றுமே உணராத துயரங்களோடு அவளையும் தம்பியையும் இந்தப் போர்ப் புயலில் இருந்து காப்பாற்றிக் கரை சேர்த்திருந்தார். எப்பொழுது பறிபோகும் என்பதை உணர முடியாத நிலையில் துடித்த உயிர்கள். அந்த உயிர்களை கையிலே பிடித்தவாறு முளைத்த அந்த முகாம்களில் ஒன்று தனக்குள் வாரி எடுத்துப் பல மாதங்கள் அவர்களைச் சுகம் கெட வைத்தது.
வாழத் தவிக்கும் உயிர்களைச் சூழ்ந்து நோய் தொட்டு வருத்தத்துக்கு மருந்தின்றி மயங்கி உயிர் விட்டோர் பட்டியலில் அவளது வயோதிபத் தந்தையும் ஒருவரானார். என்ன செய்வதன்றே அறியாது சுகுணா கலங்கினாள்.
யார்யாரோ சிலர் உறவுகளாகத் தோன்ற அவர்களின் உதவியோடு அப்பாவின் இறுதி அடக்கமும் அந்த முகாமிலேயே மௌனமாக நடந்து முடிந்தது.
"எஞ்சி நிற்கும் தம்பி ஒருவனே எனக்குத் துணையாக இருக்கிறான்" என்று சுகுணா ஒருவாறு ஆறுதலடைந்திருந்தாள். என்ற வார்த்தைகளோடு அழைத்துச் சென்றார்கள். அனுக்காக அவனது விடுதலைக்காக அவர்களை நாடி அவள் கண்ணீர் விட்டு அழுது வேண்டிக் கேட்ட போதெல்லாம் "விட்டு விடுவோம்" என்று சொன்னார்களே தவிர அவள் முகாமை விட்டு வெளியேறும் வரை அவளின் கண்ணெதிரில் அவனைக் காட்டவே இல்லை.

**வாழத் தவிக்கும் உயிர்களைச் சூழ்ந்து நோய் தொட்டு வருத் தத்துக்கு மருந்தின்றி மயங்கி உயிர் விட்டோர் பட்டியலில் அவளது வயோதிபத் தந்தையும் ஒருவரானார். என்ன செய் வெதன்றே அறியாது சுகுணா கலங்கினாள்.**

முகாமிலிருந்து தனித்தே வெளியேறித் தனது தூரத்து உறவென்று சொல்லிக் கொண்டே பாண்டியனைத் தேடி அவரின் குடும்பத்தோடு ஒண்டிக் கொண்டாள். குழந்தைகளற்ற அந்தத் தம்பதிகளான பாண்டியனுக்கும் அவரின் மனைவி கோமளத்துக்கும் சில நாள்களிலேயே சுகுணா ஒரு பிள்ளை போல ஆகிப் போனாள்.
அவள் பல வேளைகளில் பாண்டியன் வீட்டாருக்கப் பாரமாக ஆகிவிட்டோமோ? என்று எண்ணிக் கண் கலங்குவதைக் கண்டால் கோமளம் அன்ரி அவளைத் தேற்றி ஆறுதல் கூறுவாள்.
அவர்கள் அழைத்துப் போன அவளது தம்பியை எப்படியாவது விடுவிக்க வேண்டுமே என்ற ஆவலோடு சுகுணா முகாமில் இருந்து வெளியேறிய பின்னரும் பாண்டியன் மாமா வுடன் கூடிக்கொண்டே அந்த முகாமுக்குப் பல முறை சென்று அங்கிருந்தோரைப் பார்த்துப் பரிந்து பேசித் தம்பியை விடுவித்துத் தரும் படி கெஞ்சினாள்.
அவனை " விட்டுவிடுவோம்! விட்டு விடுவோம்!" என்று சொல்லி வந்தவர்கள், ஒரு நாள் அவளிடம் "அவனை விடுதலை செய்து விட்டோமே! என்று சொன்ன போது அவள் அதிர்ந்து போனாள். விடுதலையானவன் இன்னமும் தன்னைத் தேடி வரவில்லையே என்ற ஏக்கத்தோடு "அவன் எங்கே போனான்?" என்று சுகுணா தேடத் தொடங்கினாளாம்.
அறிந்தவர், அறியாதவர் எவரைக் கண்டாலும் ஏக்கத்தோடு தனது தம்பியின் கதை சொல்லிக் கவலைப்படுவாள். எங்கெங்கெல்லாமோ இருந்து பரவும் வதந்திகளைக் கேள்விப்பட்டு அவனைக் கண்டு பிடித்து விட வேண்டும் என்ற வேண்டுதல்களோடு ஊரெல்லாம் சுற்றி அலைவாள். பல இடங்களுக்கும் ஓடித் தேடி அவனை விசாரித்த போதும் அவனைக் கண்டவர்களையோ அவனிருக்குமிடம் அறிந்தவர்களையோ அவளால் கண்டறிய முடியவில்லை.
காணாமற் போனோர் நடத்தும் ஆர்ப்பாட்டங்கள் எங்கே நடந்தாலும் அங்கே கலந்து கொண்டு எப்படியாவது தனது தம்பியைப் பார்த்து விட வேண்டும் என்ற பாசத்தால் அவள் ஓய்வின்றி அலைந்தாள்.
யாரோ ஒருவன், தனது தம்பியை விடுவிக்க ஒரு இலட்சம் கொடுத்தால் உதவிசெய்வதாகக் கூறியதை நம்பினாள். அதற்காக அவள் தனது கழுத்திலும் கைகளிலும் காதிலும் எஞ்சிக் கிடந்த தங்க நகைகளை எல்லாவற்றையும் எவருக்கும் தெரியாமல் அவனிடம் கொடுத்து ஏமாந்தாள்.
இன்று அவளின் நம்பிக்கைக்கு கிடைத்த வலிமையான வார்த்தையாகத் தோன்றிய அந்தச் செய்தி தந்த திசைக்குப் பாண்டியன் மாமாவையும் அழைத்துக் கொண்டு சுகுணா புறப் பட்டு விட்டாள்.
சுகுணாவின் தொடரும் வேதனைகளைப் பார்த்திருக்க விருப்பமின்றி கோமளம் அன்ரியும் அவளின் விருப்பப்படியே போய்த் தேடி, எங்கேயென்றாலும் எப்படியாவது அவனைக் கண்டு வந்தால் நல்லது தானே என்று எண்ணமிட்டாள்.
பாண்டியன் மாமாவும் சுகுணாவும் மோட்டார்ச் சைக்கிளில் ஏறிப் போன திசையைப் பார்த்திருந்த கோமளம் அன்ரிக்கு மனம் குளிர்ந்தது.
தனது வீட்டினருகில் நின்றவாறே, கோயில் இருந்த கிழக்குத் திசைக்குத் திரும்பி "நல்லூரானே இவளுக்கு ஒரு நல்ல முடிவைக் காட்டு! என்று வேண்டினாள்.
இந்த முறை சுகுணா சந்திக்கப் போகும் அந்தப் பெரிய மனிதன் மூலம் பலரும் விடுவிக்கப்பட்டு வெளிவந்ததாகப் பரவிய இரகசியச் செய்தியின் மீது அவர்கள் நம்பிக்கை கொண்டனர். பாண்டியனும் கோமளம் அன்ரியும் அந்த நம்பிக்கையில் உறுதியாகவே இருந்தார்கள்.
காலையில் புறப்பட்டுப் போன பாண்டியனையும் சுகுணாவையும் மாலையைக் கடந்தும் இரவைத் தொடர்ந்தும் கோமளம் அன்ரி எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கிறாள்.
நேரம் செல்லச் செல்லப் பரவும் செய்திகளோ அந்தக் கோமளம் அன்ரியின் நம்பிக்கையையும் கடந்து அந்தச் சிறிய கிராமத்தையே திடுக்குற வைக்கிறது. அவர்கள் திரும்பவில்லை!
நாள்கள் பலவாகியும் தம்பியைத் தேடிப் போன உறவுகளும் காணாமற் போகும் பெரும்துயரத்தைச் சுமந்தவாறு மௌனமாக அழுவோரின் குரல்கள் அதிகரித்துச் செல்வதாகவே தோன்றியது. கோமளம் அன்ரியோ சுகுணாவையும் அவளுடன் சேர்ந்து சென்ற அவளது கணவன் பாண்டியனையும் தேடும்புதிய படலத்தைத் தொடங்கியிருக்கிறாள்.
தொலைதலும் தேடலும் தொடர்கதை ஆகிப் போன யாதார்த்தத்தில் காணாமற் போனோரின் உறவுகள் முன்னெடுக்கும் ஆர்ப்பாட்டப் பேரணிகள் அர்த்தமற்றவை ஆகிப் போய்விட்டனவோ?
ஆனாலும் உறவுகளைத் தொலைத்தோரின் உணர்வுகளில் வெடிக்கும் வேதனைகளால் முகிழ்த்தெழும் ஆர்ப்பாட்டப் பேரணிகளில் மேலும் மேலும் கோமளம் அன்ரியும் கலந்து கொள்ளாமல் இருக்கப் போவதில்லை.
கோமளம் அன்ரி காணாமற் போகும் வரை...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இந்தன்**

**பத்து வருடங்களுக்கு முன்னால் எனது தாய் மரணம் அடைந்தார். இறப்பதற்குச் சில நாள்கள் முன்பாகவே அவர் விநோதமாக நடந்து கொள்ளத் தொடங்கினார்.**

# சாவின் கணங்கள்

டொக்டர்களிடம் அழைத்துச் சென்ற பிறகுதான் அவருக்கு மூளையில் கட்டி ஏற்பட்டிருப்பது தெரியவந்தது. ஆனால், அதற்கு முன்னதாகவும் அவர் வித்தியாசமாகத்தான் இருந்தார்.

இருட்டான, அமைதியான இடத்துக்குச் சென்று, பல போர்வைகளைச் சேர்த்து போர்த்திக்கொண்டு பந்துபோலச் சுருண்டு படுத்துக்கொள்வார். அவருக்குப் பக்கத்திலேயே 3 பூனைகள் அவரைக் கட்டிக்கொண்டு படுத்திருக்கும். இறப்புக்கு ஒரு வாரத்துக்கு முன்னால் அவருடைய கைகள் அசைவற்ற நிலைக்குச் சென்றதுமே எனக்குப் புரிந்துவிட்டது, அந்திமம் நெருங்கி விட்டதென்று. நம் அன்புக்குரியவரின் இறுதி நாள்களில் அவருடன் இருப்பது என்பது துயரம் நிறைந்தது. ஆனாலும், அதை அவர் அறியாத வகையில், முகத்தில் புன்னகை தரித்துக்கொண்டு, தேவைப்பட்டதையெல்லாம் நேரம் பார்த்துச் செய்துகொண்டிருக்கும் அனுபவம் வித்தியாசமானது. அவருடைய மூச்சு பிரிந்த பிறகு நொறுங்கி அழப்போகிறோம் என்றாலும், அதுவரை நம்முடைய சோகத்தை வெளிப்படுத்தாமல், இயல்பாக இருப்பது போலக் காட்டிக்கொள்ள வேண்டும்.

### அறிவிக்க வந்த கழுகுகள்

பெப்ரவரி மாதத்தில் ஒரு நாள் குடும்ப நண்பர்கள் சிலர் வீட்டுக்கு வந்தார்கள். என் தாயுடன் சில மணி நேரம் இருப்பதாக அவர்கள் உறுதி கூறியதால், சிறிது மாறுதலாக இருக்கட்டுமே என்று காரை எடுத்துக்கொண்டு இலக்கில்லாமல் நெடுஞ்சாலையில் ஓட்டினேன். அது குளிர்காலம் என்பதை வானம் காட்டியது. இயற்கைக் காட்சி, எளிமையான கவிதையாக என் முன் விரிந்தது.

எண்ணங்கள் ஏதோ ஒன்றையே சுற்றிச்சுற்றி வந்ததால், அக்சிலேட்டரைப் பலம்கொண்ட மட்டும் அழுத்திக் கொண்டேயிருந்தேன். திடீரென விழிப்படைந்து பெருமூச்சுவிட்டு, என் எண்ணச் சுழலை விரட்டினேன். சாலைத் திருப்பத்தில் வரிசையாக இருந்த உயரமான மரங்கள் கண்ணைக் கவர்ந்தன. சில விநாடிகளில் அவற்றில் ஏதோ ஒன்று என் பார்வையை ஈர்த்தது. மரக் கிளையின் உச்சியில் முதலில் ஒரு கழுகு தென்பட்டது. அடுத்து இன்னொன்று, அருகில் மற்றொன்று. ஒன்று, தன்னுடைய நீண்ட இறகை விரித்து மேலும்கீழும் அடித்துக்கொண்டது. இன்னொன்று, ஒரு சுற்றுச் சுற்றி அடுத்த மரத்தின் கிளையில் போய் அமர்ந்தது. மற்றொன்று, டென்னிசன் கவிதையில் வரும் மின்னலைப் போல செங்குத்தாகச் சட்டெனக் கீழே இறங்கியது. இரண்டு கழுகுகள் சிறிதுகூட அசையாமல் சிலையைப் போல உட்கார்ந்திருந்தன. இப்படியே மொத்தம் 9 கழுகுகள். அன்றைக்குத் திகதியும் பெப்ரவரி 9 தான்.

பிறகு வீட்டுக்கு வந்து சோபாவில் அமர்ந்தேன். அருகில் இருந்த என் அன்னை தன்னுடைய கடைசி மூச்சை இழுத்துவிட்டார். அதன் பிறகு ஏற்பட்ட நிசப்தம் என் விலாவைக் கத்திபோல ஊடுருவியது. அந்தக் கணத்தில் ஆழ்ந்த நிம்மதியும் அமைதியும் ஏற்பட்டது. இனி எந்த வேதனையும் அந்த உடலுக்கு இல்லை.

எனக்கு ஆன்மிக உணர்வுகள் கிடையாது. அவ்வப்போது இயற்கையில் என்னை இணைத்துக்கொண்டு, மன அழுத்தங்களைப் போக்கிக்கொள்வேன். அன்றிரவு மீண்டும் அந்தக் கழுகுகள் என் நினைவுக்கு வந்தன. அவை இயற்கையின் தூதாக என்னுடைய தாயாரின் இறப்பை எனக்கு அறிவிக்க வந்ததாகக் கருதினேன்.

நமக்கு மிகவும் பிடித்தவர்களின் இறப்பின்போதோ, அல்லது நினைவு நாளிலோ பிராணிகள் அல்லது பட்சிகள் நேரில் தோன்றும் என்பது பலருடைய நம்பிக்கை. செரில் ஸ்டிரேய்ட் என்ற நூலாசிரியை தனது தாயை இழந்த பிறகு, நரியைச் சந்தித்தது குறித்து வைல்ட் என்ற தன்னுடைய நினைவு நூலில் சுவைபட விவரித்திருக்கிறார்.

ஒரு பட்டாம்பூச்சி பறந்துவந்து உங்களுடைய முழங்கையில் உட்காருகிறது. எங்கோ மேய்ந்து கொண்டிருக்கும் மான் மேய்வதை நிறுத்திவிட்டு உங்களையே மருட்சியோடு பார்க்கிறது. இதுவரை நீங்கள் பார்த்தேயிராத நாய் ஒன்று வாலைக் குழைத்துக்கொண்டு எதையோ தெரிவிப்பதுபோல் உங்களை உரசிய படி சுற்றிச்சுற்றி வருகிறது. வீட்டுக்கு வெளியே கதவைத் திறந்தால் தெரியும் அணில், தோட்டத்துப் பக்கம் குரலெழுப்பும் சின்னப் பறவை என்று எதைப் பார்த்தாலும் அம்மாவின் முகம் அவற்றில் தெரிகிறது. அம்மா இதில் நீ ஏதாவ்தா? என்று உள்மனம் ஏக்கத் தோடு கேட்கிறது. இது முட்டாள் தனம்தான். ஆனால், அந்த நேரத்தில் அந்த நினைப்பே மனதுக்கு அளவற்ற ஆறுதலைத் தருகிறது.

### நம்பிக்கைகளின் உலகம்

மனிதர்கள் பல்வேறு ஜென்மங்களை எடுக்கிறார்கள் என்பது இந்துக்களின் நம்பிக்கை. பிராணிகள், பறவைகள் என்று பல பிறவிகள் எடுத்து மனிதர்களாகி பிறகு தெய்வத்தை அடைகிறோம் என்பார்கள். எகிப்தில் பூனைகளைப் புனிதமாகக் கருதுகின்றனர். கத்தோலிக்க மதகுருவான புனித பிரான்சிஸ் பிராணிகளுக்கும் சுவிசேஷத்தை அருளினார். அமெரிக்கப் பூர்வ குடிகள் ஓநாய்கள், கழுகுகள் போன்றவை தங்களை வழிநடத்துவதாக நம்பினார்கள்.

தங்களால் பார்க்க முடியாததை பிராணிகள் மூலம் அறிய மனிதர்கள் விரும்புகிறார்கள். நம்மைச் சேர்ந்தவர்கள் மறைந்தாலும் அவர்கள் விட்டுச் சென்ற ஏதோ ஒன்று, நம்மைச் சுற்றியுள்ள ஏதோ ஒன்றில் கலந்து தொடர்ந்து வாழ்கிறது. பிராணிகளின் பார்வையிலும் சைகையிலும் ஏதாவது தகவல் இருக்குமோ? நெருங்கியவரின் மரணத்துக்குப் பிறகு சோகத்தில் மூழ்கியிருக்கும்போது நம்முடைய காரண அறிவு சற்றே விலகிவிடுகிறது. யார் எதைக் கூறினாலும் ஏற்கும் மனநிலையில் இருக்கிறோம். துக்கம் அனுஷ்டிப்பவர் மிகவும் புனிதமானவர். இவ்வுலக வாழ்க்கைக்கு அப்பால் என்ன என்ற தேடுதலில் இருப்பவர் அவர் என்று குறிப்பிடுகிறார் பௌத்த குரு தாரா பிராச்.

துக்கப்பட்ட வேளையில், சோகத்தை இறக்கி வைக்க ஆறுதலாக ஒரு தோள் தேவைப்படுகிறது. அது அருகில் இருக்கும் எந்த உயிரினம் மூலமாக இருந்தாலும் அற்புதமான வரமாகவே தோன்றுகிறது. அந்த 9 கழுகுகளை என்னுடைய தாயே அனுப்பியிருக்கக் கூடும் என்ற நினைப்பே மனதை ஆறுதலாக வருடுகிறது. ஒருவேளை என் நம்பிக்கை பொய் என்றாலும், அந்தக் காட்சிக்காகவும் அந்த நினைப்புக்காகவும் அந்த கழுகுகளுக்கு நான் நன்றிக் கடன்பட்டிருக்கிறேன் - என்னிடம் கொடுக்க ஏதும் இல்லாவிட்டாலும்!



**எனக்கு ஆன்மிக உணர்வுகள் கிடையாது. அவ்வப்போது இயற்கையில் என்னை இணைத்துக்கொண்டு, மன அழுத்தங்களைப் போக்கிக்கொள்வேன். அன்றிரவு மீண்டும் அந்தக் கழுகுகள் என் நினைவுக்கு வந்தன.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ருத்ரய்யா:

# அவர் அப்படித்தான்!



- கே. ராஜேஸ்வர்

சென்னை தரமணி திரைப்படக் கல்லூரியில் எனக்கு சீனியராக இருந்தவர் ருத்ரய்யா. 1974-75 இல் அவரை நான் சந்தித்தேன். இடதுசாரிச் சிந்தனைகளும், சர்வதேச சினிமாக்கள் மீதான பிரியமும் எங்களை இணைத்தன. அந்தக் காலகட்டத்து சினிமா மாணவர்கள் எல்லோரையும் பிரெஞ்சு புதிய அலை சினிமா ஈர்த்திருந்தது. திரைப்படக் கல்லூரி என்பது வெறுமனே வணிகப் படங்களை உருவாக்குபவர்களுக்கான இடம் அல்ல. அது மாற்று சினிமாவுக்கான உத்வேகத்தைக் கொடுக்கும் தளம் என்ற அபிப்பிராயம் எங்கள் இரண்டு பேருக்கும் இருந்தது.

ருத்ரய்யாவுக்கு அதற்கான வாய்ப்புகளும் அமைந்தன. இயக்குநர் அனந்து அவருக்குப் பக்கபலமாக இருந்தார். வணிக சினிமாவில் பணியாற்றினாலும், அனந்து சினிமாக் களஞ்சியமாக இருந்தார். திரைப்பட விழாக்களுக்குச் சென்று ஆர்வத்தோடு படங்களைப் பார்த்துவந்தவர் அவர். வெறுமனே ஒரு திரைக்கதையை விவாதிப்பதோடு மட்டுமல்லாமல், அதற்கும் மேலான நிறைய உதவிகளைச் செய்பவராக இருந்தார். அதனால்தான், அவள் அப்படித்தான் படத்தையே ருத்ரய்யா அனந்துவுக்குச் சமர்ப்பணம் செய்தார்.

ருத்ரய்யாவுக்கு முதலில் கதைகள் அமையவில்லை. நான் ஆவணப்பட, விளம்பரப்பட உலகில் இருந்தேன்.



அதன் பின்னணியிலிருந்து அவள் அப்படித்தான்கதைச் சுருக்கத்தை இரண்டு பக்கத்தில் எழுதிக்கொடுத்தேன். அனந்துவுக்கு எனது கதைச்சுருக்கம் பிடித்திருந்தது. ரஜினி எனற நட்சத்திர பலத்துக்காகச் சில மாற்றங்களைச் செய்தார் அனந்து. கதாநாயகியின் ஃப்ளாஷ்பேக்கை வண்ண நிலவன் எழுதினார். அவள் அப்படித்தான் படத்தலைப்பையும் அனந்துதான் வைத்தார்.

தி. ஜானகிராமனின் அம்மா வந்தாள் நாவலைத் தான் ருத்ரய்யா முதலில் படமாக எடுக்கத் தீர்மானித்திருந்தார். கமல்ஹாசனும் அந்தக் கதையில் நடிப்பதற்கு மிகுந்த ஆர்வத்துடன் இருந்தார். முதலில் ஒரு வணிகப் படத்தை எடுத்துவிட்டு, இரண்டாவதாக அம்மா வந்தாள் படம் என்று முடிவுசெய்தோம். அவள் அப்படித்தான்அறிவிப்புடன் சேர்ந்தே அம்மா வந்தாள் படத்துக்கும் அறிவிப்பு கொடுத்தோம்.

## கலைஞர்களின் ஒத்துழைப்பு

அவள் அப்படித்தான் படத்தில் நடிகராக மட்டும் அல்ல, தொழில்நுட்பக் கலைஞராகவும் கமல் எல்லாவிதமாகவும் ஒத்துழைப்பு கொடுத்தார். ரஜினியும் மிகவும் குறைந்த சம்பளம் வாங்கிக்கொண்டு நடித்தார். வித்தியாசமான ஒரு அணி படம் எடுப்பதற்காக வந்திருக்கிறார்கள்; அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று எல்லோரும் ஒத்துழைத்தார்கள். நல்லுசாமி-ஞானசேகரன் ஒளிப்பதிவும் மிகவும் துணிச்சலானது. நிழலுருவக் காட்சிகளை (சில்ஹவுட்) குறைவான வெளிச்சத்தில் நிறையப் பரீட்சார்த்தம் செய்து எடுத்திருப்பார்கள். அந்த வருடத்தில் வெளியான படங்களில் பெரும்பாலானவை வண்ணப் படங்களே. பொருளாதாரச் சிக்கனத்துக்காகவே கறுப்பு-வெள்ளையில் படம்பிடித்தோம். ஆனால், அதுவே அந்தப்படத்தின் சிறப்பம்சமாக இப்போது உணரப்படுகிறது.

படத்தின் வசனங்களையும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். யதார்த்தத்துக்கும் நாடகத் தன்மைக்கும் இடையில் தர்க்கவாதம்போல வசனங்கள் கூர்மையாக இருக்கும். அதற்கு பெரும் வரவேற்புக் கிடைத்தது. பட வெளியீட்டின்போது மிகப் பெரிய சோதனையை அவள் அப்படித்தான் சந்தித்தது. வெளியான ஒரு வாரத்தில் அனைத்துத் திரையரங்குகளிலிருந்தும் படப் பிரதி திரும்பி வந்துவிட்டது. ஆறு மாதம் கழித்து அந்தப் படத்தை சென்னை சஃபையரில் காலைக் காட்சியாக மட்டும் நான் வெளியிட்டேன். மிருணாள் சென் அந்தப் படத்தைப் பாராட்டியிருந்தார். தமிழில் இப்படியான படம் வந்தது ஆச்சரியம் என்று சொல்லியிருந்தார். பாரதிராஜாவும் ஒரு பேட்டி கொடுத்திருந்தார். எந்த மாதிரியான வேட்கைகளுடன் தேடலுடன் நான் சினிமாவுக்கு வந்தேனோ அதைத் திரும்பிப் பார்க்க வைத்தது அவள் அப்படித்தான் என்றார் அவர். பாரதிராஜா, மிருணாள் சென் இருவரது பேச்சையும் விளம்பரப்படுத்திப் படத்தை வெளியிட்டோம். நிறையப் பேர் வரத் தொடங்கினார்கள்.

## உடலைச் சுட்ட படைப்பு

இந்தப் படத்தை எடுத்ததில் ருத்ரய்யா பொருளாதார விஷயத்தில் நிறையப் பாதிக்கப்பட்டார். ஒரு பத்திரிகை நேர்காணலில் அவரிடம் அவள் அப்படித்தான் படத்தின் மூலம் கையைச் சுட்டுக் கொண்டீர்களா? என்ற கேள்விக்கு, உடலையே சுட்டுக்கொண்டேன் என்று பதில் சொல்லியிருப்பார். ஆனாலும், அவள் அப்படித்தான் படம் மூலம் அவருக்குத் திரையுலகில் ஆதரவுகளும் குவிந்தன. ஒரு படைப்பு உடனடியாக மக்களைக் கவராவிட்டாலும், பொருளாதார ரீதியாகப் படைப்பாளிக்கு லாபத்தைத் தராவிட்டாலும், அது நல்ல படைப்பாக இருந்தால், காலம் கடந்து ஏற்றுக்கொள்ளப்படும் என்பதற்கு உதாரணம் அவள் அப்படித்தான்.

சுஜாதாவின் 24 ரூபாய் தீவு கதையில் நடிக்க கமல்ஹாசன் உடனடியாக நேரம் கொடுத்தார். ஆனால் படம் ஒரு பாட்டுடன் நின்றுபோனது. அடுத்து ராஜா என்னை மன்னித்துவிடு. அதற்கும் நாயகன் கமல்ஹாசன்தான். அறிவிப்போடு நின்றுவிட்டது. அதற்குப் பிறகுதான் கிராமத்து அத்தியாயம். இளையராஜா, பஞ்சு அருணாசலம் போன்றோரின் முழு ஒத்துழைப்பு இருந்தாலும், ருத்ரய்யாவிடம் எதிர்பார்க்கப்பட்ட தரத்தில் அந்தப் படம் வரவில்லை.

அதற்குப் பிறகு கொஞ்ச நாள்கள் கழித்து 1983-84-ல் திரும்பவும் படம் செய்ய வேண்டும் என்று திட்டமிட்டு, ரஜினியைக் கதாநாயகனாக இதை மனதில் கொண்டு, கடலோரக் கிராமத்தை மையமாக வைத்து ஒரு கதையை எழுதினேன். ருத்ரய்யர் நினைத்ததுபோல நட்சத்திரங்கள் கிடைக்கவில்லை. அந்தக் கதைதான் பின்னர் பாரதிராஜா இயக்கத்தில் கடலோரக் கவிதைகள் படமாக வந்தது.

சிவாஜி கணேசனை பீஷ்மர் கதாபாத்திரமாக்கி 3-டி தொழில்நுட்பத்தில் மகாபாரதக் கதையை எடுக்க விரும்பினார். அதுவும் சாத்தியமாகவில்லை. ரகுவரனை வைத்து டிஎஸ்பி 7, சுஜாதா கதை - திரைக்கதை. அதுவும் பூஜையோடு நின்றுவிட்டது.

## தோல்வி அடைந்த முயற்சிகள்

நீண்ட இடைவெளிக்குப்பின், ஷேக்ஸ்பியரின் ரோமியோ-ஜூலியட் கதையை தற்காலச் சூழலில் ஒரு திரைப்படமாக எடுக்கலாம் என்று முடிவுசெய்தோம். ஏ.ஆர். ரஹ்மான்தான் இசை என்று முடிவுசெய்தோம்.



வைரமுத்துவிடமும் பேசினோம். ஒளிப்பதிவாளராக பி.சி. ஸ்ரீராமை முடிவுசெய்து, அவரைத் தொடர்புகொண்டோம். அவர் 6 மாதம் கழித்துச் செய்யலாம் என்றார். நாங்கள் ஒப்புக்கொண்டோம். ஆனால், வணிகரீதியில் சிலரைச் சந்திக்க வேண்டியிருந்தது. அதை ருத்ரய்யா விரும்பவில்லை. அந்தத் திட்டம் கைவிடப்பட்டது. சினிமாவின் வணிகரீதியான நடைமுறைகளில் அவர் தொடர்ந்து முரண்பாடுடையவராக இருந்தார். அதனாலேயே நிறைய வாய்ப்புகளைத் தவறவிட்டார். ஒரு இடதுசாரி சினிமாக்காரராக சினிமாவை ஆயுதம் என்று நம்பியவர் அவர். அபூர்வமான மனிதர். தமிழ்ச் சினிமாவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டிய, நிறைய நல்ல படைப்புகளைத் தந்திருக்க வேண்டிய இயக்குநர் ருத்ரய்யா. அந்த வாய்ப்பைத் தமிழ் சினிமாவும் இழந்துவிட்டது; அவரும் இழந்துவிட்டார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலைக்கனவு பலிக்குமா?



**டொக்டர்.எம்.கே.முருகானந்தன்.**
MBBS(Cey), DFM (Col), FCGP (col)
**குடும்ப மருத்துவர்**

**(சென்ற வாரத் தொடர்ச்சி)**

கனவுலகின் இயல்புகளையும் அவை எவ்வாறு மூளையின் செயற்பாடாக பிரதிபலிக்கிறது என்பதையும் எளிமையானதும் தனித்துவம் வாய்ந்ததுமான இந்தத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி பரிசோதிக்க முடிந்தது.

ஆனால், தெளிவான கனவுகள் காண்பவர் களாகச் சொல்லப்பட்டு இத்தகைய ஆய்வுகளில் உட்படுத்தப்பட்டவர்கள், உண்மையில் தூங்கவில்லை கனவு காணவில்லை, வெறுமனே தளர்ந்திருந்தார்கள் என அல்லது அவர்கள் கனவு காண்பதாக ஏமாற்றினார்கள் என ஆரம்ப கட்டங்களில், வேறு அறிஞர்கள் குற்றம் சாட்டினார்கள். மின்வாய்கள் மூலம் மூளையின் செயற்பாட்டைத் துல்லியமாகக் கண்டறிய முடிந்ததில் இதன் உண்மைத் தன்மை நிரூபணமானது.

**அது எத்தகைய உண்மை?**

தெளிவான கனவு காணும் தருணத்தில் மூளையின் செயற்பாடானது துரித கண் இயக்க நிலையின் அம்சங்களையே கொண்டிருந்தது என்பது நரம்பியல் உளவியல் நிபுணர்களான உர்செல்லா வோஸ், மார்ட்டின் ட்ரெஸ்லீர் ஆகியோர் செய்த ஆய்வுகளின் மூலம் அறியப்பட்டது.

அது மாத்திரமல்ல தெளிவான கனவுகளின் போதான மூளையின் செயற்பாடானது தனித்துவமானது. அது சாதாரண தூக்கம், ஏனைய கனவுகள், மற்றும் நனவு நிலை ஆகியவற்றின் போதான மூளையின் செயற்பாட்டிலிருந்து முற்றிலும் மாறுபட்டது என்பதைக் கண்டறிய முடிந்தது.

**காலைக் கனவு பலிக்கும் என்று நம்புவோர் இன்னமும் பலர் எம்மிடையே இருக்கிறார்கள். காலைக் கனவுகள் முற்கூறிய தெளிவான தூக்கத்தில் தோன்றுவதாலேயே நினைவில் நிற்கின்றன. ஆனால் அது பலிக்கும் என நம்புவது அர்த்தமற்ற நம்பிக்கையே.**

கனவுகள் பற்றிய வேறு சில ஆய்வுகள் சுவாரஸ்யமானவை. முன் ஏற்பாடு செய்யப்பட்ட சில செயல்களை துரித கனவுகள் காணும் வேளையில் செய்வித்து, அதே செயற்பாட்டை விழிப்பு நிலையில் செய்ய வைத்து ஒப்பீடு செய்து பார்த்தனர். உதாரணமாக ஒன்று இரண்டு மூன்று என எண்களை எண்ணும் செயற்பாடானது கனவு நிலையிலும் நினைவு நிலையிலும் ஒரே வேகத்தில் நடைபெறுவதை அறிய முடிந்தது. எண்ணுவது என்பது மனத்தின் செயற்பாடு மட்டுமே அதில் உடலின் செயற்பாடு இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் படி ஏறுவது, நடப்பது, எளிமை யான உடற் பயிற்சிகளைச் செய்வது போன்ற உடலின் செயற்பாடுகள் கனவு நிலையின் போது நீண்ட நேரம் எடுத்தன.இதற்குக் காரணம் என்ன? உணர்திறன் சார்ந்த பின்னூட்டு (sensory feed back) வழமைபோல் இல்லாததே என ஆய்வாளர்கள் கருத்து தெரிவித்தனர்.

**உணர்திறன் சார்ந்த பின்னூட்டு**

நாம் நடக்கும்போது அது பற்றி சிந்திப்பதில்லை. ஆனால் நாம் கால் வைக்கும் தரையானது வழமையானதா வழுவழுப்பானதா ஏற்ற இறக்கங்கள் நிறைந்ததா, பாதங்களைக் குத்தக் கூடிய கல், முள் போன்றவை உள்ளதா போன்ற பல விடயங்களை எமது பாதங்களின் சருமம் பகுத்துணர்ந்து அதை மூளைக்குச் செய்தியாக அனுப்புகிறது. நடக்கும் தரை ஆபத்தனது அல்ல என்ற செய்தி கிடைத்ததும் கால்கள் வேகமாக நடக்கும்.



நினைவு நிலையில் உணர்திறன் சீர்மையுடன் செயற்படுகிறது. ஆனால் கனவு நிலையில் இத்தகைய உணர்திறன் வழமைபோல இல்லாததாலேயே கனவு நிலையில் உடற் செயற்பாடுகள் வேகங் குறைகின்றன. இதனால்தான் தெளிவான கனவு நிலையின் போதும் மனிதர்களால் நினைவு நிலை போல இயங்க முடிவதில்லை.


அது சரி கனவுகள் பற்றிய ஆய்வுகளால் பயன் என்ன? நினைவுலகின் ஏனைய தளங்களில் சஞ்சரிப்பதற்கு கனவுகள் பற்றிய ஆய்வின் தொழில்நுட்பங்களை பயன்படுத்துதல் நியூ ஏஜ் மூவ்மெண்ட் போன்ற இயக்கத்தினர் ஆர்வம் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. ஆன்மீக உலகில் நவீன விஞ்ஞான அறிவின் தாக்கம் எவ்வாறு அமையும் என்பது பொறுத்திருந்து பார்க்க வேண்டியதே.

தெளிவான கனவுலகில் நீந்துவதை ஊக்குவிப்பதற்கு மருந்துகளை உபயோகிக்கும் ஆபத்தான செயலில் இறங்குபவர்களும் இருக்கிறார்கள். பார்க்கின்சன் நோய்க்கு பயன்படுத்தும் சில மருந்துகள் பகற் கனவுகளில் ஆழ்த்தும் பக்கவிளைவு கொண்டதால் அதனைப் பயன்படுத்த முனைகிறார்கள்.

**தூக்கத்தில் உளறுதல்**

இதுவும் பெரும்பாலும் கனவுலகின் செயற்பாடுதான். மேற் கூறிய தெளிவான கனவுகளின் போது வரலாம். ஆனால் மன அழுத்தம், மனச்சோர்வு, நித்திரைக் குறைபாடு போன்ற பிரச்சினைகளிலும் ஏற்படலாம். கடுமையான காய்ச்சல் மதுப் பாவனையின் பின்னரும் தூக்கத்தில் சிலர் உளறுவார்கள்.

காலைக் கனவு பலிக்கும் என்று நம்புவோர் இன்னமும் பலர் எம்மிடையே இருக்கிறார்கள். காலைக் கனவுகள் முற்கூறிய தெளிவான தூக்கத்தில் தோன்றுவதாலாயே நினைவில் நிற்கின்றன. ஆனால் அது பலிக்கும் என நம்புவது அர்த்தமற்ற நம்பிக்கையே.



## உணர்வின் ஊற்று - 25

வாசகர்களே! நீங்கள் கவிதை எழுத விரும்பு பவர்களா? அப்படியா யின் உங்களுடைய கவி யாற்றலுக்கு ஒரு சவால். இந்தப் பகுதியில் பிரசுரமாகியிருக்கும் ஒளி ஓவியத்தை பார்க்கும்போது உங்கள்மனதில் எழும் உணர்வுகளை 10 வரிக்குள் கவிதையாக்கி அனுப்புங்கள்.

**அனுப்பவேண்டிய முடிவுத் திகதி : 23.12.2014** தரமானவை பிரசுரிக்கப்படும்.

முகவரி : **உணர்வின் ஊற்று - 25**

**சுடர் ஒளி** 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2ஆம் ஆண்டில் வெற்றிகரமாக உங்கள் வீட்டு சஞ்சிகை
டிசம்பர் மாத இதழ் வெளிவந்துவிட்டது




ரூபா 60

அரசியலோ பாலியலோ கலக்காத ஒரு பரிணாமப் படைப்பு

நுழைவாயில்

- அடிமை ஏற்றுமதி (300 சடலங்கள்)
- O/L பரீட்சைக்கு தயாராவது எப்படி?
- தன்னம்பிக்கை வென்றது
- முயற்சி திருவினையாக்கும்
- மணவாழ்வில் மணம்வீச
- ரொமான்ஸ் இரகசியம்
- காதற் சுவை
- விந்தை உலகம்
- உறவுகள் சுகமானது
- மீனாத்துயரம்...
- மலாலை ஜோயா
- அர்ப்பணிப்புடன்...
- அழகான கால்களுக்கு
- வலைக் கீச்சுக்கள்
- பயம்
- கிழவனின் குதிரை
- இருட்டில் வைத்த குறி
- புரிதல்
- நீங்கள் நலமா?
- திருடன் போலீஸ்
- உங்களுக்குத் தெரியுமா?
- ஆசிரியப் பணியில்
- ஐம்பதிலும் ஆசைவரும்
- சுவர்களை உடையுங்கள் பாலங்களை உருவாக்குங்கள்
- வாசகர் வாழ்த்துக்கள்
- கிறிஸ்மஸ் ஸ்பெஷல்!
- பாலைவனத்து ஒட்டகம்
- அம்முவின் கேள்வி - பதில்
- டிசம்பர் மாத இராசிபலன்
- குழந்தைகளும் நோய்களும்
- ஹொங்காங்கில் என்னதான் பிரச்சினை?
- 28 வருடங்களுக்குப்பின் மீண்டும் ஸ்ரீதேவி
- தோல் சுருக்கத்தைப் போக்க...
- முதலாம் ஆண்டு நிறைவு சிறப்புப்பக்கம்
- உலகம் கொண்டாடும் கிறிஸ்மஸ்

போட்டிகள்
- விளையாட்டு அறிவுப் போட்டி
- குறுக்கெழுத்துப் போட்டி
- 130,000/= வினாவிடைப் போட்டி
- வர்ணம் தீட்டும் போட்டி (முன்பள்ளி)
- பல்திறன் அறிவுப் போட்டி (தரம் 4, 3)

இன்னும் பல சுவாரஸ்யமான அம்சங்களுடன் தற்பொழுது அமோக விற்பனையில்

உங்கள் பிரதிகளை பத்திரிகை முகவர்களிடமும் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

விநியோகத் தொடர்புகளுக்கு: 0718 628379 / 011 5737592
விளம்பர தொடர்புகளுக்கு: 078 8864730 / 0787 273035






விரையுங்கள் !
இம்முறை நத்தாருக்கு இல்லங்களை அலங்கரிக்க
லங்காடைல்ஸ் வழங்கும் 15% இலிருந்து விலைக்கழிவுகள்

சகல லங்காடைல்ஸ் காட்சியறைகளிலும் நாடெங்குமுள்ள விற்பனை முகவர்களிடமும் பெறலாம்.

LANKATILES

இச்சலுகை கையிருப்பிலுள்ள வரை மட்டுமே.
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.



i3s Technology

ஸ்ப்ளெண்டர் ஐ ஸ்மார்ட் ஒரு மிடுக்கான தெரிவு

Hero



splendor iSmart
It's Smart Thinking

STOPS STARTS SAVES GREEN EFFICIENCY

5 WARRANTY*
*Warranty for a period of 5 years or 70,000 kms from the date of purchase, whichever is earlier. Conditions apply.

- வசதியான பவர் ஸ்டார்ட்
- கவர்ச்சிகரமான வடிவமைப்பு
- சிறந்த எரிபொருள் சிக்கனத்துடன் கூடிய HTOV என்ஜின்
- கறுப்பு எலோய் வீல்

ரூ. 194,990

*நிபந்தனைகளுக்குட்பட்டது

☎ : 011 5777000 மேலதிக ஸ்மார்ட் விபரங்களுக்கு அருகிலுள்ள அபான்ஸ் ஹீரோ காட்சியறைகள் மற்றும் ஹீரோ விற்பனை முகவர்களிடமும் பெறலாம். Abans











இல்லாவிடில், உங்களுக்கென்ற வாகனத்தை ஓட்டுகின்றீர்களா?



- ரூபா.100,000 இற்கான குறைந்த தவணைக் கட்டணம்
- உள் ஈட்டு விகிதத்திற்கு அமைவான வட்டி விகிதம்
- குத்தகை ஒப்பந்தத்தின் தொகை முற்கட்டணமாக செலுத்தப்பட்டிருப்பின் கவர்ச்சிகரமான சலுகைகள்
- மறைநிலை கட்டணங்கள் அறவே இல்லை
- ஆகக்குறைந்த ஆவணங்கள்
- ஒரு நாள் சேவை வசதி
- இலகுவான சேவைகள்
- உங்களின் தேவைகளுக்கு ஏற்ற தீர்வு

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் - 0112 515 100/101
சேவை மையம் அழைப்பு இலக்கம் - 0112 832 577

SDBL சனச அபிவிருத்தி வங்கி பீஎல்சீ
தேசத்தின் முன்னோடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை கொழும்பு - 6, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் எண்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால், 2014 டிசெம்பர் 03ஆம் திகதி வெளியிடப்பட்டது.